Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්  ஜூன்.10-16, 2001  ரூபா 13/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 411

# புதிய அபாயங்களை எதிர்வு கூறும்

# புலிகளின் எச்சரிக்கை



# முரசம்

## தமிழர்களின் மூளைக்கு வைத்த தீ!

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

1981ம் ஆண்டு ஜூன் மாதம்
முதலாம் திகதி ஆசியாவின்
மிகப்பெரும் நூலகங்களில் ஒன்றும்
தமிழ் மக்களின் பெருமை மிகு
அறிவுக்களஞ்சியமுமான
யாழ்.பொது நூலகம் அதன்
தொண்ணூற்றெட்டாயிரம்
புத்தகச் சேகரிப்புகளுடனும்
தேடற்கரிய சுவடிகளுடனும்
எரித்து சாம்பலாக்கப்பட்டது.

அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி
ஆட்சியாளர்களின் பூரண ஒத்துழைப்புடன்
மனித குலத்துக்கே அவமானமாக
அமைந்த இந்தப் பண்பாட்டுப்
படுகொலை அரங்கேற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மாவட்ட
அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல்கள்
நடைபெறவிருந்த சமயத்தில்
சட்டத்தையும் ஒழுங்கையும்
பாதுகாக்க வேண்டியவர்களாலேயே
தமிழ் மக்களின் மூளை எரிக்கப்பட்டது!

தமிழ் மக்களின் புலமை
குறித்து பொறாமைத் தீ நீண்டகாலமாகவே
தென்னிலங்கையின் சிங்களப்
பேரினவாதிகளிடம் இருந்து வரும் ஒன்று!

தமிழர்களின் அறிவுக்கண்ணை
பிடுங்குவதற்காக பேரினவாதம்
காலத்துக்குக் காலம் தன்னாலான
முயற்சிகளை செய்து வந்திருக்கிறது.
வடபகுதி மாணவர்களின்
பல்கலைக்கழக நுழைவை
கட்டுப்படுத்துவதற்காக தரப்படுத்தல் முறை
கொண்டுவரப்பட்டது.

பின்னர் இந்த பிரபஞ்சத்தின்
அறிவுப்பசி முழுவதுக்கு மென்றாலும்
தீனி போடக்கூடிய அரும்பெரும்
பொக்கிஷங்களை தன்னகத்தே
கொண்டிருந்த யாழ். நூலகம்
அக்கினிக்கு இரையாக்கப்பட்டது.

தமிழர் இதயங்களில் இதுவோர்
ஆறாத காயம்!
இந்தக் கொடுமை நிகழ்த்தப்பட்டு
இரண்டு தசாப்தங்கள்
கடந்துவிட்டன.
இடைப்பட்ட காலத்தில்
யாழ்.பொது நூலகத்தை
மீளமைப்பதற்காக
மேற்கொள்ளப்பட்ட
எந்தத்திட்டமும் பூரணத்துவம்
பெற்றதாகக் கூறுவதற்கில்லை.

'எரித்துவிட்டார்கள்' என்பதை
மட்டுமே இனிவரும்
காலங்களிலும் சொல்லிக்கொண்டிருப்பதில்
பயனில்லை;
அதனை முழுமையாக
மீளமைப்புச் செய்து
மீண்டும் உயிரளிக்கப்பட
வேண்டும்!

இந்தப் பண்பாட்டுப் படுகொலையைச்
செய்தவர்களில் சிலருக்கு காலம்
தண்டனை கொடுத்துவிட்டது!
ஆனால் இதனுடன்
சம்பந்தப்பட்ட பலர்
இன்றைக்கும் ஊருக்கு
உபதேசித்துக் கொண்டு
உயர் பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

அவர்களது முகமூடிகள்
கிழிக்கப்பட்டு தமிழ்
மக்களுக்கு எதிரான இந்தக்
கொடுமையின் பங்காளிகள்
சகலரும் உலகுக்கு
இனங்காட்டப்படவேண்டும்.

தமிழ் மக்களின்
இதயங்களுக்கு தீ மூட்டிய
சூத்திரதாரிகளை சட்டம்
மன்னிக்குமென்றால்
அவர்களை மன்னித்த
குற்றத்துக்காக என்றோ ஒருநாள்
சட்டம் தண்டனை பெறும்!

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## ஆன்மீக முயற்சியாளன்



இறைவனே நேரில் வந்து இந்த ஞானம் என்ற கல்வியை அளித்தாலும், மானிடர்கள் உயர் நிலையை அடைவதற்கான தீவிர முயற்சியில் ஈடுபடுவதில்லை. ஆன்மீக முயற்சியாளன் என்ற சொல்லின் பொருளை தவறாக இன்று உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் தமது ஆத்மீக முன்னேற்றத்தில் அக்கறைகொண்ட முயற்சியாளன், ஒருமுறை செய்து விட்ட தவறினை மீண்டும் மறுமுறை செய்யமாட்டான். ஆனால், இன்றோ சிலர் அடிக்கடி தவறுகளைச் செய்துவிட்டு, பின்னர் அத்தவறினைச் சுட்டிக்காட்டினால் அவர், "நான் என்ன செய்வேன்? என்னையும் அறியாமல் தவறு ஏற்பட்டுவிட்டது. நானும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவன் தானே!"

இவ்விதம் அவர்கள் தங்களின் வாழ்வை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்குப் பதிலாக, தம்மிடமுள்ள தீய குணங்களைக் களையும் முயற்சியில் போராடிப் போராடி கடைசியில் வெற்றியடையாமல் களைத்து விடுகிறார்கள். இவ்விதமான அவர்கள் தமது சோம்பேறித்தனத்தாலும், கீழான நிலையின் காரணமாகவும், பற்பல பிறவிகளுக்காக தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொண்டு இறைவனிடமிருந்து தூர விலகிச் சென்று விடுகிறார்கள்.

'ஓம் சாந்தி'

பி.கு.விக்கி, கல்முனை.

## தர்மம்

ஒவ்வொரு முஸ்லிமும் தருமம் செய்வது கடமையாக்கப்பட்டிருக்கிறது என்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸஹாபாக்கள் "ஒருவனுக்கு தருமம் செய்வதற்கு வழிவகையில்லை என்றால் என்ன செய்வது?" என வினவினர்.

"உடலால் உழைத்து தனக்கும் பிறருக்கும் நல்லதைச் செய்யலாம்" என பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். இதற்கு "உடலில் சக்தி இல்லையென்றால்?" என்று மீண்டும் கேட்கப்பட்டது. அப்போது "கொடுமைப்படுத்தப்பட்டவனுக்கு ஒத்தாசை செய்யுங்கள்" என்றார் "இதுவும் சாத்தியமில்லை என்றால்?" என்று மறுபடியும் தோழர்கள் வினவினார்கள். "சிறப்பானவற்றை அல்லது நன்மையானவற்றை செய்யுமாறு மக்களை ஏவுங்கள்" எனக் கூறினார்கள். "இதுவும் முடியாவிட்டால் என்ன செய்வது?" என்று தோழர்கள் வினவியபோது "தீமையை விட்டும் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். இதுவும் ஒரு தருமம் தான்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உரைத்தார்கள்.

ஆதாரம்: புஹாரி முஸ்லிம்

எம்.ஐ.எம்.அஸாத்-வெள்ளைமணல்.

## 'பரிசுத்தமாய் வாழக் கடவோம்

"ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது. ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன்."

சங்கீதம் 84:10

இதுவே என் விருப்பம். வாசற்படியில் காத்திருப்பதையே விரும்புகிறேன். ஆகவே நாங்கள் இரு புறமுமாய் திரும்பும் பக்கம், வாழ்ந்து வருவது தவறு. ஒரே வாழ்க்கை சத்தியமான வாழ்க்கை, தேவனுக்குக் கீழ்ப்படிந்த வாழ்க்கை வாழ வேண்டும். ஆகாமியக் கூடாரங்களில் வாசமாய் இருப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய வாசற்படியில் காத்திருப்பதே நல்லது.

இரட்டை வேடம் தரித்த வாழ்க்கை வாழுவது தவறு. வாயினால் ஒன்றும், உள்ளத்தினால் ஒன்றும் வெளிவேடம் தரித்தவர்களாய் வாழ வேண்டாம். அது மன மேட்டிமையினால் வருவது. மன மேட்டிமை ஒரு நாளும் இயேசு கிறிஸ்துவுக்கு முன் வெற்றி பெறுவதில்லை. ஒரு நாள் அது தோல்வியைச் சந்திக்கும். ஆகவே தேவனுடைய கட்டளைகளை கைப்பற்றினவர்களாக, கீழ்ப்படிவுள்ளவர்களாக உண்மையோடும், நீதியோடும் பரிசுத்தமாய் வாழக்கடவோம்.

கு.தவநாதன் டானியல் அஜந்தன்-இலண்டன்.

## கவிதைப் போட்டி இல.411



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.06.2001

கவிதைப் போட்டி இல.411
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### தாய்

அன்பு வைத்தாய்,
அரவணைத்தாய்,
இடம்பெயர்ந்தாய்,
மீளாத்துயரிலாழ்ந்தாய்,
செயலிழந்தாய்,
செய்திறனும் இழந்தாயே!

ஏ.ராசேந்திரன்-கீளியன் குடியிருப்பு.

### போதும்

பொன்னும் வேண்டாம்
பொருளும் வேண்டாம்
போரது ஓய்ந்து
மெய்யான சமாதானம்
மலர்ந்து நிலைத்திட்டால்,
அகதி எனக்கு
அதுவே போதும்!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### காத்திருப்பு...!

ஷெல் சத்தம்
கேட்கின்றது...!
சென்ற கணவன்
திரும்பவில்லையே..!
பாவம்-காத்திருக்கும் இவள்
அறிவாளா..!
அவன் இறந்துவிட்ட
சேதியை....!

கலைப்பிரியன் வேணு-
பெரியநீலாவணை-01.

## பரிசுக்குரிய கவிதை

### கவிதைப் போட்டி இல.408

### கலக்கம்!

ஏழைத் தாயவளின்
ஏக புத்திரனோ...
தாக சாந்திக்காய்
தண்ணீர் கொண்டுவரப்
போன வழியினிலே
பொறிவெடியில் பட்டதுகேட்டு
பொன்னம்மாவோ இங்கு
பொறிகலங்கி நிற்கின்றாளோ??

காரைதீவு சிவம்-குருக்கள்மடம்.



### தாய் நாடு

சொல்ஹெய்ம்-கட்டிய
சமாதான-மேடை
மாவனல்லையில்-சாம்பல்
மேடையான-தோ
சிறுபான்மை-எமக்கு
பெருமூச்சுதான்-தாய்நாடோ!

பாத்திமா ரிபாஷா-அரநாயக.

### காத்திருப்பு

பட்டினியாய் சென்ற பிள்ளை,
பள்ளி விட்டும் காணலையே-என்று
பதறிப்போய் காத்திருக்கும்.
பரிதாப தாய் இவள்!

எஸ்.வசந்தன்-ஏறாவூர்-04.

### இன்ரநெற்றில்!....

அன்னையர் தினத்தை ஒட்டி
'இன்ர நெற்றில்' பதிவாகியுள்ள
ஈழத்து தமிழ் அன்னையின்
இன்றைய மாதிரிப் படம்!

என்.சத்தியமூர்த்தி-திருகோணமலை.

### இழப்பு

உற்றாரை இழந்து
உறவினரையும் இழந்து
உடமைகளையும் இழந்து
இருக்கும் இப்பெண்ணை
பார்க்கையில்
கவிதை வரவில்லை கண்ணீர் தான்
வருகிறது!

நாஸ் இஸ்மயில்-அக்குறணை.

### விதியினின்று

எங்கப்பா புகலிடம்
பங்கர்தான் மறைவிடம்
எமக்கெங்குதான் வாழ்விடம்
தெருக்கோடி வந்து விட்டோம்!

அ.அச்சுதன்-சேனையூர்.

### அ(நாதையர்)ன்னையர் தினம்

இன்று அன்னையர் தினமாம்,
பெற்ற செல்வங்களை
யுத்தத்திற்கு பலி கொடுத்த
எம்மைப் போன்றவர்களுக்கு
இன்று அநாதையர் தினமல்லவா?

ச.சஞ்சுதன்-திருகோணமலை.

# வாசக[ர்] சாலை

முரசு இதழ் 407ல் முஸ்லிம்களுக்கெதிராக மாவனெல்லையில் நடந்த பேரினவாதிகளின் வெறியாட்டம் பற்றிய விரிவான விவரங்களை 'மீண்டும் தலைதூக்கும் பேரினவாதம்' தலைப்பிலான சத்தியனின் எக்ஸ்ரே ரிப்போர்ட் எடுத்துரைத்தது.

'கானகனின்' அண்டை மண்டலத்தில்... தமிழகத்தில் 'மீண்டும் அம்மா ஆட்சியா?' தலைப்பிலான அம்சம் பார்த்த போது.. கருத்துக் கணிப்புப்படி 'ஜெயலலிதா' ஆட்சியே அமையும் என்பதை அறிய முடிந்தது.

அது போலவே.. ஜெயலலிதா அம்மா ஆட்சிதான் வந்து விட்டது

'கானகன்' எழுதியது போல்-

'நூற்றுக்கு நூறு' உண்மையாகி விட்டது.

மற்றும்:-

'நில்-கவனி-முன்னேறு' தந்த 'சோர்வை விரட்டியடியுங்கள்' என்ற அம்சமும் 'தேன் கிண்ணம்' கொண்டு வந்த 'கவிதை'களும், தினமுரசின் 'சிறுகதை'களும் சுவைபட இருந்தது. உன் பணி என்றென்றும் தொடர வாரா வாரம் உன் உதயத்திற்காய் காத்திருக்கும் உன் வாசகன்.

புதிய காத்தான்குடி-
முஸம்மில், குவைத்.

## உறவினரைக் கண்டு பிடிக்க உதவுங்கள்

தனது எட்டாவது வயதில் தனது உற்றார் உறவினர் அனைவரையும் துறந்து யாழ்ப்பணத்திலுள்ள ஒரு வீட்டில் வேலைக்காரியாகச் சேர்க்கப்பட்ட எலேன் சிறிய புஸ்பம் என்ற பெண்மணி தனது உறவினர்களுடன் தொடர்பு கொள்ள விரும்பி முரசின் உதவியைக் கோருகிறார். தற்போது மட்டக்களப்பில் தனது கணவன் மற்றும் பிள்ளைகளுடன் வாழ்ந்து வரும் இவர் தான் சிறு பராயத்தில் சுண்டி டேவிட் வீதியில் வாழ்ந்ததாகவும், சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர் தனது மூத்த சகோதரிகளின் பெயர்களையும் தந்திருக்கிறார். மேரி ஜூலியானா, திருமதி மேரி கேத்தரின் ரொபர்ட், மேரி விக்டோரியா, இம்மூவரும் கொழும்பில் வசித்து வந்தவர்கள். இவர்களைத் தவிர ஜோர்ஜ் மற்றும் ஜெகப் அன்டனி ஆகிய இரு அண்ணன்மார்களும் ஜேசுதாசன் என்ற ஒரு தம்பியும் கார்மேல் என்ற ஒரு தங்கையும் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எலேன் யாழ்ப்பாணத்திலிருக்கும்போது மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரை மணம் முடித்து தற்போது மட்டக்களப்பு செல்வநாயகம் வீதி, 394/63ம் இலக்க இல்லத்தில் வசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிடப்பட்ட எவராவது, எலேன் சிறிய புஸ்பத்துடன் தொடர்பு கொண்டு மறந்த உறவுகளை மீண்டும் புதுப்பித்துக்கொள்ளுமாறும் முரசு கேட்டுக்கொள்ளுகிறது. அவ்வாறு இக்குடும்பத்தினர் ஒன்று சேர்ந்தால் அந்த மகிழ்ச்சியான செய்தியை முரசுக்கும் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

-ஆசிரியர்-

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடு கிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266


### மூன்று முத்துக்கள்


சூடு, சுவை, சுவாரசியம் இம் மூன்றும் முற்றிலுமாய் பொருந்திய முரசே நீ வாழ்க!

ஏனெனில் இடி அமீனின் உண்மைத் தொடரைத் தந்து என்னை கதிகலங்க வைத்தாலும் என்னை மிகவும் ஈர்த்துள்ளது. அடுத்து புதிய தொடரான சர்வாதிகாரி ஹிட்லரின் உண்மைத் தொடரைத் தந்து என்னை மிகவும் மகிழ்ச்சியூட்டியுள்ளாய். அதே போல் அமெரிக்காவைக் கலக்கிய அழகி மோனிக்காவின் உண்மைத் தொடரும் மிகவும் அருமையிலும் அருமை. 'இலக்கிய நயம்' எங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது அப்படி சூப்பர்.

முரசே! நீ எங்கும் முழங்குவாயாக உன்புகழ் எங்கும் பறை சாற்றப்படுவதாக.

யோ.சுதர்சினி-குருநகர்.

### உலகப் பொலிஸ்காரன் அமெரிக்கா...?



'மோனிக்கா என் மோனிக்கா' உண்மைத் தொடர் மூலம் அமெரிக்க நாட்டின் உயர்தர மக்களின் வாழ்க்கை நெறி முறைகள் எத்தகையன என்பதை நன்றாகப் புரிந்துகொண்டோம்.

ஒரு நாட்டின் தலைவர் மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர். ஆனால் அமெரிக்க நாட்டின் அதிபராக இரண்டு தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த பில் கிளின்டன், மிகவும் கீழ்த்தரமான நாணயமற்ற ஒருவராக மோனிக்கா வரலாற்றில் சித்தரிக்கப்பட்டிருந்ததை நம்புவதே கடினமாக இருக்கின்றது. இருப்பினும் அவர் மிகக் கீழ்த்தரமாக நடந்துள்ளாரென்பது வெட்ட வெளிச்சமான உண்மை என்பதும் நன்றாகத் தெரிகிறது.

நீதிமன்றத்தில் வேதாகமத்தின் மீது கைவைத்து "நான் கூறுவது முழுவதும் உண்மை, உண்மையல்லாது பொய் எதுவுமில்லை......" என்று சத்தியம் செய்து உண்மையை மறைத்து பொய்ச் சத்தியம் செய்துள்ளார். இத்தகைய பாதகச் செயல் புரிந்த ஒருவர் எட்டு வருடங்களுக்கு மேல் அந் நாட்டின் அதிபராக இருந்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

இத்தொடரில் அப்பாவியான மோனிக்காவை அமெரிக்கப் புலனாய்வுத்துறையினர் ஆட்டிப்படைத்த கொடூரம் பற்றி எண்ணிப் பார்க்கும்போது அமெரிக்க நாட்டு மக்களின் வாழ்க்கை முறையிலுள்ள குறைபாடுகள் தெட்டத் தெளிவாக விளங்குகின்றன. உலகத்திற்கே நான்தான் பொலிஸ்காரன் என்று மார்தட்டும் அமெரிக்காவின் போலித்தனத்தினை 'புவனா' தனது தொடர் மூலம் எடுத்துக் காட்டியமைக்கு எமது பாராட்டுக்கள்.

செ.ராம்குமார்-இணுவில்.

# நிலமையை சீராக்க சொல்ஹெய்ம் முயற்சி

## கிழக்கில் இராணுவ நடவடிக்கைக்கு படையினர் திட்டம்

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் உயிர்கொடுக்கும் நோக்கத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தை நோர்வேயின் விசேட தூதுவர் இவ்வாரம் லண்டனில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படும் அதேவேளை, குறுகிய தூர இலக்குகளைக் கொண்ட இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள படைத்தரப்பு தயாராகி வருவதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

தீச்சுவாலை இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் இராணுவத்தை மீளக்கட்டியெழுப்பும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் புலிகளை தற்காப்பு நிலைமையில் வைத்திருக்கும் நோக்கில் கிழக்கு மாகாணத்தில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளை நோக்கி படையினர் குறுகிய தூர முன்னேற்ற நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதகாலத்தில் கிழக்கில் ஆங்காங்கே பல இழப்புக்களை சந்தித்த படையினர் இந்தப்பகுதியில் மீண்டும் தம்மை நிலை நிறுத்துவதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி திடீர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில் எரிக்சொல்ஹெய்ம் இந்தவார இறுதியில் அன்டன் பாலசிங்கத்தை சந்தித்து சமாதான முயற்சிகளுக்கு மீளவும் உயிரளிப்பது தொடர்பாக ஆராய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு தரப்புமே தமது நிலைப்பாடுகளில் விட்டுக்கொடுப்புகளுக்கு தயாரில்லை என்று அறிவித்திருக்கும் போது தற்போதைய நெருக்கடியை தீர்க்க சொல்ஹெய்ம் எடுக்கப்போகும் முயற்சி எவ்வாறானதாக இருக்கும் என்பதில் அரசியல் வட்டாரங்களில் பரவலான எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

அனேகமாக அவர் அமெரிக்கா உள்ளிட்ட மேட்கு நாடுகளின் உதவியுடன் இரண்டு தரப்புக்கும் கடும் அழுத்தத்தை பிரயோகிக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இதற்கிடையில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித் ஆகியோர் அடுத்த சில தினங்களில் அன்டன் பாலசிங்கத்தையும் எரிக்சொல்ஹெய்மையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நோர்வேயின் சமாதான முயற்சி எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து இவர்கள் ஆராய்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. ■

## ஒரு மாதகாலத்தில் 50 இந்திய மீனவர்கள் கைது

யாழ் குடா நாட்டை அண்மித்த கடற்பரப்பில் ஊடுருவி சட்ட விரோதமாக மீன் பிடித்த சுமார் 50 மீனவர்கள் கடந்த ஒரு மாதகாலத்துக்குள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் ஞாயிற்றுக்கிழமை காலை இரு படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த எட்டு இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அண்மைக்காலமாக ஒரு பிரச்சனையாக மாறிவரும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் விடயம் குறித்து கடந்த வாரம் இந்தியாவுக்கு சென்ற கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்திய அதிகாரிகள் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களில் புலிகள் என்ற சந்தேகத்தில் பல இந்திய மீனவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுமுள்ளார்கள். தமிழக தேர்தல் பிரசாரத்தின் போதுகூட இதுவொரு சர்ச்சையாக கிளப்பப்பட்டது. ■

## மலையகத்திலிருந்து கொழும்பு வரும் தமிழர்களுக்கு போக்குவரத்து கட்டுப்பாடுகள்!

மலையக தமிழ் இளைஞர்கள் கொழும்புக்கு வருவதை கட்டுப்படுத்தும் திட்டங்களை அமுல் செய்ய படைத்தரப்பு தயாராகி வருகிறது.

நாட்டின் வட பகுதியில் இருந்து கொழும்பு வர தற்போது அமுலில் இருப்பது போன்ற பாஸ் நடைமுறையோ அல்லது அதைவிட இறுக்கம் குறைந்த வேறேதும் ஒரு திட்டமோ எதிர்காலத்தில் அமுலுக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மலையக மக்களின் கடும் எதிர்ப்பு கிளம்பலாம் என்று எதிர்பார்க்கப்படும் இத்தகையதொரு திட்டத்தின் முதற்கட்டமாக மலையகத்திலிருந்து தொழிலுக்காக கொழும்பு வருபவர்கள் தோட்ட அதிகாரிகளுக்கு அல்லது கிராம சேவகர்களுக்கு அறிவித்துவிட்டு வர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து மலையகத்துக்கு வருபவர்கள் தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறும் மலையகத்தில் இருந்து கொழும்பு செல்பவர்கள் தொடர்பாக ஒரு பதிவை அதிகாரிகள் வைத்திருக்க வேண்டும். தமது தோட்டங்களில் இருந்து கொழும்பு செல்வோர் அங்கு என்ன செய்கிறார்கள் என்பதை தோட்ட அதிகாரிகளினால் கூறக்கூடியதாக அனைத்து விபரங்களும் பதியப்பட வேண்டும் என்று பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

இந்த நடைமுறையானது எதிர்காலத்தில் மலையகத்தில் இருந்து கொழும்பு வருபவர்களுக்கும் வட பகுதிகளுக்குப் போன்று இறுக்கமான நடைமுறைகளைக் கொண்டு வருவதற்கான முன்னேற்பாடாகவே இது கருதப்பட வேண்டும் என்று பல மலையக தொழிற் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

## ஓட்டமாவடியில் புலிகள் தாக்குதல்

### 5 படையினர் உட்பட 6 பேர் பலி- 16 பேர் காயம்

மட்டக்களப்பு-ஓட்டமாவடி காவத்தை முனைப்பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்தியதில் 5 படையினர் பலியாகினர். 6 பேர் காயமடைந்தனர்.

கடந்த 05ம் திகதி காலை 7 மணிக்கு நடந்த இந்தச் சம்பவத்தில் முஸ்லிம் குடியிருப்பு பகுதிகளில் ஷெல்கள் விழுந்ததில் ஒரு முஸ்லிம் பொதுமகனும் பலியானார். மேலும் 16 பேர் காயமடைந்தனர். இவர்களில் சிலரது நிலமை கவலைக்கிடமாக உள்ளது.

இச் சம்பவத்தினால் ஓட்டமாவடி முஸ்லிம் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது. கடைகள் யாவும் மூடப்பட்டு ஊர் வெறிச்சோடிக்கிடந்தது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கோரவெளிப் பகுதியில் இடம் பெறும் வருடாந்த கோயில் உற்சவத்தில் புலிகளின் தளபதி கருணா கலந்துகொள்ளவிருந்ததால் அப்பகுதி நோக்கி இராணுவம் தாக்குத லுக்கும் தயாராகிக் கொண்டிருந்த வேளையிலேயே புலிகள் முந்திக் கொண்டு தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது. ■

## மீனவர்கள் விடுதலை

மட்டக்களப்பு வாழைச்சேனை வெருகல் பனிச்சங்கேணி கடற்பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சமயம் புலிகளால் கடத்தப்பட்டிருந்த 30 மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மீனவர்கள் கடந்த மே மாதம் 04ம் திகதியிலிருந்து கடத்தப்பட்டவர்கள் என்றும் அவர்கள் கடந்த 30ம் திகதி விடுவிக்கப்பட்டார்கள் என்றும் விஷேட ஊடகத்தகவல் நிலையம் கூறியுள்ளது.

## நீதியரசர் பாலகிட்ணர் அமரரானார்

ஓய்வு பெற்ற மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கே.பாலகிட்ணர் அவர்கள் கடந்த 3ம் திகதி சனிக்கிழமை மாலை காலமானார் என்ற துயரச் செய்தி அவரை அறிந்தவர்கள் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. யாழ் இந்துக் கல்லூரியில் படித்து கொழும்பு சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியாக வாழ்க்கையை தொடங்கிய திரு. பாலகிட்ணர் சில காலம் நாட்டின் பல பாகங்களிலும் நீதிபதியாகக் கடமையாற்றியதுடன் ஆங்காங்கே பல பொது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றிருந்தார்.

அவர் படித்த யாழ் இந்துக் கல்லூரியின் மாணவர்களால் சனிக்கிழமையன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட ஒரு நாடகத்துக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்தும் போது மேடையிலேயே மயங்கி விழுந்தார். உடனடியாகத் தனியார் மத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் உயிரைக் காப்பாற்ற முடியாமற்போய்விட்டது.

சரஸ்வதி மண்டபத்தில் குழுமியிருந்த அவருடன் கல்வி பயின்ற பழைய நண்பர்கள்' அவருக்குப் பாடம் சொல்லித் தந்த ஆசிரியர்கள் போன்றோரைக் இச்சந்தர்ப்பத்தில் காண்பது தமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாக, அவருடைய தலைமை உரையில் கூறிக்கொண்டிருக்கும் போதே அவர் மாரடைப்பால் மயங்கி விழுந்தார். இவையே அவருடைய இறுதி வார்த்தைகளாக அமைந்தன.

நீதியரசர் பாலகிட்ணரின் பூதவுடல் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் கனத்தையில் தகனம் செய்யப்பட்டது. ●

## 14 புலிகள் பலியென படையினர் அறிவிப்பு

அம்பாறைக் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள கஞ்சிகுடிச்சாறு புலிகளின் றொபட் தளத்தின் மீது விசேட அதிரடிப்படையினர் தாக்குதலை மேற் கொண்டனர்.

கடந்த 04ஆம் திகதி அதிகாலை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின் பின்னர் புலிகளின் 14 சடலங்களைத் நாம் கண்டெடுத்ததாகவும் புலிகள் தப்பி ஓடும் போது கைவிட்டுச் சென்ற பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகப் படையினர் தெரிவித்துள்ளனர்.

புலிகள் எதிர்பாராத விதத்தில் அதிரடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாலேயே புலிகளுக்கு இந்த இழப்பைசி ஏற்படுத்த முடிந்ததென்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் கூறியுள்ளார். ■

## விடுதியில் பாலியல் வல்லுறவுக்குள்ளான தமிழ் யுவதிமீது பொலிஸாரும் பலாத்காரம்

கொழும்பு பம்பலப்பிட்டி விடுதி ஒன்றில் வைத்து கைதுசெய்யப்பட்ட சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த கந்தையா சிவரஞ்சனி என்ற 21 வயது யுவதியும் வவுனியா இறம்பைக்குளத்தைச் சேர்ந்த திருமதி. விமலாதேவி இராமச்சந்திரன் (வயது39) என்ற பெண்ணும் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பம்பலப்பிட்டி பொலிஸாரி னால் மோசமான பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் இவ்விருவரையும் விசாரணை செய்த போது, இவர் கடுமையான பாலியல் சித்திரவதைக்கு உள்ளாகியிருப்பது தெரிய வந்ததால், கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஆஜர் செய்து பரிசோதனை செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். சட்ட மருத்துவ அதிகாரியினால் நடத்தப்பட்ட பரிசோதனையின் முடிவில் இரு பெண்களும் மோசமான விதத்தில் பாலியல் வதைக்கு உள்ளாகியிருப்பதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இந்த பெண்களுள் சிவரஞ்சனி என்பவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்படுமுன்னர் அவர் தங்கியிருந்த விடுதியின் முகாமையாளராலும் இன்னும் சிலராலும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவர் விடுதியில் தங்கியிருந்த சமயம் முகாமையாளரும் 3 சிற்றூழியர்களும் தம்மிடம் வந்து "புலி என்று பொலிஸில் பிடித்துக் கொடுப்போம்" என அச்சுறுத்தி தம்முடன் பாலியல் வல்லுறவு கொண்டதாக சிவரஞ்சனி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளதாக பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

குறிப்பிட்ட விடுதி முகாமையாளரான கருணாகரன் (வயது30) சிற்றூழியர்களான திருநாவுக்கரசு இராஜேந்திரன் (வயது30) கனகலிங்கம் செந்தூரன்(வயது 20) யோகராஜா மஹிந்தன் (வயது20) ஆகியோர் விடுதியில் வைத்து சிவரஞ்சனியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதற்காக கைது செய்து விசாரிக்கப்பட்டனர் என்றும் அந்த பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ் நடத்துநர் விசாரணையில்

கொழும்பு பிரதான பஸ்நிலையத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட பஸ் நடத்துநர் குற்றப் புலனாய்வுத் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பஸ் டிப்போவின் பஸ் நடத்துநரான கே.உருத்திரமூர்த்தி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசமான பழுகாமத்தைச் சேர்ந்தவர்.

இவர் கடந்த மாதம் 19ம் திகதி கடமையில் இருந்த சமயம் புறக்கோட்டை பஸ் நிலையத்தில் வைத்து ஆட்டோவில் வந்த ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டார். ■

## குடிசன மதிப்பீட்டுக்கு புலிகள் எதிர்ப்பு

தற்போது இடம்பெற்று வரும் குடிசன மதிப்பீடு சம்பந்தமாக புலிகள் தமது காரசாரமான கண்டனத்தை பிரசுரம் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்.

புலிகள் யாழ் மாவட்ட அரசியல் துறைவெளியிட்டுள்ள அந்தப் பிரசுரங்களில் யாழ் குடாநாட்டில் குடிசன மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாடுகள், நடைபெறுகின்றன. "போர்ச் சூழல்மிகுந்த இக்கட்டான இந்தக் காலகட்டத்தில் எத்தனையோ மக்கள் இடம் பெயர்ந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில், தங்களது சுய தேவைக்காக அரசாங்கம் செய்யவிருக்கின்ற குடிசன மதிப்பீட்டினால், பொது மக்கள் பல விதமான உரிமைகளை இழக்க நேரிடுவதன் மூலம் ஆபத்தான நிலைக்குள் தள்ளப்படப் போகின்றனர்.

இதனால் இந்த நெருக்கடியான நிலையில் நாம் அதனை அங்கீகரிக்கப் போவதில்லை. ஆகவே எமது மக்களும் அரச அதிகாரிகளும்கூட எமது நிலைப்பாட்டை விளங்கி விழிப்புடன் செயற்பாடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளனர். ■

## மன்னிப்புச் சபைக்கு கண்டனம்

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலை தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள கருத்துக்களை கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்று திரிபுபடுத்தி பிரசுரித்திருப்பது தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சர்வதேச மன்னிப்புச் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பியினால் மன்னிப்புச் சபைக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதில் மன்னிப்புச் சபையின் அறிக்கையில் உள்ள விவரங்கள் தவறாக எடுத்தாளப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டியிருக்கும் ஈ.பி.டி.பி. தற்போது நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் ஒரு வழக்கு தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டிருக்கும் கருத்துக்களுக்கும் அதனை திரிபுபடுத்தி செய்தி வெளியிட்ட பத்திரிகைக்கும் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளது. ■

## கூலித் தொழிலாளர்கள் நால்வர் கடத்தல்

வாவி ஊடாக ஓட்டமாவடிக்குள் பிரவேசித்த புலிகள் இயக்கத்தினர் கூலித்தொழில் புரியும் நான்கு முஸ்லிம்களைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 03ம்திகதி இரவு எட்டுமணியளவில் நடந்தது. அரிசி ஆலையொன்றில் கூலி வேலை செய்யும் இரு முஸ்லிம்களையும், அங்கிருந்த ஜெனரேற்றர் ஒன்றும் புலிகளால் கொண்டு செல்லப்பட்டுள்ளது. கடத்தப்பட்டோர் சார்பாக மொத்தம் 6 இலட்சம் ரூபா கப்பப் பணம் கோரப்பட்டுள்ளது. முன்னரும் இந்த இறால் பண்ணை, அரிசி ஆலைகளிலுள்ளோர் கடத்தப்பட்டும், நீர் இறைக்கும் இயந்திரங்கள் அபகரித்துச் செல்லப்பட்டுமிருந்தது குறிப்பிடத்தக்கது. ■

## இளம் பெண் உயிருடன் எரிப்பு

இளம் முஸ்லிம் பெண்ணொருவர் கடந்த வாரம் ஏறாவூரில் உயிருடன் எரித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

எச்.எம். சித்தி முனாபிறா என்ற 24 வயது பெண்ணின் வாயில் துணியை திணித்து உயிருடன் எரிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த சம்பவம் தொடர்பாக தேடப்படும் குறிப்பிட்ட பெண்ணின் கணவன் எம்.ஏ. ரஸ்ஸாக் தலைமறைவாகியுள்ள நிலையில் கணவனின் தாயாரும் அவனது சகோதரியும் கொலையுண்ட பெண்ணின் மாமியும் மைத்துனியும், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடும்பத் தகராறே இந்தக் கொலைக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ஒரு மாத காலத்துக்குள் விசேட ஏற்பாடு

கைதடி பகுதியில் மீளக் குடியேறியவர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியைப் பெறுவதற்கான விசேட ஏற்பாடுகள் அடுத்த ஒரு மாதகாலத்துக்குள் செய்து கொடுக்கப்படும் எனவும் அதுவரையில் யாழ் சிவில் அலுவலகத்திலேயே அவற்றை பெற்றுக்கொள்ளுமாறும் படையினர் கேட்டுள்ளனர்.

இதற்கிடையில் கைதடிப் பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி மூன்று மாத காலத்துக்கு இரட்டிப்பு நிவாரணம் வழங்கப்படும் என்றும் இருப்பிடங்களை திருத்தியமைக்க 15 ஆயிரம் ரூபா உடனடியாக வழங்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் யாழ் குடாநாட்டில் 6ம் வகுப்பில் பயிலும் மாணவர்களும் விசேட அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று படையினரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

5ம் வகுப்பில் கற்கும் மாணவர்களும் இவ்வாறான அடையாள அட்டைகளைப் பெற வேண்டும் என்று படையினர் கேட்டபோதும் ஆரம்பப் பாடசாலை அதிபர்களின் வேண்டுகோளை அடுத்து இது 6ம் ஆண்டாக மாற்றப்பட்டுள்ளது. ■

## இளம் ஜோடிகளுக்கு புலிகள் எச்சரிக்கை

திருக்கோணமலை நகரில் மூவினங்களையும் சேர்ந்த இளைஞர் யுவதிகளால் சீரழிவதாக கண்டித்து புலிகள் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர்.

புலிகளின் திருக்கோணமலை மாவட்ட அரசியல் பிரிவு இப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளது.

"பொழுது போக்கு என்ற போர்வையில் தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் வெட்கித் தலை குனியுமளவிற்கு நடந்து கொள்கின்றனர்.

திருமலை நகரக் கடற்கரை, உவர் மலைப் பின்பகுதி போன்ற இடங்களிலே இத்தகையோரின் செயற்பாடு அதிகரித்திருக்கின்றது,

இது என்ன கொழும்பு விகாரமஹா தேவிப் பூங்காவா? எமது எச்சரிக்கைக்குப் பின்னும் தங்கள் தவறுகளை உணர்ந்து திருத்திக்கொள்ளத் தவறுவோர் தாங்கள் எதிர்பாராத விதமாகத் தண்டனையை அனுபவிப்பர்" என்று புலிகளின் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## லண்டன், பாரிஸ், பிராங்போர்ட்
## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர் Dr.ரா. தியாகராஜன் DHMS, AMRSH (LON.) விரைவில் லண்டன், பாரிஸ், பிராங்போர்ட் நகரங்களுக்கு விஜயம் செய்ய இருக்கின்றார். நீரிழிவு ஆஸ்துமா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மை குறைபாடு, குழந்தை இன்மை மற்றும் நாட்பட்ட வியாதிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.

தொடர்பு: 0091-9843051099 (இந்தியா) 0094-77602513 (இலங்கை)
Email: homoeocare @Usa. net
9843051099 @ bpl mobile.Com.

# விளம்பரப் பகுதி

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஜூன் 17 முதல் 23 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஜூன் 24 - 27 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் ஜூன் 30, ஜூலை 01 திகதிகள்.**


T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஜூன் 09, 10 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



## 1வது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வி ஹேஷனா (அபிது)

**06.06.2001**

கனகராயன் குளத்தையும், நெடுங்கேணியையும், பிறப்பிடமாகவும் தற்காலிகமாக லண்டனில் வசித்து வரும் ஆனந்தராஜா-திருமகள் தம்பதிகளின் செல்வப் புதல்வி **ஹேஷனா (அபிது)** தனது முதலாவது பிறந்த நாளை **06.06.2001** அன்று லண்டனில் உள்ள தனது இல்லத்திலும் **09.06.2001** அன்று ARSBISHOP LANFRANCE SCHOOL HALL இல் வெகு விமர்சையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா (இந்தியா), தவம்மாமா, ஜெயா மாமி (இந்தியா), செல்வன் பெரியப்பா (லண்டன்), யமுனா பெரியம்மா, அக்கா யாழினி, அண்ணா தனுஷன் (இந்தியா), வசந்தன் பெரியப்பா (லண்டன்), மற்றும் அம்மம்மா (லண்டன்), இந்திரன் மாமா, சோபனா மாமி, அனுஷன் அத்தான் (சுவிஸ்), சுரேஷ் மாமா, ஜெசோமாமி (ஜேர்மனி), ரமேஷ் மாமா (கனடா), குட்டி மாமா (தீபன் லண்டன்), விதுனன் மாமா (லண்டன்), மற்றும் லண்டனில் உள்ள மாமாமார், மாமிமார் அனைவரும் எல்லோருக்கும் பொதுவான இறைவன் அருளால் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.

*தகவல்: தீபன்&விதுனன்-மாமாமார்.*

## அற்புத சித்தர் மாந்திரீகம்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் அதில் உடன் வெற்றிகாண மட்டக்களப்பு-மலையாள-சோதிட மாந்திரீகச் சித்தர். பேராசிரியர்-கலாநிதி. "சக்திசரவணா" வுடன் தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம், குடும்பப் பிணக்கு, தொழில் விருத்தி, திருமணத் தடங்கல், பிரயாணத்தடை, சத்துரு ஜெயம் முதலான சகல விடயங்களிலும் நிச்சயம் வெற்றி பெறலாம். ஏழு தலைமுறை பாரம்பரியமும், 30 வருட சுய அனுபவ ஆற்றலும் கொண்ட "சக்தி சரவணா"வினால் நினைத்த காரியம், ஜாதகபலன், சோதிட அருள்வாக்கு, எண்சோதிடம் முதலான பிற சோதிட சேவைகளும் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரிதசேவை மேற்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் தொடர்பு கொள்ளும் உள்ளூர் அன்பர்கள் 20 ரூபா முத்திரையுடன் தொடர்பு கொண்டு பதில் பெறலாம். இரகசியங்கள் அந்தரங்கமாகப் பேணப்படும். காலதாமதம்-பணவிரயம் இன்றி உடன் பரிபூரண வெற்றி பெற தொடர்பு கொள்ளுங்கள். நேரில் சந்திக்க- காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை.

தொடர்பு (வியாழன் விடுமுறை)

HON.PROF.DR.SHAKTHY SARAVANA;
Majestic Inn, Room-203
49, Galle Road, Colombo-04.
T.P: 584686

தொலைபேசி தொடர்பு காலை 9முதல் இரவு 9 வரை வெளிநாட்டினர் தொடர்பு கொள்ள
T.P: 0094 1 584686

## பன்னிரெண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
18
12
1945



ஆண்டவன் அடியில்
10
06
1989

### அமரர்-செபமாலை நோயல் என்டனி சந்திரராசா

மாங்குளம் கிராம சேவையாளரும் கமநல சேவையாளரும்

பன்னிரு ஆண்டுகள் சென்றிடினும்
கண்ணிரெண்டும் உறங்கவில்லை
பரிவோடு அணைத்த உந்தன்
மார்போடு துயரத்தில் வாழும்
மகன்

தகவல்: சங்கர்லால் (வாசு) மகன், 121, பார்க்ரோட், கொழும்பு-05.

## தியான யோகசக்தி! வசிய வைத்தியம்

1945ம் ஆண்டு ஆரம்பித்த புனித சேவை, சமய கலாசார அமைச்சின் பதிவு இல-HA14/ BT/ 176

சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட பதிவு இல:061 ஹோமியோபதி,அக்குப்பங்சர்,சித்த ஆயுர்வேத, மாந்திரீக, மனோவசிய, யோகசிகிச்சையாளர்

**டாக்டர்-"மந்திரயோகி"**
R.P.H.M-D.Ac-(இலங்கை) P.I.S.M, (இந்தியா)



(YOGA) MY GURU

காதல் பிரச்சனைகளைத் தீர்த்து விரும்பியவர்களை சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்துடன் திருமணம் செய்ய, கணவன்-மனைவி கருத்துவேறுபாடுகள் சந்தேகங்களை தீர்த்து பிரியாமலிருக்க, பிரிந்தவர்கள் வெறுப்ப வர்கள், வேண்டியவர்கள் வந்து உறவாக, தகாத ஆண்-பெண் உறவைபோதை வஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராதநோய், எதிரி தொல்லைகளிலிருந்து விடுபட-கண்ணூறு நாவூறு, சர்வதோஷ நிவர்த்தி சாந்தி பரிகாரங்கள் செய்ய, எத்துன்பங்களும் அணுகாமல் உடல் வீடு வளவு வியாபார இடங்களைக் காவல்செய்ய, திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், பொருளாதாரம், வெளிநாட்டுப்பிரயாணம் வேறுகாரிய வெற்றிக்கு "சகலகாரிய சித்தி இராயவசியங்கள்" செய்துகொள்ள தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள், மனநோய், மருந்தீடு, பயம், பலவீனம், தாழ்வு மனப்பான்மை, கவலை, ரென்ஷன், இவைகளுக்கு சிறப்புச் சிகிச்சைபெற மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்துக்கு (இந்தியன் வைத்தியசாலை) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் தபால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷேட தபாலில் எல்லா மதத்தினர்களுக்குமேற்ற தீங்கற்ற தெய்வீக புனித பரிகாரப்பொருட்களைப் பெற்று நியாயமான கோரிக்கைகளை உடன்நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

**GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC) KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)**

உள்நாட்டு தொ.பே: 065-24872
வெளிநாட்டுதொ.பே: 0094 65 24872

(சர்வதேச) கடல்கடந்து செல்லும் அற்புத ஆன்மீக ஆகர்ஷண வசிய, தியான யோகசக்தி வெளிநாட்டவர்களுக்கு விஷேட செயல்முறைகள் மூன்றுநாட்களுக்குள் கையில் கிடைக்கக்கூடிய துரித சேவை.


## வெள்ளி விழாக் கொண்டாட்டம்



கனடாவில் வசிப்பிடமாகவும் இலங்கையில் திருகோணமலையை பிறப்பிடமாகவும் கொண்ட அன்னராசா-சாரதாதேவி தம்பதிகள் 07.06.2001 அவர்களது 25 வது திருமண Annivasaryயை 09.06.2001 அன்று சனிக்கிழமை Torontoவில் அவர்களது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை கனடாவில் இருக்கும் பிள்ளைகள் சுதா, டாசா (Dasha) அம்மா (கனடா), அப்பா (இலங்கை), சகோதரர்கள் ரவி குடும்பம் (கனடா), சிவா குடும்பம் (கனடா), சுபத்திரா குடும்பம் (இலங்கை), நவந்தி குடும்பம் (கனடா), சூரி குடும்பம் (கொலன்ட்), சிவமயம் குடும்பம் (கனடா), சுகந்தினி குடும்பம் (கனடா), மணி குடும்பம் (இலங்கை), கணேஸ் குடும்பம் (இலங்கை), மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்கவென வாழ்த்துகிறார்கள். **தகவல்: பிள்ளைகள்.**

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா,. கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது திருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
Tel-466620, 466820 தேவைகளுக்கு:-

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NLJP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

## 45ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
15
07
1944



ஆண்டவன் அடியில்
23
04
2001

### அமரர் செல்லையா தங்கராசா

கட்டைப்பிராய்

அன்பின் அப்பாவே!
எம்மை விட்டுப் பிரிந்து
நாற்பத்தைந்து நாட்கள்
மறைந்ததப்பா.
பாசத்தை சொரிந்தே
எங்களை வளர்த்தீரப்பா.
பாசக்கடலே உமை நினைத்து
ஏங்கித் தவிக்கிறோம் எந்நாளும் அப்பா!
இனி எங்ஙனம் காண்போமோ
மறு ஜென்மம் என்றிருந்தால் மனையாளும்
மக்களுமாய் உங்களுடன் பிறந்திடுவோம்
*உங்கள் பிரிவால் துயருறும்*
*மனைவி; பிள்ளைகள், மருமகள், பேர்த்தி,*
*உற்றார், உறவினர்.*

தகவல்:- மகன் ஜெயராசா-சுவிஸ். தொ.இல: 61 3118565

# புதிய அபாயங்களை எதிர்வு கூறும் புலிகளின் எச்சரிக்கை

**சத்தியன்**

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

சமாதானம் குறித்த நம்பிக்கைக்கீற்று மெதுமெதுவாக மங்கத் தொடங்கியிருக்கும் இன்றைய நாட்களில் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதை கூறமுடியாத நிலையில் அரசாங்கமும் படையினரும் பாரிய அளவிலான தாக்குதல்களை புலிகள் தொடுக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றார்கள்.

தமது இயக்கம் மீதான தடையை நீக்குமாறு புலிகள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்ததன் பின்னர் விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் சமாதான முயற்சிகள் முறிவடைந்து எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நிலமைகளுக்கு அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை புறக்கணிக்கக்கூடிய ஓர் எச்சரிக்கையாக அரசாங்கம் கருதியிருக்காது. ஏனெனில் இன்றைய தேதயில் புலிகளின் இராணுவ பலம் எப்படியானது என்பதை அரச தரப்பு நன்றாக உணர்ந்தே இருக்கிறது.

அண்மைக்காலமாக புலிகளினால் நடாத்தப்படும் சிறிய தாக்குதல்கள் பரவலாக அதிகரித்துள்ளன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நாளாந்தம் ஏதேனும் ஒரு சம்பவத்தில் ஓரிரு படை வீரர்களாவது கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இது பாரிய தாக்குதல் திட்டம் ஒன்றுக்கான முன்னறிவித்தல் என்பதை உணர்ந்ததனாலோ என்னமோ, படைத்தரப்பும் கடந்த வாரங்களில் புலிகளை முறியடிக்கும் பல்வேறு உத்திகளை பரீட்சித்துப் பார்த்தி ருக்கிறார்கள்.


இந்நிலையில் கடந்த காலங்களில் புலிகளின் ஆயுதக்கப்பல்கள் தாராளமாக நடமாடியதாக கூறப்படும் முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கை விமானப்படையினரும் கடற்படையினரும் சேர்ந்து பாரிய ஒத்திகை ஒன்றை கடந்த வாரம் நடத்தியுள்ளனர்.

எதிர்பாராத தாக்குதல் ஒன்றுக்கான புலிகளின் எச்சரிக்கை வெளியாகியிருக்கும் இந்தத் தருணத்தில் புலிகளின் கைகளுக்கு மேலும் ஆயுதங்கள் வந்து குவிவதை தடுப்பதற்காகவே 'வருணகிரண' என்ற இந்த இராணுவ ஒத்திகை நடத்தப்பட்டதாக படைத்தரப்பு கூறியுள்ளது.

வடகிழக்கு கடற்பரப்பில் வழமையான விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல்களது நடமாட்டமிருப்பதாகக் கருதப்படும் முல்லைத்தீவு சாலைக்கும் கொக்கிளாய்க்கும் இடைப்பட்ட சுமார் பத்து மைல் தூரத்தை மையமாக வைத்தே இந்த ஆயுதக் கடத்தல் முறியடிப்பு ஒத்திகை நடவடிக்கை கடந்த 25ம் திகதி இடம்பெற்றது.

இந்தியாவிலிருந்து கடந்த வருட பிற்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட கடலோர ரோந்துக் கப்பலான எஸ்.எல்.என்.எஸ்.சயுர மற்றும் இஸ்ரேலிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அதிவேக ஏவுகணைக் கப்பலான எஸ்.எல்.என்.எஸ். நந்திமித்ர ஆகிய இரு கப்பல்களும் கரையோரத்திலிருந்து சுமார் 60 மைல் தூரத்தில் தொடர்ச்சியாக நிலைகொண்டிருக்க கரையோரத்திலிருந்து 6மைல் தூரத்தில் வரிசையாகப் பல அதிவேக டோரா பீரங்கிப் படகுகள் நிறுத்தப்பட்டன.

முல்லைத்தீவுக் கடற்பரப்பிற்கு அப்பால் சுமார் 150மைல் தூரத்தில் சர்வதேச கடல் எல்லையில் நிறுத்தப்பட்டிருக்கும் புலிகளின் பாரிய ஆயுதக் கப்பல்களிலிருந்து சிறிய படகுகள் மற்றும் பாஜ்கள் மூலம் புலிகள் கடந்த சில மாதங்களில் பல தடவைகள் பெருமளவு ஆயுதங்களைத் தரையிறக்கியுள்ளதாகக்கிடைத்த தகவல்களையடுத்தே இந்த ஆயுதக் கடத்தலை முறியடிக்கும் விதத்தில் இந்த கடற்படை ஒத்திகை நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.



இந்த நடவடிக்கை, கிழக்குப் பிராந்திய கடற்படை தளமான திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து கட்டளைகள் பிறப்பிக்கப்பட மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக விமானப் படையினரின் அநுராதபுர வான்வெளிக் கண்காணிப்புப் பிரிவு திருகோணமலைக்கு மாற்றப்பட்டிருந்தது. தாக்குதல் விமானங்களுடன் ஆட்களற்ற உளவு விமானமும் (யு.ஏ.வி) இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது.

கடற்படை ஒத்திகை நடைபெற்ற கடற்பரப்பில் சுமார் 100 முதல் 150 மைல் வரையிலான கடற்பரப்பைக் கண்காணிக்கும் ஆற்றலுடன் இந்த விமானங்கள் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டன.

இந்த ஒத்திகையில் ஈடுபட்ட கடற்படைக் கப்பல்கள் மற்றும் பீரங்கிப் படகுகளின் நடவடிக்கைகளை விமானப்படை விமானங்கள் கண்காணித்த அதேநேரம் கடற்புலிப் படகுகளின் நடமாட்டத்தையும் கண்காணித்தன.

எனினும் இந்த ஒத்திகை ஆரம்பமாகி முடிவடையும் வரை இப்பகுதியில் கடற்புலிகளின் நடமாட்டம் இருக்கவில்லை.

புலிகளின் ஆயுதக் கப்பல்கள் வடகிழக்கு கடற்பரப்பினுள் ஊடுருவுவதை நிரந்தரமாகத் தடுக்கும் நோக்கிலேயே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புலிகளது ஆயுதக்கப்பல்கள் பற்றிய தகவல்கள் கிடைத்து சில நிமிடங்களில் அவ்விடத்திற்கு கடற்படைக் கலங்கள் விரைந்து சென்று இனி மேல்நடவடிக்கையெடுக்கும் விதத்தில் இந்த ஒத்திகை நடவடிக்கை வழியமைத்துள்ளதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஒத்திகை நடவடிக்கையை முப்படைத் தளபதிகளும் கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ரத்வத்தையும் நேரில் பார்வையிட்டனர்.

அண்மைக் காலமாக விடுதலைப்புலிகள் அடுத்தடுத்து ஆயுதங்களைக் கப்பல்களிலிருந்து தரையிறக்கியதாக வெளியான தகவல்களையடுத்து இவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் அவசர உத்தரவு பிறப்பித்ததையடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் இது காலம் கடந்த ஞானம் என்பதே உயர்மட்ட படை வட்டாரங்களின் கருத்து. ஏனெனில் புலிகள் தொடர்ச்சியான முறையில் போதியளவு ஆயுதங்களை கொண்டு வந்து இறக்கி விட்டது பழைய சங்கதி.

இனிமேல் புலிகள் நடத்தும் எந்தவொரு தாக்குதலுக்கும் யாருக்கும் கண்டனம் தெரிவிக்க முடியாது. அவர்களை பயங்கரவாதிகளாக மேற்கு நாடுகள் முத்திரைக் குத்தியதில் உள்ள ஒரு சாதகமான அம்சம் இதுதான்.

எதிர் காலத்தில் புலிகள் யாரைத் தாக்கினாலும் அரச தரப்பு பெரும் சங்கடத்துக்கு உள்ளாகும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் முடியுமான வரையில் அடங்கிப்போய் போதியளவு சந்தர்ப்பங்களை வழங்கி பொறுமை காத்த பின்னர் தான் புலிகள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

அதுவும் இந்த எச்சரிக்கை வெளியாகியிருக்கும் நேரம் கவனத்தில் கொள்ளத்தக்கது. அதாவது என்றுமில்லாத அளவு நவீன ஆயுதங்களுடன் புலிகள் இயக்கம் பலமாக இருக்கும் ஒரு சந்தர்ப்பம் இது.

இதனால் ஆனையிறவை கைப்பற்றியது போன்று மற்றொரு பாரிய தாக்குதலை நடத்த முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்று கூறமுடியாது.

இவை எல்லாவற்றை விடவும் இம்முறை வித்தியாசமான ஆபத்துக்கள் தலை நகரில் காத்திருக்கின்றன. கொழும்புக்குள் புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் ஊடுருவியிருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் எச்சரித்துள்ளனர்.

அரையில் பிஸ்டலை செருகிக் கொண்டு சர்வசாதாரணமாக நடமாடும் இந்த பிஸ்டல் குழுவினரிடமிருந்து பாதுகாப்பு உயரதிகாரிகளுக்கும் இரண்டாம் பட்ச அரசியல்வாதிகளுக்கும் ஆபத்து ஏற்படஇடமுண்டென புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளார்கள்.

இப்போது தங்களுக்கு வசதியாகக் கிடைக்கும் சிறுசிறு இலக்குகள் மீது தாக்கிக் கொண்டிருக்கும் படையினர் சற்றும் எதிர்பார்த்திராத ஒரு நேரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளை தாக்க வாய்ப்பிருக்கிறது.

அம்பாறை-மட்டக்களப்பு பகுதிகளிலும் திருகோணமலை மாவட்டத்திலும் கடந்த ஒரு மாதகாலத்தில் மாத்திரம் வெவ்வேறு சம்பவங்களில் 50க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தற்போது இந்தப்பகுதிகளில் படையினரின் நடமாட்டம் பலத்த அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் தலைநகரில் இருக்கும் மனித வெடிகுண்டுகளின் அடுத்த இலக்கு எதுவாக இருக்கும் என்ற பயம் தான் படைவட்டாரங்களின் வயிற்றில் புளியை கரைக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 5 மாதத்துக்கும் மேலாக தலைநகரில் எந்தவிதத்தாக்குதல்களையும் புலிகள் மேற்கொள்ளவில்லை. ஆனால் இனிமேலும் இந்த மௌனம் தொடரும் என்று நீண்டகாலத்துக்கு எதிர்பார்க்க முடியாது.

'அக்னிகீல' இராணுவ நடவடிக்கையில் படையினருக்கு பெருவாரியான இழப்புக்களை ஏற்படுத்திய புலிகள் போர்க்களத்தில் தமது பலத்தை மேலும் உயர்த்திக்காட்டவும் சமாதான முயற்சிகளில் அரசாங்கத்தை தள்ளி விடவும் மற்றொரு தாக்குதலை பயன்படுத்தக் கூடும்.

எங்கேயாவது ஓரிடத்தில் செம அடிவாங்கிய பின்னர்தான் சமாதானத்தைப்பற்றி சிந்திப்பது அரசாங்கத்தின் வழக்கம். தீச்சுவாலையில் கிடைத்த தோல்வியின் பின்னர் ஓரளவு இறங்கி வந்தாலும் சமாதானத்தின் அவசியத்தை அரசாங்கத்தால் உணர அது போதுமானதாக இல்லை என்று புலிகள் நினைத்திருக்கலாம். அதனாலேயே முன்னேற்பாடாக எச்சரிக்கை ஒன்றை விடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த எச்சரிக்கை எந்நேரமும் செயல் வடிவம் பெறலாம் என்ற நிலைதான் இன்று காணப்படுகின்றது. ●

---

# அரசாங்கம் செய்தித் தணிக்கையை நீக்கி விட்டதாம்!

**எம்.பி.எம். பர்ஸான்**

தூக்கத்தில் இருந்து விழித்துக் கொண்ட ஒருவனுக்கு ஞானோதயம் கிடைத்தது போல யுத்தச் செய்திகள் மீதான தணிக்கையை அரசாங்கம் கடந்த 30ஆம் திகதி திடீரென நீக்கியது. இதற்கான காரணம் எதுவும் சொல்லப்படவில்லை. விவரணங்கள் எதுவும் இடம் பெறவுமில்லை.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்த அறிக்கையில் இராணுவ சம்பந்தமான செய்திகளை அனுமதியின்றி வெளியிடுவதை தடைசெய்யும் 1998ம் ஆண்டின் 1ம் இலக்க அவசர காலப் பிரமாணங்களை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக குமாரணதுங்க உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் மூலம் அரசாங்கம் நாட்டு மக்களுக்கும் உலகத்துக்கும் சொல்ல வந்த சேதி யாதெனில், இப்போது இலங்கையில் செய்தித்தணிக்கை இல்லை என்பதாகும்.

அரசாங்கத்தின் இராணுவ செய்தித் தணிக்கைக்கு கடந்த வருடம் உயர் நீதிமன்றம் மரண அடியொன்று கொடுத்தது! 'சண்டே லீடர்' பத்திரிகையைத் தடைசெய்தது தொடர்பாக அந்தப் பத்திரிகை நிறுவனத்தார் தாக்கல் செய்த மனுமீதான விசாரணையில் அவசரகால சட்டத்தை பயன்படுத்தி யுத்த செய்திகளை தணிக்கைக்கு உட்படுத்துவதும் அந்த தணிக்கை சட்ட விதிகளை மீறியமைக்காக பத்திரிகை ஒன்றைத் தடைசெய்வதும் சட்ட விரோதமானதென நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கீழே விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்பது போல இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு இரண்டு நாட்களில் சட்டத்தில் உள்ள சில நெளிவு சுழிவுகளை மேற்கோள்காட்டி திரும்பவும் செய்தித் தணிக்கை கொண்டுவரப்படுவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் அதை சுயதணிக்கை போன்றே அமுல் செய்ய விட்டுவிட்டு அவ்வப்போது பத்திரிகைக் காரியாலங்களுக்கு மறைமுக மிரட்டல்களை விடுத்துக் கொண்டு வந்தது.

இவ்வாறாக அர்த்தமிழந்து போய்க் கிடந்த செய்தித் தணிக்கையைத்தான் அரசாங்கம் கடந்தவாரம் நீக்கியுள்ளது.

உண்மையில் போர்ச்செய்திகளை அரசாங்கம் தணிக்கை செய்வதில் நியாயம் இல்லவே இல்லை என்று கூறிவிடவும் முடியாது. எமது ஊடகவியலாளர்கள் சிலர் யுத்தம் குறித்து கொண்டிருக்கும் எடுகோள் தான் இதற்குக் காரணம்.

சிலர் அரசாங்கத்துடன் மோசமான ஆத்திரத்தில் இருக்கிறார்கள். புலிகள் யுத்த களத்தில் வெற்றிகளை அள்ளிக் குவிப்பது ஒன்றுதான் அந்தச் செய்தியாளர்களின் ஒரே பிரார்த்தனை. இன்னும் சிலர் யுத்தத்தை தீவிரமாக எதிர்க்கிறார்கள். இவர்களை விட மற்றொரு தரப்பார். யுத்தத்தை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு அரசாங்கம் யுத்தம் செய்யும் முறையை மட்டும் எதிர்க்கிறார்கள்.

தீவிர அரசாங்க எதிர்ப்பாளர்கள் போரை பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு இனரீதியிலான குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை முறியடிக்க அரசாங்கம் தணிக்கையை பயன்படுத்துகிறதென்றால் அத்தகையதொரு தணிக்கைக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால் இனங்களுக்கிடையில் முறுகல் நிலை தோன்றுவதை தவிர்ப்பதற்காக மாத்திரம் அரசாங்கம் தணிக்கையை பயன்படுத்தவில்லை. தமது வேறு பல நிர்வாணங்களையும் தணிக்கை கொண்டு மறைக்கப் பார்த்தது

செய்தித் தணிக்கை என்ற அடக்கு முறையை நியாயப்படுத்தும் வகையிலான காரணங்களை அரசாங்கம் கூறிவந்தாலும், அது உண்மையாக செய்தித் தணிக்கையை அமுல் செய்தது போர்க்களத்தில் கிடைக்கும் தோல்விகளை மறைப்பதற்காகவும் யுத்தத்தை வியாபாரமாக்கி கோடிக்கணக்கில் விழுங்கி ஏப்பமிடும் சில தரகர்களை காப்பாற்றுவதற்காகவும்தான்.

போர்க்களத்தில் கிடைக்கும் தோல்விகளை வெளியில் சொல்வதாலும் இராணுவ உயர் மட்டத்தில் உள்ளவர்கள் செய்யும் ஊழல்களை மக்கள் தெரிந்து கொள்வதாலும் படையினரின் உளவியல் பலம் பாதிக்கப்படும் என்று அரச தரப்பு தணிக்கைக்கு நியாயம் கூறியது.

ஆனால் அரசாங்கம் மறைக்க நினைத்தவைகள் பலதை மக்கள் அறிந்து கொண்டார்கள். அரசாங்கம் வரவழைத்த மோட்டார் குண்டுகள் முழுவதும் கப்பலோடு புலிகளிடம் போய்ச் சேர்ந்ததை மக்கள் தெரிந்து கொண்டார்கள். பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த ஆனையிறவு படைத்தளத்தில் இருந்து அவர்கள் தந்திரோபாயமாக பின்வாங்கவில்லை. பெருவாரியாக வாங்கிக்கட்டிக் கொண்டு தலைதெறிக்க தப்பியோடினார்கள் என்பதை மக்கள் அறிந்து கொண்டார்கள். நாட்டுமக்களின் வரிப்பணத்தில் பாதுகாப்புச் செலவு என்று ஒதுக்கப்படும் நிதியால் உண்மையாக யார் பாதுகாக்கப்படுகிறார்கள், யார் யாரெல்லாம் போஷாக்குப் பெறுகிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியும்

நியாயமான காரணங்களுக்காக மட்டும் அரசாங்கம் தணிக்கையை பயன்படுத்தியிருக்குமாயின் அதை ஒரு தவறாக சுட்டிக்காட்டும் வாய்ப்பு எவருக்கும் கிடைத்திருக்காது. ஆனால் தங்களுக்கு சாதகமில்லாத அனைத்தையும் மறைக்க இந்தச் செய்தித் தணிக்கை உபயோகிக்கப்பட்டது எந்தளவுக் கென்றால், வடமேல் மாகாணசபைத் தேர்தலின் போது பொலிஸாரினால் ஒரு பெண் நிர்வாணமாக்கப்பட்டு வீதியில் நடக்கவைக்கப்பட்ட சம்பவம் குறித்த செய்தி கூட தணிக்கை அதிகாரியின் கோபத்துக்கு இலக்காகி வெட்டப்பட்டது.

இப்படி பல உதாரணங்களைக் கூறலாம். அரசாங்கம் என்ன நோக்கத்துக்காக தணிக்கையை அமுல் செய்ததாகக் கூறியதோ அதனுடன் கிஞ்சித்தும் தொடர்பில்லாத, ஆனால் அரச தரப்புக்கு பாதகமான செய்திகள் அனைத்தும் தணிக்கைக்கு உள்ளாக்கின.

எவ்வாறிருந்தாலும் இப்போது தணிக்கை நீக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கப்பட வேண்டிய விஷயம். அதே நேரம் பல கேள்விகளும் எழுகின்றன. பத்திரிகைகளில் பிரசுரமாகும் செய்திகளால் இனிமேல் படையினரின் உளவியல் பலம் குறையாதா? அப்படியாயின் இதற்கு முன்னர் அந்த உளவியல் பலம் எப்படி பத்திரிகைகளால் பாதிப்புக்குள்ளானது?

புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தால் மீண்டும் செய்தித் தணிக்கை அமுலுக்கு வருமா? அல்லது இனிமேல் புலிகள் தாக்கமாட்டார்கள் என்று அரசாங்கம் முடிவு செய்து விட்டதா? இப்படி பல கேள்விகள் எழுகின்றன. ●

# அண்டை மண்டலத்தில்....

காணகன்

புரட்சித் தலைவி ஆட்சி மீண்டும் மலர்ந்துவிட்டது. மீண்டும் பாலும் தேனும் ஆறாக ஓடப்போகிறதோ இல்லையே; வனப்பகுதிகளில் இரத்த ஆறு ஓடப்போகிறது. அப்பாவி மலைவாழ் மக்களின் கூக்குரல் இந்தியாவெங்கும் எதிரொலிக்கப்போகிறது. ஆம், ஜெயலலிதாவுடன் தேவாரமும் வந்துவிட்டார். சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கென உருவாக்கப்பட்டிருக்கும் அதிரடிப் படைக்கு அவரே தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஜெயலலிதா செய்த ஒரு சில சாதனைகளில் ஒன்று ஓய்வுபெற்றிருந்த ஐசக் வால்டர் தேவாரத்தை மீண்டும் அழைத்து வீரப்பனைப் பிடிக்கும் பொறுப்பினை அவரிடம் ஒப்படைத்ததுதான்.

# வந்தாரய்யா, தேவாரம் வந்தாரய்யா


இனி என்ன ஆகுமோ, எப்படியெல்லாம் போலிசார் தங்களைத் துன்புறுத்தப் போகிறார்களோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பவர்கள் வீரப்பன் நடமாடும் வனப்பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள்தான். ஏற்கெனவே ஒருமுறை இதே அதிரடிப்படைக்கு தேவாரம் தலைமை தாங்கியபோதுதான் சொல்லொணா மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்தன. அப்பாவி மலைவாசிகள் பலர் கொல்லப்பட்டனர்; சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். அவர்கள் வீட்டுப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் சிறையிலடைக்கப்பட்டனர். தலைவர் என்று அறிவிக்கப்பட்டவுடன் நிகழ்ந்த முதல் செய்தியாளர் சந்திப்பில் தேவாரம் வழக்கம் போல தனது மீசையை முறுக்கிக்கொண்டு "இந்தப் பணிக்காக ஒப்பந்தக்காலம் ஒரு வருடம்தான் அதறகுள்ளேயே வீரப்பனைப் பிடித்து விடுவேன்- உயிருடனோ, பிணமாகவோ, விடப்போவதில்லை!" என்று சூளுரைத்தார்.

"சரி, உங்கள் போலிசார் தேடுதல் வேட்டையில் ஈடுபடும்போது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் எழுகின்றனவே" என்று கேட்டபோது, அதற்கு நேரடியாக பதிலளிக்காத தேவாரம், "எங்களது ஒரே நோக்கம் வீரப்பனைப் பிடிப்பதுதான். இத்தகைய குற்றச்சாட்டுக்களைக் கண்டு நாங்கள் மனம் தளரப்போவதில்லை" என்றார்.

தனது வாழ்நாளில் மாபெரும் லட்சியமே வீரப்பனைப் பிடிப்பதுதான் என்றும் அது நிறைவேறும் வரையில் தான் ஓயப்போவதில்லையென்றும் அவர் வீரம்பேசினார்.

எண்பதுகளில் அப்படித்தான் நக்சலைட்டுக்களை ஒழிக்கிறேன் பேர்வழி என்று சொல்லிக்கொண்டு அப்பாவி இளைஞர்கள் பலரை வடமாவட்டங்களில் சுட்டுத்தள்ளினார். இப்படியெல்லாம் செய்யலாமா என்று கேட்டதற்கு, "கம்யூனிஸ்டுகளை ஒழிக்க வேண்டும். அதற்காக எதையும் செய்யத் தயங்கமாட்டேன்" என்று முண்டா தட்டினார்.

நக்சலைட் இயக்கம் ஒடுக்கப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் கொல்லப்பட்ட இளைஞர்களுக்கு, அழிக்கப்பட்ட



குடும்பங்களுக்கு, என்ன பதில்? கிராமப்புறங்களில் நடந்து வந்து, இன்னமும் தொடரும் பண்ணையாளர்களின்-மேல்சாதியினரின் அட்டூழியங்கள், அத்துமீறல்கள், தாங்கொணா வறுமை இவையெதுவும் தேவாரத்தின் கண்ணை உறுத்தாத நக்சலைட் ஒழிப்பில் அவர் மும்முரமாக ஈடுபட்டிருந்தபோது, அவரைப் பற்றி கேரளாவைச் சேர்ந்த தலைசிறந்த எழுத்தாளர் மற்றும் காட்டூனிஸ்ட், ஓ.வி.விஜயன் என்பவர் கூறினார்: "தேவாரம் லஞ்சம் வாங்காத அதிகாரியாக இருக்கலாம். ஆனால் அன்றாட மக்களின் பிரச்சினைகளோ, லட்சியவாதிகளின் கனவுகளோ அவருக்குப் புரியாது. அவர் ஒரு காவல்துறை அதிகாரி, சட்டம் ஒழுங்கினைப் பராமரிக்கவேண்டும், சட்டத்தை மீறுபவர்களை தண்டிக்க வேண்டும். தப்பியோடுபவர்களைப் பிடிக்கவேண்டும். அவ்வளவுதான் அவருக்குத் தெரியும். இந்தப் பணியில் எந்த குறுக்கீடு வந்தாலும் தயவு தாட்சணியம் இல்லாமல் அதையெல்லாம் நொறுக்கித்தள்ளவேண்டும். இப்படித்தான் அவர் சிந்தனையோடுகிறது. தெய்வபக்தி மிகுந்த ஒரு ப்ராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர் என்ற முறையில், அவருக்கு கறுப்பு, வெள்ளை இரண்டுதான் தெரியும். இடைப்பட்ட நிறங்கள் கண்ணில் படாது. பாவம், புண்ணியம் என்ற நேரெதிர் துருவங்களைத்தான் அறிந்து வைத்திருக்கிறார். ஏன் பாவச்செயல் புரியப்படுகிறது என்பது பற்றியோ, எது பாவம் என்பது பற்றியோ அவருக்கு தெளிவான சிந்தனை கிடையாது.

ஆனால் அப்படிப்பட்ட விமர்சனங்கள் தேவாரத்தைப் பாதிப்பதில்லை. இன்னொன்றையும் இங்கே நோக்கவேண்டும். அப்படியொன்றும் சுத்த சுயம்பிரகாச அதிகாரியுமல்ல அவர். லஞ்சம் வாங்குவதில்லை என்பது உண்மைதான். ஆயினும் பெண்வேட்டையில் அவர் எந்த பச்சாத்தாபமும் பார்ப்பதில்லை என்பது ஊரறிந்த இரகசியம்.

"சார் அது மட்டும்தான் அவர்கிட்ட ஒரு வீக்னஸ்" என்பார்கள் அவரது ஆதரவாளர்கள்.

அவர் திருமணம் செய்துகொள்ளவில்லை. பணியினைத் திருமணம் செய்துகொண்டுவிட்டார் என்பார்கள். அந்த அளவுக்கு வெறித்தனமான ஈடுபாடு. சரி எந்த மனிதனிடமும் தவிர்க்கவியலாத பாலியல் உணர்வுகளுக்கு என்னதான் வடிகால். போகுமிடத்தில் எல்லாம் அவருக்கு பெண் தேவைப்படும். போலிசார் எப்படி அதை நிறைவேற்றி வைப்பார் என்பதை விளக்கவும் வேண்டுமா என்ன? வீரப்பன் தேடுதல் வேட்டையில் கூட பாதிக்கப்பட்ட பல மலைவாழ் பெண்கள் தேவாரத்தை நேடியாகவே குற்றஞ் சாட்டியிருக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைக்குப் படிக்க வந்த ஒரு ஆஸ்திரேலியப் பெண் தனது குழந்தைக்கு தேவாரம்தான் தந்தையென்று வழக்குப் போட பெரும் பரபரப்பேற்பட்டது. பிறகு அடங்கியும் போயிற்று. மிக கௌரவமான மனிதனாகவே தேவாரம் இன்னமும் உலவுகிறார். அந்தப் பெண்ணின் கதி என்ன என்பதுதான் தெரியவில்லை.

இப்படிப்பட்ட ஒரு மனிதரிடம்தான் ஆயிரக்கணக்கான மலைவாழ் மக்களின் எதிர்காலத்தினை ஜெயலலிதா ஒப்படைத்திருக்கிறார். தேவாரத்தை எதிர்த்து நீதிபதி சதாசிவம் கமிஷனின் முன் சாட்சியமளித்த பெண்களின் கதி என்ன? அதிரடிப்படையினர் பல்வேறு அட்டூளியங்களைச் செய்தார்கள் என்று கூறியவர்களுக்கெல்லாம் இப்போது என்ன தண்டனை கிடைக்கும்? தவிரவும் ஆண்டுக்கணக்கில் வழக்கே நடத்தப்படாமல் மைசூர் சிறையினில் வாடும் 51 தடா கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென்பது ராஜ்குமார் கடத்தலின் போது வீரப்பன் வைத்த முக்கிய கோரிக்கையாகும்.

வீரப்பனின் கையில் மடிந்த ஒரு போலிஸ் அதிகாரியின் தந்தையுடன் 51 பேரும் வீரப்பனின் கூட்டாளிகள். அவர்கள் விடுதலை செய்யப்படக்கூடாது என்று மனுச் செய்ய, உச்சநீதி மன்றமும் அதை ஆமோதிக்க இன்னமும் அந்த 51 பேரும் அங்கேயே கொஞ்சங்கொஞ்சமாக மரித்துக் கொண்டிருக்கிறார்கள். விசாரணை வேகமாக நடக்கும் என்று கர்நாடக மாநில அரசு உறுதிமொழி கொடுத்து பல மாதங்களாகிவிட்டன. ஆயினும் அவர்களுக்கு விடிவு திறந்தபாடில்லை. தேவாரம் வந்துவிட்ட பிறகு மேலும் சுணக்கம் அவ் வழக்குகளில் உருவாகும்.

இதைப்பற்றியெல்லாம் யாருக்கென்ன கவலை? மீசையை முறுக்கிக்கொண்டு தேவாரம் வந்துவிட்டார். வீரப்பன் கதை முடிந்துவிட்டதென பந்தி பந்தியாக பத்திரிகைகள் எழுதத் துவங்கிவிட்டன.

இன்னொரு புறம் பழ.நெடுமாறன் போன்ற விடுதலைப்புலி ஆதரவாளர்கள் மீண்டும் இதுதான் சாக்கென்று மக்கள் பாதுகாவலர்கள் என்று கூட்டம் போடத்துவங்குவார்கள்.

தமிழ்நாடு சிவில் உரிமைக் கழகத் தலைவர் ரவிக்குமார், சிக்கலே அங்குதான் முளைக்கும் என்று அஞ்சுகிறார். "அதிரடிப் படை நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோருக்கும் விடுதலைப் புலிகளின் விவகாரத்திற்கும் துளியும் சந்பந்தமில்லை. ஆனால் விடுதலைப்புலி ஆதரவாளர்கள் அவர்களுக்காக குரல் கொடுக்க அப்படி ஒரு பிரமையினை ஏற்படுத்த தேவாரமும் ஜெயலலிதா அரசும் முயல்வர்.

பாதிக்கப்பட்டோருக்கும் வீரப்பனுக்குமே எந்தவிதத் தொடர்புமில்லை. அவர்களெல்லாம் அநியாயமாக பழி வாங்கப்படுகிறார்கள் என்பதுதான் எங்கள் வாதமே. அப்படியிருக்கையில் விடுதலைப்புலிகள் விவகாரத்திற்கும் இந்த அப்பாவி மக்களுக்கும் முடிச்சு போடுவதென்பது அம்மக்களின் நிலைக்கு மேலும் பின்னடைவினையே தோற்றுவிக்கும்.

ஆனால் இந்த இயங்கங்களும் தங்கள் நிலையினை எடுத்துக்கூற உரிமைஇருக்கத்தானே செய்கிறது. இந்த இக்கட்டிலிருந்து எப்படி மீளப்போகிறோம். இனி பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி மேலும் பிரச்சனை உருவாக்காமல் காப்பற்ற முடியும். எப்படி அவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தரலாம் என்பதே எங்கள் முன் உள்ள சவால்" என்கிறார் ரவிக்குமார்.

# இதுவொரு 'ஜல் நிகாஸ்' கதை

~மதி~

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் யாழ்நகரம் இன்றோ நாளையோ புலிகளிடம் விழலாம் என்றிருந்த நிலை. வீட்டுக்குள் தீப்பிடித்துவிட்டதைப் போல அரசாங்கம் பதறியது. யாழ் நகரம் புலிகளிடம் வீழ்வதை விடவும் ஆபத்தான பிரச்சனையொன்றை அரசாங்கம் எதிர்கொண்டது. குடாநாட்டில் இருந்த சுமார் 35 ஆயிரம் படையினரை எப்படி மீட்பது என்பதுதான் அரச தரப்பு உடனடியாக எதிர்கொண்ட பெரும் ஆபத்து!

எதற்கும் வெளிநாட்டு உதவியை நாடும் அரசாங்கம் இதற்கு மட்டும் அதை மறந்துவிடுமா என்ன? வெளிநாட்டமைச்சர் இந்தியாவுக்குப் பறந்து உதவி கேட்டார். இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று கோரினார். ஆனால் கறுப்புப் பூனை என்றாலும் இந்தியா சூடுகண்ட பூனைதானே. 'வரமாட்டோம்' என்று கூறிவிட்டது. என்றாலும் பழைய 'ஃபிரண்ட்ஷிப்பை' ஒரேயடியாக நிராகரிக்க முடியாததால் குடாநாட்டில் சிக்குண்டு கிடக்கும் படையினரை மட்டும் மீட்டு வெளியில் கொண்டு வர உதவுகிறோம் என்று கூறியது.

யாழ்ப்பாணத்திலிருந்து படையினரை மீட்பதற்கு இந்தியா தயாரித்திருந்த திட்டம் குறித்து அந்தநாட்டு பாதுகாப்பு அமைச்சின் கடந்த வருடத்துக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் வெளியான அந்த அறிக்கையின்படி குடாநாட்டுக்குள் சிக்குண்டிருந்த 35,000 படையினரையும் மீட்பதற்கான அவசரத் திட்டத்தை இந்தியப் பாதுகாப்பு அமைச்சு தயாரித்தது. 'Operation Jalnikas'- 'ஒபரேஷன் ஜல்நிகாஸ்' என்பதே இந்தக் கடல் வழி நடவடிக்கையின் பெயர் முழுக்க முழுக்க இந்தியக் கடற்படையே இந்த அப்புறப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுமெனவும், இதற்கு இந்திய விமானப்படையினதும் தரைப்படையினதும் உதவியையும் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கேற்ப தமிழக, கேரள கடற்பரப்புகளில் இந்தியக் கடற்படைக் கப்பல்கள் நங்கூரமிடத் தொடங்கின. 35,000 இலங்கை இராணுவத்தையும், குறைந்தது 24 மணிநேர இடைவெளிக்குள் மீட்டுவிட வேண்டுமென்பதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும். எனினும் 24 மணிநேரத்திற்குள் 35,000 பேரையும் மீட்பதென்பது இலகுவான காரியமல்ல என்பதால் இந்திய விமானப்படையின் துருப்புக்காவி விமானங்கள் மற்றும் சரக்கு விமானங்களின் உதவியையும், சரக்குக் கப்பல்களது உதவியையும் அவசரமாகக் கோரவும் திட்டமிடப்பட்டது.

அதேநேரம், யாழ்.குடாநாட்டில் இவ்வாறானதோர் அதிரடி நடவடிக்கையை மேற்கொள்வதற்கான துறைமுகமாக காங்கேசன்துறை துறை முகமே அமைந்திருந்தது. பருத்தித்துறையில் துறைமுகமொன்றுள்ள போதிலும், சிறிய சரக்குக் கப்பல்களையே அங்கு கொண்டுவர முடியும். இதேவேளை, காங்கேசன்துறை துறைமுகம் கூட இந்தியக் கடற்படையின் பாரிய கப்பல்கள் நுழைய முடியாத ஆழம் குறைந்த கடற் பரப்பையே கொண்டிருப்பதால் இலங்கைக் கடற்படையின் துருப்புக் காவிகளது உதவியுடனும், இந்திய சரக்குக் கப்பல்களது உதவியுடனும் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து 500 படையினர் வீதம் ஏற்றி நடுக்கடலில் தரித்து நிற்கும் இந்திய கடற்படைக் கப்பல்களுக்கு மாற்றி அங்கிருந்து அடுத்த துறைமுகத்திற்கு அனுப்பவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

எனினும், இவ்வாறு ஏற்றப்படும் இலங்கைப் படையினரை அடுத்து துறைமுகத்திற்குக் கொண்டு செல்லும் நடவடிக்கையானது மிக அமைதியாக நடைபெற வேண்டுமென்பதால் இதற்கான ஒத்துழைப்பை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி.ஆர்.சி) ஊடாக விடுதலைப் புலிகளிடமிருந்து பெறவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் மீட்கப்படும் இலங்கைப் படையினரை அடுத்த துறைமுகத்திற்கு (பெரும்பாலும் அது திருகோணமலை) கடல் வழியூடாகக் கொண்டு செல்வதாயின் கடற்பாதையும் பாதுகாப்பான கடற்பயணத்துக்கான அனுமதியையும் புலிகளிடமிருந்து ஐ.சி.ஆர்.சி ஊடாகப் பெறவேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அதேநேரம், இவ்வாறான நடவடிக்கையொன்றின் போது இலங்கைப் படையினரது ஆயுதங்களையும், போர்த் தளபாடங்களையும் கப்பலில் எடுத்துச் செல்ல புலிகள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதால் அவற்றையெல்லாம் விட்டு விட்டு வெறுமனே 35,000 படையினரை மட்டும் மீட்டு வெளியேற்றுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்களைக் குறுகிய நேர கடல் நடவடிக்கையின் போது சாதகமற்றதோர் துறைமுகத்தில் வைத்து ஏற்ற முடியாதென்பதுடன் ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்களையும் சேர்த்து மீட்கும் பட்சத்தில் மீட்புப் படையணிகள் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகும் வாய்ப்புக்கள் இருந்ததால் அவ்வாறானதோர் 'ரிஸ்க்' எடுக்கக் கூடாதெனவும் இந்தத் திட்டத்தைத் தயாரித்தோர் அறிவுறுத்தியிருந்தனர்.

அத்துடன், இந்த மீட்பு நடவடிக்கையானது மூன்று நிபந்தனைகளின் கீழ் நடைபெறவேண்டுமெனவும் இந்திய அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டது. முதலாவதாக யாழ்நகர் புலிகளிடம் விழ வேண்டும். அடுத்து இலங்கைப் படையினரை மீட்டுத்தருமாறு இலங்கை அரச உத்தியோக பூர்வமாகக் கோர வேண்டும். மூன்றாவதாக இந்த மீட்பு நடவடிக்கைக்காகக் குறிப்பிட்ட மணிநேரத்திற்கு (24 மணித்தியாலம் அல்லது 48 மணித்தியாலம்) இரு தரப்பும் போர் நிறுத்த மொன்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே இவையாகும். மனிதாபிமான ரீதியிலான இந்த நடவடிக்கையின் போது இழப்புகள் எதுவும் (Zero casualty) ஏற்படக் கூடாதென்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கை அரசு கோரும் பட்சத்தில் இந்த நடவடிக்கையில் இந்தியக் கடற்படையின் விசாகப்பட்டினத்தை தலைமையகமாகக் கொண்ட கிழக்குப் பிராந்தியக் கடற்படையினரே ஈடுபடவிருந்தனர். எனினும், பொறியில் சிக்குண்டிருந்த 35,000 படையினரையும் அவசர அவசரமாக மீட்பதற்கேற்ற கப்பல் வசதிகள் இவர்களிடம் இருக்கவில்லை. ஒரே முறையில் 450 படையினரை ஏற்றக் கூடிய 'Landing Ship Tanks' (LSTs) என்பனவே விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் இருந்தன. இதனால், சரக்குக் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இத்தனை பெரியதொரு திட்டத்தை அமுல் செய்ய வேண்டிய தேவை ஏற்படாமலே போய்விட்டது. என்றாலும் இந்த உத்தேச திட்டத்தின் மூலம் அவசர நிலமை ஒன்றின் போது மனிதாபிமான உதவிகளை வழங்குவது குறித்து இந்தியா சிறந்த அனுபவம் ஒன்றை பெற்றதாக அதன் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உள்வீட்டு முரண்பாடுகளுக்கு மத்தியில் பேரினவாதிகளுக்குக் கிடைத்த கப்பம்

ஒரு விசேட ஆய்வு: எஃப். என்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சியின் அடுத்த கட்டம் என்ன? இது இன்று இலங்கை மக்கள் அனைவரது மனதிலும் உள்ள ஒரு கேள்வி

இந்த இருதரப்பினருக்கும் இடையில் உண்மையிலேயே பேச்சு வார்த்தை ஒன்று நிகழுமா அல்லது எல்லாம் முடிந்து விட்டதா? கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக ஒஸ்லோ, இலண்டன், கொழும்பு, வன்னி, டில்லி, வாஷிங்டன் என்று வலம் வரும் எரிக் சொல்ஹெய்மின் அடுத்த நகர்வு எப்படியிருக்கப் போகிறது என பல்வேறுபட்ட உப கேள்விகளுக்கு மத்தியில் இன்று நாட்டு மக்களும் அரசியல் வட்டாரங்களும் வாய் பிழந்து நிற்கின்றனர்.

பெரும்பான்மையான மக்கள் இந்த பிரச்சனைகளுக்கான தீர்வை அறிவதில் ஆர்வமாக இருக்கிறார்கள். ஆனால் இவற்றிற்கான நிச்சயமான பதில் எவரிடமும் இல்லை.

இனப்பிரச்சனைக்கு சமாதானத்தீர்வு காண்பது குறித்து தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி தான் பங்குபற்றும் ஒவ்வொரு வைபவத்திலும் தவறாமல் வலியுறுத்தி வருகின்றார்.

கடந்த வாரம் கூட தேசிய தொலைக்காட்சியுடனான கலந்துரையாடலிலும் கம்பளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றிலும் ஜனாதிபதி மாளிகையில் வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்தித்தபோதும் திருமதி குமாரதுங்க தமது நிலைப்பாட்டை தெரிவித்தார்.

இனப்பிரச்சனைக்கு பேச்சு வார்த்தை மூலம் எட்டப்படும் உடன் பாட்டைத் தவிர வேறு தீர்வு கிடையாது என்று ஜனாதிபதி கூறிவருகிறார்.

இன்று நாட்டு மக்களில் அனேகமானவர்கள் அமைதிக்காக ஏங்குகிறார்கள். அரசியல், சமூக, சமய, இன மொழி பேதங்களுக்கு அப்பால் பொதுமக்களில் பெரும் பகுதியினர் நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதையே பெரிதும் விரும்புகின்றனர்.

நோர்வேயின் சமாதான முயற்சி தற்போது சந்தித்திருக்கும் நெருக்கடிக்குக் காரணம், அரசாங்கம் விடுதலைப்புலிகள்மீது விதித்திருக்கும் தடையை நீக்க மறுப்பதே. நிலமை சிக்கலில் இருந்தாலும் சொல்ஹெய்ம் தமது முயற்சியை இன்னமும் கைவிடவில்லை. அமெரிக்கா சென்று அந்த நாட்டு அரசாங்க உயரதிகாரிகளை சந்தித்த அவர் இந்த வாரம் இலண்டனில் புலிகள் தரப்பு பிரதிநிதியான அன்டன் பாலசிங்கத்தை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இப்படியானதொரு பின்னணியில் கடந்தவாரம் பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக வெளியிட்டிருக்கும் கருத்து வியப்புடன் நோக்கப்பட்டுள்ளது.

தனது சொந்த ஊரான ஹொரணையில் நடைபெற்ற பைபவம் ஒன்றில் உரையாற்றிய பிரதமர் "இந்தப் பிரச்சனையை இன்னுமின்னும் சர்வதேச மயப்படுத்தாமல் இதை தம்மால் தீர்க்க முடியாது என்பதை உணர்ந்து நோர்வே தூதுவர் இந்த முயற்சியில் இருந்து விலகிக்கொள்வது சிறந்தது," என ஒரு மூன்றாவது நபர் தன்னிடம் கூறியதாக தெரிவித்துள்ளார்.

இந்த செய்திக்கு சர்வதேச வெகுஜன தொடர்பு சாதனங்களில் முக்கியத்துவமளிக்கப்பட்டிருந்தது. சில வெளிநாட்டு இராஜ தந்திரிகள் இதனை சிங்கள அடிப்படைவாதத்தின் வெளிப்பாடாக விமர்சித்திருந்தனர். நோர்வேயிற்கு எதிரான கருத்தாகவும் இது சித்தரித்துக் காட்டப்பட்டது.

எல்லாவற்றையும் விட பிரதமரின் இந்தக் கூற்றை வைத்து அரசாங்கத்துக்குள் இனப்பிரச்சனை குறித்து இரண்டு வகையான கருத்துக்கள் இருப்பதை சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். ஜனாதிபதி தலைமையிலான ஒரு குழு நோர்வேயின் உதவியுடன் புலிகளோடு பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று விரும்பும் அதேவேளை பிரதமர் உள்ளிட்ட மற்றொரு குழு இந்தப் பிரச்சனையில் இருந்து நோர்வே விலகிக் கொள்ள வேண்டும் என்று விரும்புவதாகக் கருத இடமுண்டு.

நோர்வேயின் சமாதான முயற்சி தொடர்பில் அரசாங்கத்திற்குள் இருவேறு முரண்பட்ட கருத்துக்கள் நிலவுவதென்பது ஆரோக்கியமான விடயமல்ல.

ஒரே அரசாங்கத்துக்குள் ஒரே பிரச்சனை சம்பந்தமாக இரண்டு நிலைப்பாடுகள் இருப்பது பிரச்சனையை தீர்ப்பதற்கு ஏனைய தரப்புகளின் உதவியை நாடுவதில் பாரியதொரு முட்டுக்கட்டையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வடக்கு கிழக்கு பிரச்சனை சம்பந்தமாகவோ, பேச்சுவார்த்தை குறித்தோ அரசாங்க தரப்புக்குள் இருக்கும் முரண்பாடுகளை முதலில் களைய வேண்டும் என்று புலிகளோ சர்வதேச சமூகமோ கேட்டால் என்ன செய்யப் போகிறார்கள்? 'உங்களுக்குள் இருக்கும் முரண்பாடுகளுக்கு முடிவுகட்டாமல் எங்களோடு என்ன பேசப் போகிறீர்கள்?' என்று புலிகளால் கேட்க முடியும்!

இனப்பிரச்சனை தீர்வுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவும் பெறப்பட வேண்டும் என்பதில் விவாதத்திற்கு இடமில்லை. கடந்த வருடம் அரசாங்கம் சமர்ப்பித்த அரசியல் தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறாமல் போனமைக்கு ஐ.தே.க.வின் ஆதரவு கிடைக்காமல் போனதுதான் பிரதான காரணம். இன்று வரையும்கூட இதைச் சொல்லியே ரணிலை திட்டித் தீர்க்கிறார்கள்.

ஆனால் இது விடயத்தில் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் ஆதரவை கோர முன்னர் ஆளும் தரப்புக்குள் ஒருமித்த உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை வெளியில் இருந்து யாரும் சொல்லும் வரை காத்திருக்கத் தேவையில்லை!

இந்நிலையில் தங்களது ஓட்டைகளை மறைப்பதற்காக ஐ.தே.க.மீதும் ஏனைய சிறுபான்மைக் கட்சிகள்மீதும் சேறு பூசும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்பாடு எந்தளவு நாகரிகமானது என்பதை சிந்திக்க வேண்டும். அதைவிட இப்படியொரு நிலையில் எதிர்க்கட்சியின் ஆதரவை கோருவது கேலிக்குரியது!

உண்மையில் அரசாங்கம் விடுதலைப் புலிகள்மீது விடுத்திருக்கும் தடைகூட புலிகளுக்கு எதிரான சர்வதேச பிரசாரத்தை முன்னெடுப்பதற்காகவோ அல்லது யுத்த ரீதியிலான சாதகத் தன்மையை பெறுவதற்காகவோ விதிக்கப்பட்டதல்ல; இதுவும் பேரினவாதிகளை திருப்த்திப் படுத்த வழங்கப்பட்ட ஒரு கப்பம் என்றுதான் கூற வேண்டும்.

தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதலை அடுத்து அரசாங்கம் புலிகளை தடைசெய்தது. ஆனால் அதற்கு முன்பாகவே இந்தியாவில் புலிகள் தடை செய்யப்பட்டுவிட்டனர். மலேசியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் விடுதலைப் புலிகள்மீது தடை விதித்திருப்பது இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதற்காகவோ, அல்லது சிலர் தம்பட்டம் அடிப்பதைப் போல எமது வெளிநாட்டமைச்சரின் பிரசாரத்துக்கு கிடைத்த வெற்றியோ அல்ல. அந்த நாடுகள் தமது மண்ணில் பயங்கரவாத அச்சுறுத்தலை கட்டுப்படுத்த முடிவு செய்து பல இயக்கங்களை தடை செய்தன. அதில் விடுதலைப் புலிகளும் ஒரு இயக்கம்.



வெளிநாடுகளில் புலிகள் தடை செய்யப்பட்டிருப்பதால் இலங்கையில் அந்த இயக்கம் மீதான தடையை நீக்க முடியாதுள்ளது என்று அரச தரப்பினரால் கூறப்படும் கருத்து சரியானதல்ல. உண்மையாக அரசாங்கத்துக்கு இருக்கும் பிரச்சனை இதுவல்ல, உள்ளே இருக்கும் அரசியல் நெருக்கடிதான் காரணம்!

பேச்சுவார்த்தை மேசையின் ஒரு பக்கத்தில் அரசாங்கம் ஒன்றின் கௌரவமான பிரதிநிதிகள் அமர்ந்திருக்க மறுபக்கத்தில் 'கண்ட இடத்தில் சுடவேண்டிய பயங்கரவாதிகள்' அமர்ந்து பேசுவதென்பது எல்பின்ஸ்டனில் நடக்கும் விநோதமான மேடை நாடகம் போல தான் இருக்கும்.

இப்படியொரு மேசையில் இருந்து பேசுவது அரசாங்கத்தின் பிரதிநிதிகள் வெட்கப்பட வேண்டிய விஷயமாக இல்லாவிட்டாலும் அரசாங்கத்தின் பாஷையில், 'பயங்கரவாதிகளுக்கு' இதுவொரு கௌரவப் பிரச்சனையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் அவர்கள் சட்டத்தின் முன்னிலையில் பேச்சுவார்த்தைக்காக சம அந்தஸ்த்து கேட்கிறார்கள்.

அரச தரப்பு கூறுவது போன்று மேற்கு நாடுகள் புலிகளை தடை செய்திருப்பது இலங்கைக்கு உதவுவதற்குத்தான் என்றால், இப்போது சமாதான பேச்சு வார்த்தை களை ஆரம்பிக்க இருக்கும் ஒரே முட்டுக் கட்டை புலிகள் மீதான தடை தானென்றால் சமாதானத் துக்காக வேண்டி அந்தத் தடையை நீக்கலாமே! ஏனெனில் வெளிநாடுகள் புலிகள்மீது தடை விதித்தது இலங்கையின் நலனுக்காகத்தானே!

அரசாங்கம் வெளிநாடுகளின் கருத்துக்கு மதிப்பளிக்கின்றது என்பதல்ல. அதன் சிந்தனை முற்றிலுமாக பேரினவாதிகளின் கருத்துடன் ஒருமித்துப் போவதுதான். பிரதமர் உட்பட அமைச்சரவையில் ஒரு சக்திமிக்க பிரிவு இந்த பேரினவாத சிந்தனையின் மூலவேர்கள். இந்தப் பிரிவினரையும் அவர்களது ஆதரவாளர்களையும் திருப்திப் படுத்தத்தான் புலிகள் மீது அரசாங்கம் தடை விதித்தது. அதுவன்றி இந்தத் தடையால் எந்த இலாபத்தையும் அரசாங்கம் அப்போது எதிர் பார்க்கவில்லை.

இது இந்த நாட்டின் துரதிஷ்டம். நாட்டை பாதுகாக்கவும் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணவும் என்று கூறி பலரால் ஒன்றுசேர்ந்து அமைக் கப்பட்ட அரசாங்கத்தின் கிளைகளே அந்த இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களை மெதுமெதுவாக புதைத்துக் கொண்டிருக்கின்றன.

இத்தகையதொரு பின்னணியில் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்று அவர்களுடன் பேச்சு வார்த்தையில் இறங்குவதென்பது அரசாங்கத்துக்குள் இருக்கும் பேச்சுவார்த்தையை விரும்பும் தரப்பு தங்களுடனேயே இருக்கும் பேச்சுவார்த்தையை விரும்பாதவர்களுடன் கட்டும் ஆபத்தான பந்தயமாகத்தான் அமையும்.

ஜனாதிபதியும் அரசியல் தீர்வை விரும்பும் ஏனைய அமைச்சர்களும் தமது அரசியல் எதிர்காலத்தை பணயம் வைத்துத்தான் இத்தகையதொரு முயற்சியில் இறங்க வேண்டிய நிலமைதான் இன்று காணப்படுகின்றது. எவ்வாறெனினும் பரீட்சாத்த முயற்சிகளில் ஈடுபட்டும் நிதானமாக ஆழம் பார்த்தும் செயற்படும் காலம் கடந்து விட்டது.

ஜே.வி.பி.யின் ஆயுத செயற்பாடு உக்கிரமடைந்திருந்த காலப்பகுதியில் இவர் தென்னிலங்கையில் மேற்கொண்ட மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்தும் யுத்தப் பிரதேசங்களில் கடமையாற்றிய காலத்தில் தமிழ் மக்களுக்கு இவரது உத்தரவின் பேரில் நடந்த அனர்த்தங்கள் தொடர்பாகவும் பல மனித உரிமை அமைப்புகள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து இவரது நியமனத்தை ஏற்பதில் அந்த நாட்டு அரசாங்கம் தாமதம் காட்டியது. பின்னர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதில் நேரடியாக தலையிட்டு அவுஸ்திரேலிய தூதுவராக ஜானக பேரேராவை நியமித்தார். இன்னும் ஓரிரு வாரங்களில் அவர் அங்கு பதவி ஏற்கவிருப்பதாக கூறப்படும் நிலையில் பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக தலைமையிலான பிரிவு இவரை மீண்டும் போர்க் களத்தில் இறக்க முயற்சி மேற்கொண்டு வருகிறது.

வட-கிழக்கு யுத்த நடவடிக்கைகளுக்கான பிரதம தளபதி என்ற அதி உயர் பதவி ஒன்றை ஏற்படுத்தி அதை ஜானக பெரேராவுக்கு வழங்க திட்டமிடப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

போர் உக்கிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவும் தமிழனை கூடுதலாக கொன்று குவிக்கக் கூடிய தளபதிகள் அதற்கு தலைமை தாங்க வேண்டும் என்பதில் அரசாங்கத்துக்குள் இருக்கும் கடும் போக்காளர்கள் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமே!

இந்நிலையில் இவர்களை மீறி சமாதானம், பேச்சுவார்த்தை, என்று எதை ஆரம்பித்தாலும் அது எப்படி வெற்றிபெறும் என்று நியாயமான கேள்வி எழாமலா இருக்கும்?

அதை விட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை இன்னும் கொஞ்சம் ஆழமாக அவதானித்தால் யுத்தத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற குழுவே பலம் பொருந்தியதாக இருப்பதையும் கண்டு கொள்ளலாம்.

இந்த சதுரங்கத்தில் காலத்துக்குக் காலம் வெவ்வேறு தரப்புக்கள் வெற்றி பெறுகின்றன. மக்கள்தான் நிரந்தரமாக தோற்றுக் கொண்டிருக்கிறார்கள்!

உள்ளுக்குள்ளேயே இருக்கும் இத்தகையதொரு சவாலை வெற்றிகொண்டு பேச்சுவார்த்தை ஆரம்பமாகுதென்பது இலகுவானதல்ல. பேச்சுவார்த்தையை விரும்பாத தரப்பு யுத்தம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் எத்தனை உறுதியாக இருக்கின்றது என்பதற்கு மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை மீண்டும் போர்க்களத்துக்கு அனுப்ப எடுக்கப்படும் முயற்சி-மிக அண்மைய உதாரணம்.

இலங்கை இராணுவத்தின் சிஷ்ேட தளபதிகளில் ஒருவராகக் கடமையாற்றிய ஜானக பெரேரா இராணுவத்தளபதி பதவி தொடர்பாக மனக்கசப்புற்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பதவி விலகிச் சென்றார். இவரை அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக நியமிக்க அரசாங்கம் முடிவு செய்தது. ●

## அதிரடி அய்யாத்துரை



**நாட்டில ஆயிரம்** பிரச்சனை இருக்கேக்க சேறு பூசுற வேலைய மட்டும் எத்தன ஸ்பீட்ல செய்யினம் எண்டு பார்த்தியளே. 83 கலவரத்த விசாரிக்கோணமெண்டு கணேசமூர்த்தியார் ஒரு ஜோக் விட்டவரல்லோ? அதப்போய் படு சீரியஸா ஆலோசிச்சிருக்கினம். உதுல பாருங்கோ இப்ப தமிழ் மக்களுக்கு இருக்கிற ஒரே பிரச்சனை 83ல் தீ வச்சது ஆரெண்டு தெரியாததுதான்! நட்ட ஈடு வாங்கிக் கொடுக்கப் போகினமாம். 94க்குப் பிறகு அழிச்ச தமிழரின்ர சொத்துக்களுக்கு எல்லாம் குடுத்திட்டினமோவெண்டு யோசிக்கிறன். என்னதான் இருந்தாலும் உந்த அளவுக்கு மக்கள மேய்க்க நினைக்கக்கூடாது.

**மாவனெல்லை மக்கள** சொன்னபடி எல்லோருமாச் சேர்ந்து ஏமாத்திப் போட்டினம். கோடிக்கணக்கில அழிஞ்சதா ஆளாளுக்கு கணக்கு சொல்லிட்டு கடைசில ஆயிரத்துக்குள்ள எஸ்டிமேட் பண்ணி வச்சிருக்கினம். உதக்கூட உருப்படியா வாங்கிக் கொடுக்க முடியாம கைவிரிச்சுப் போட்டு வீராப்பு பேசுறதுதான் எரிச்சலாக் கிடக்கு. நட்ட ஈடு கேட்டு பொலிசு, ஏ.ஜி.ஒபிஸ் எண்டு மக்கள் ஓடித்திரிய தலைவர்கள் எகிப்து சுவிஸ்செண்டு பறந்து திரியினம்.

**சாசனத்த காக்கவெண்டு** சொல்லி பொலோன்போயாவில ஆயிரம் பேருக்கு மொட்டை போட்டு காவி அணிவிச்சிருக்கினம். உவை சாசனத்த காக்கினமோ இல்லையோ இந்த நாடு உருப்படாதபடி கவனமா பார்த்துக் கொள்ளினம்.

**பச்சை அணியின்ர** நம்பிக்கையில்லா தீர்மானம் பிசுபிசுக்கத் தொடங்கிட்டுது. அரசாங்கத்தை கவிழ்க்கப் பார்த்தால் விலகிப்போயிடுவம் எண்டு சொல்ற அளவு 'விசு வாசிகள்' இருக்கிற எதிர்க்கட்சியாப் போச்சு. உதில இருந்து என்ன விளங்குதெண்டால், எதிர்க்கட்சியில இருக்கிறவையும் மனம் கோணாதபடி ஆளும் தரப்பால கவனிக்கப்படுகினம். வெளியில திட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள்ள என்னென்ன பரிமாற்றங்களோ...

**பாதுகாப்புக்குப் பொறுப்பான** பிரதி அமைச்சர் மனக்கசப்புற்று கொஞ்சக்காலம் ஒதுங்கியிருந்தவர் மீண்டும் ஓடித்திரிய ஆரம்பிச்சிருக்கிறாரல்லோ. கடந்த வாரம் அரச ஊடகங்களின்ர பெரும் புள்ளிகளை கூப்பிட்டு படையினரை உச்சி குளிர மெச்சோணமெண்டு கடும் உத்தரவு போட்டவராம். பேப்பரில மட்டும் மெச்சிட்டால் போதுமோ களத்தில மெச்சிப்புகழுறபடியோ நடந்துக்கினம்.

**ரொம்ப நாளைக்குப்** பிறகு உங்களுக்கு ஒரு கவிதை அல்லது பொன்மொழி, எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்.

**பொல்லாத உலகமிது**
**தயங்கித் தயங்கி பேசினால்**
**உண்மையை சந்தேகிக்கிறது.**
**இனிக்க இனிக்க பேசினால்**
**பொய்யை சம்மதிக்கிறது.**

(ராஜசேகர்)

# உண்மைத் தொடர் 10

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடொல்ஃப் ஹிட்லர்

ஹிட்லர் கடும் கோபத்துடன் அமர்ந்திருந்தான். அருகில் இருந்த சகலரும் அவனையே கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஜெர்மன் தொழிற்கட்சியின் தீவிர ஆதரவாளர் ஒருவர் பவாரியா நிருவாக பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்ட விஷயம் ஹிட்லரின் காதுகளுக்கு எட்டியதில் இருந்து அவன் கொதித்துப் போயிருந்தான். தனது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் கெட்ட வார்த்தைகளால் பவாரியா உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்களைத் திட்டித்தீர்த்தான்.

தொழிற்கட்சி கூட்டம் ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த கட்சி ஆதாரவாளர் ஒருவர் அன்றைய தினம் காலை காரணம் எதுவுமின்றி கைது செய்யப்பட்டார். தடுத்து வைக்கப்பட்ட அந்தத் தொண்டர் சித்திரவதை செய்யப்பட்டதாக கூறப்பட்டதையடுத்து தனது பரா மிலிட்டரி இராணுவ அதிகாரிகள் சகிதம் ஹிட்லர் கட்சிக் கூட்டத்தை கூட்டியிருந்தான்.

தீவிர மதவாதிகளாக இருந்த பவாரியா தலைவர்கள் ஹிட்லரின் எழுச்சியை கட்டுப்படுத்த சமய அடிப்படையிலான பிரசாரங்களை மேற்கொண்டபோதும் அது பயனளிக்கவில்லை.

பிறப்பில் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த ஹிட்லர் நீண்டகாலத்துக்கு முன்னரே தமது மதச்சார்புத் தன்மையை முற்றாக இழந்திருந்தான். இதனை பயன்படுத்த அவனுக்கு எதிரான சக்திகள் முயற்சித்த போதும் அது வெற்றி பெறவில்லை.

1922ம் ஆண்டு ஹிட்லருக்கு சிறந்த முன்னுதாரணம் ஒன்று இத்தாலியில் இருந்து கிடைத்தது. அந்த நாட்டின் பாஸிச கொடுங்கோன்மைவாதி முசோலினி தனது படையணியை பலப்படுத்தி தலைநகரை கைப்பற்றியதுடன் 'ரோம் நகருக்கான யாத்திரை' என்ற புரட்சியின் மூலம் ஆட்சியை கைப்பற்றினான்.

முசோலினியின் இந்த செயல்முறை ஹிட்லருக்கு பெரும் உற்சாகத்தைக் கொடுத்தது.

இதே போன்றதொரு சதித்திட்ட ஆட்சிக் கவிழ்ப்பு கமால் அத்தார் தலைமையில் துருக்கியிலும் அரங்கேற்றப்பட்டிருந்தது.

இவற்றை நன்கு அவதானித்த ஹிட்லர் தனது கனவை நிறைவேற்றுவதற்கான ஒத்திகையை மனதால் பார்த்துக்கொண்டான்.

முசோலினியிடமிருந்து ஹிட்லரின் தொழிற்கட்சி பல இராணுவ சிவில் நடைமுறைகளை பின்பற்றியது.

ஹிட்லர் தனது படைப்பிரிவுகளில் முசோலினியின் பாணியில் பல மாற்றங்களை செய்தது போலவே புதிய புதிய பெயர்களில் பொதுக்கூட்டங்களையும் நடத்தினான். மக்கள் ஆதரவைத் திரட்டும் நோக்கத்துடன் தொழிற்கட்சியினால் அறிமுகம் செய்யப்பட்ட 'மரியாதைக்குரியவர்களின் ஒன்றுகூடல்', 'தொழிலாளர்களின் ஒன்றுகூடல்' என பல்வேறு அம்சங்கள் இத்தாலியைப்பின்பற்றி ஜெர்மனியில் அறிமுகம் செய்யப்பட்டது.

பிற்காலத்தில் நாஸிகளின் தாரகமந்திரமாக உச்சரிக்கப்பட்ட "ஒரே மக்கள். ஒரே நாடு. ஒரே தலைவர்" என்ற புகழ்பெற்ற ஹிட்லரின் வாசகம்கூட முசோலினியிடமிருந்து பெறப்பட்டதுதான்.

ஹிட்லர் மனதில் என்ன நினைத்திருந்தானோ அது இத்தாலியில் செயல்படுத்தி முடிக்கப்பட்டது. ஆனால் தன்னை இன்னும் பலப்படுத்திக் கொள்ளாமல் முசோலினியின் பாணியில் செயற்பட அவசரப்படக்கூடாது என்பதில் அவன் கவனமாக இருந்தான்.

•••

ஹிட்லர் தனக்கு வசதியான இரவுகளை பெரும்பாலும் நண்பி கெதரினுடனேயே கழித்தான். ஆனால் தன்னை சந்திக்க வந்து தன்னுடன் ஒரு முறை உறவு கொண்ட அந்த பல்கலைக்கழக மாணவியிடம் ஹிட்லரின் மனம் அதிக ஈடுபாடு காட்டியது.

அவளை தொடர்பு கொண்டு அழைத்திருந்தான்.

"என்ன வேண்டும்?" தெளிவான



ஜெர்மன் பாஷையில் வெளிப்படையாக கேட்டாள்.

"நீ."

"நீயென்றால்?"

"முழுவதுமாக நீ. அன்றிருந்த அதே நீ."

அவளது விலகியிருந்த மேற்சட்ட சரிசெய்யப்படாமலே இருந்தது.

## ஷொனு

"ஆட்சியை கவிழ்க்கத்துடிக்கும் உனக்கு இதிலெல்லாம் கூட இத்தனை ஆர்வம் இருக்கிறதா..."

"இதில்...." என்று சொல்லி ஹிட்லரின் கைகள் சென்ற இடம்...

அதோடு அவள் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். அவனது தீவிரம் அவளை திக்குமுக்காடச்செய்தது.

வேதனை முனங்கல்களும் பெருமூச்சுக்களும் அந்த அறையை வெப்பமேற்றின.

★★★

இந்த நாட்களில் ஹிட்லருக்கு மிகவும் பிரயோசனமிக்கதொரு தொடர்பு கிடைத்தது.

ஜெர்மன் இராணுவத்தின் பெர்லின் நகர பிரதம கமாண்டராக இருந்த ஜெனரல் ஹான்ஸ்சீக்ட் என்பவருடன் நெருக்கமாகினான். இது ஹிட்லரின் முதலாவது சக்திமிக்க பெர்லின் இராணுவ தொடர்பாக அமைந்தது.

ஜெனரல் ஹான்ஸ் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளின் மேல் கடும் வெறுப்புக் கொண்டிருந்த ஒருவர். மிகச் சிறந்த திறமைசாலி என வர்ணிக்கப்பட்டவர்.

பவாரியா நிருவாகத்துக்குள் உள்ள அந்தரங்கங்கள், குழப்பங்கள் பலவற்றையும் பெர்லின் அரசின் பலவீனங்களையும் ஹிட்லர் இவர் மூலமாக அறிந்து கொண்டான். இவனது தேசியவாத கடும்போக்கு ஜெனரல் ஹான்ஸ்சுக்கு பிடித்திருந்தது. ஜெர்மனியை தலை நிமிர்ந்து நிற்கச் செய்ய வேண்டுமானால் ஹிட்லரைப்போன்று வீரம் மிக்க ஒருவர் நாட்டுக்கு தலைவராக வருவது அவசியம் என்று அவர் பகிரங்கமாக கூறினார்.

1922ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஜெனரல் ஹான்சும் ஹிட்லரும் பெர்லினில் சந்தித்தனர். தனது கட்டுப்பாட்டில் உள்ள படைப்பிரிவுகள் அவசர நிலைமை ஒன்றின் போது தனது உத்தரவுக்கு கீழ்ப்படியும் என்ற நம்பிக்கையை அவர் வெளியிட்டார்.

இது ஹிட்லருக்கு மிகவும் மகிழ்ச்சிகரமான விஷயமாக அமைந்தது. "நீயும் நானும் இணைந்து விட்டால் வேறு அதிகப்படியாக கூறுவதற்கு எதுவுமில்லை" என்று ஜெனரல் ஹான்ஸ் கூறினார்.

கட்சிக்கு ஆதரவு திரட்டி நாடளாவிய ரீதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஹிட்லர் திட்டமிட்டான்.

ஜெர்மனியின் ஒவ்வொரு கிராமமாகச் சென்றான். மக்களை சந்தித்து உரையாடினான். விவசாயம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதையும் பின் தங்கிய பகுதிகளில் மக்கள் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் வாழ்க்கை நடத்துவதையும் கண்டு கொண்டான். நகர்புறங்களை மட்டுமே மையமாக வைத்து நடத்தப்பட்ட அரச எதிர்ப்பு பிரசாரங்கள் எல்லைக் கிராமங்களை நோக்கியும் விஸ்தரிக்கப்பட்டது.

தொழிற்கட்சியின் சீர்திருத்த கொள்கைகளுக்கு கிராம மக்களிடையே வரவேற்புக் கிடைத்தது. குறிப்பாக விவசாய பண்ணைகளின் வீழ்ச்சியைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பிரசாரம் மக்களை கவர்ந்தது.

கிராமப் புறங்களில் பண நோட்டுக்களின் புழக்கம் மிகவும் குறைவாகவே இருந்தது. மக்கள் தமது சொந்த இடங்களில் உட்பத்தியாகும் பொருட்களை பண்ட மாற்றம் செய்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள்.

ஹிட்லரின் தலைமையில் ஜெர்மனி வரலாறு காணாத அழிவுகளை சந்திக்கும் என்பதை அறியாத மக்கள் தாம் இத்தகைய தொருவனால் ஆளப்பட வேண்டும் என்று விரும்பினார்கள்.

**வருவான்...**

# ஆசைகாட்டி அதிரடி பிரசாரம்

பிரிட்டனில் ஜூன் மாதம் 7ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதில் போட்டியிடும் வேட்பாளர்கள்



தமது கட்சிக் கொள்கை விளக்கங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, தாம் ஆட்சிக்கு வந்தால் என்னவெல்லாம் செய்வோம் என்று விலாவாரியாக விவரித்து வருகின்றார்கள்.

இந்தப்படத்தில் இருப்பவரும் இம்முறை பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஒரு கவர்ச்சிகரமான வேட்பாளர்தான்! பெயர் ஜோர்டான் ஸ்டெரட் போர்டில் தொழில் மாடலிங் செய்வது. இவருக்கும் பிரிட்டிஷ் பிரதமராக வர வேண்டும் என்ற அட்டகாசமான ஆசை வந்திருக்கிறது.

தான் பிரதமராக தெரிவானால் மக்களுக்கு கிடைக்கப்போகும் மிக முக்கியமான இலவச சலுகை ஒன்று பற்றி இவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருக்கிறார். அதாகப்பட்டது, தான் பதவிக்கு வந்தால் விரும்பிய அனைவருக்கும் இலவச பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்.

மார்பகங்களையும் உடலின் வேறு பாகங்களையும் பெருப்பித்துக் கொள்ள விரும்பி அதற்கு வசதி இல்லாத சகலருக்கும் அரசாங்க உதவி கிடைக்குமாம்!

பிரிட்டனில் பல பகுதிகளுக்கும் சென்று இவர் இந்த பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார்.

தன்னுடைய மார்புகளை காட்டி, "உங்களுக்கும் இத்தனை பெரிதாக வேண்டும் என்றால், எனக்கு வோட் போடுங்கள்" என்று கேட்கிறார்!

# பொலிஸாரிடம் சிக்கிய ஜனாதிபதியின் பிள்ளைகள்

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் மகள்மார் (இரட்டையர்கள்) இருவரும் சட்ட விரோதமாக மது அருந்தப் போய் இரண்டாவது தடவையாகவும் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டார்கள்.



19 வயதான ஜேனா மற்றும் பர்பரா ஆகிய இந்த இரு யுவதிகளும் டெக்ஸாஸ் மாநிலத்தில் ஒஸ்டின் என்ற நகரத்தில் உள்ள மதுபானச்சாலை ஒன்றில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.


இந்த மாநில சட்டப்படி 21 வயதுக்கு குறைந்தவர்கள் மது அருந்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

வேறொரு நபரின் அடையாள அட்டையை காண்பித்து மதுபானம் வாங்க முற்பட்டபோது, ஹோட்டல் உரிமையாளரால் இவர்கள் பொலிஸில் பிடித்து கொடுக்கப்பட்டனர்.

கடந்த வாரமும் இதே போன்றதொரு குற்றச்சாட்டின் பேரில் கைதான இந்த யுவதிகள் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு 8 மணி நேரம் சமூக சேவை செய்யுமாறு உத்தரவிடப்பட்டனர்.

இப்போது மீண்டும் மாட்டிக் கொண்டார்கள். தனது பிள்ளைகளின் இந்த செயலால் அப்பா புஷ் குழம்பிப் போய் இருக்கிறார்.

# 2000 நிர்வாணங்கள்



2000 பேர் பட்டப்பகலில் சனநெரிசல் மிக்க நகரமொன்றில் நிர்வாணமாக நின்றிருந்தார்கள் என்று சொன்னால் உங்களால் நம்பமுடியுமா?

இப்படியானதொரு சம்பவம் கடந்த வாரம் கனேடிய நகரமான மொன்ட்றியலில் நடைபெற்றது.

ஸ்பென்ஸர் டியுனிக் என்ற அமெரிக்க புகைப்படக் கலைஞருக்கு அதிகளவிலான மக்கள் நிர்வாணமாக இருக்கும் காட்சியொன்றை 'க்ளிக்' செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. தனது புகைப்படத்துக்காக 'போஸ்' கொடுக்க தயாரானவர்களைத் தேடி பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தார். 2000க்கும் மேற்பட்டவர்கள் இதற்காக விண்ணப்பித்தனர்.

எல்லோரையும் ஒன்று குவித்து வெவ்வேறு கோணங்களில் புகைப்படம் எடுத்துள்ளார் இந்தக் கலைஞர்.

# மனோஜ் பிரபாகருக்கு பிடிவிராந்து

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் மனோஜ் பிரபாகரை கைது செய்ய புதுடில்லி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



நிதி நிறுவனம் ஒன்றை நடாத்தி வந்த பிரபாகர் வாடிக்கையாளர்களின் பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்ததற்காவே கைதாகவுள்ளார்.

கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதி தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட பிரபாகருக்கு 5 வருடகால போட்டித் தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், உத்தரான்ச்சல் மாநிலத்தில் இவர் நடாத்திய நிதி நிறுவனம் மக்களின் பெருந்தொகைப் பணத்தை மீளச் செலுத்தாது மோசடி செய்துள்ளது.

இதனையடுத்து மாநில பொலிஸ் கமிஷனர் பிரபாகரை கைது செய்வதற்கான உத்தரவை டில்லிக்கு அனுப்பியுள்ளார்.

பிரபாகர் பொலிஸாரிடம் சரணடையாவிட்டால், அவரது சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## உதைப்பந்தாட்டக் கொண்டாட்டம்

அண்மையில் தென் கொரிய நாட்டின் பௌத்த கோயில்களில் விசேட அலங்காரங்களுடன் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.


அடுத்த வருடம் ஜப்பானுடன் இணைந்து கொரியா உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகளை நடத்தவுள்ளது. இந்த மதக் கொண்டாட்டங்களின் போது, அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டிகளை ஞாபகப்படுத்தும் வகையில் பெரிய அளவிலான உதைப்பந்தாட்டப் பந்து ஒன்று பௌத்த கோயிலின் முன் வைக்கப்பட்டிருந்தது.



அத்துடன் உதைபந்து வடிவிலான பலூன்களால் கோயில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இதே கொண்டாட்ட தினத்தில் கொரியாவில் புதிதாகக் கட்டப்பட்ட உதைப்பந்தாட்ட மைதானத்தின் திறப்பு விழாவும் நடைபெற்றது. இந்த விழாவில் பெரிய அளவிலான உதைபந்து பலூன்களைப் பிடித்தபடி கொரியாவின் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த மாணவர்கள் அணிவகுத்துச் சென்ற காட்சிதான் இது.

## புலிகள் மீது புத்த பிக்குகள் சவாரி



'வேங்கை வரிப் புலி நோய் தீர்த்த விடகாரி ஆங்கதனுக்காகாரம் ஆனாற் போல்...' என்ற பழைய வெண்பாதான் இந்தப்படத்தைப் பார்ப்பவர்களுக்கு நினைவுக்கு வரும். வேங்கை வரிப் புலி முதுகின்மீது ஏறிச் சவாரி செய்கிறார். இந்த புத்தபிக்கு.

நிச்சயமாக இந்தக் காட்சி இலங்கையில் இல்லை என்பது தெரிந்ததே. தாய்லாந்து நாட்டிலுள்ள சாய் யோக் என்ற கிராமத்திலுள்ள ஒரு புத்த கோயிலில் தான் இந்தப்படம் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புலி அதன்மீது சவாரி செய்யும் புத்த பிக்குவை நிச்சயமாக தன் உணவாக்கிக் கொள்ளப்போவதில்லை. ஏனென்றால் அந்த புத்த கோயிலுக்கு மூன்றாண்டுகளுக்கு முன்னர் சின்னஞ் சிறு குட்டியாக அநாதையாக இது வந்து சேர்ந்தது. அங்குள்ள பிக்குகளிடம் அந்நியோன்யமாகப் பழகி வருகிறது.

இது தவிர மேலும் ஏழு குட்டிப் புலிகள் இங்கு வந்து சேர்ந்துள்ளன. புத்த கோயிலில் வாழும் பிக்குமாரே இவற்றைப் பராமரித்து வருகின்றனர்.



## அசத்தும் ஆசிமோ

இந்தப் பகுதியில் பல்வேறு இயந்திர மனிதர்(ரோபோக்கள்)ளைப் பற்றிய படங்களும் தகவல்களும் பிரசுரமாகியிருந்ததை முரசு வாசகர்கள் நன்கறிவார்கள்.

மனிதரைப் போல் செயற்படும் இந்த ரோபோவின் பெயர். ஆசிமோ. 1.2 மீட்டர் உயரமும் 43 கிலோ நிறையும் கொண்ட ஆசிமோ நடந்து வருவதே தனி அழகு.

உலகம் முழுவதும் பரவியிருக்கும் ஹொண்டா கம்பனி தனது சொந்த வீடான ஜப்பானில் உள்ள காட்சியறையில் இருந்து விசேஷமாக ஓடர் கொடுத்து இந்த 'ஆசிமோ'வை வாங்கியிருக்கிறது.

அழகாக நடப்பது, குழந்தைகள் போல் விளையாடுவது, இசைக்கேற்ப நடனமாடுவது என்று அசத்தலான வேலைகளைச் செய்து வருகிறது இந்த ரோபோ.

காட்சியறையில் 'ஆசிமோ' இருக்கும் போது, ஹொண்டா நிறுவன உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்ய வருவோருக்கு இந்த ரோபோ அசத்தலான வேலைகளைச் செய்து காட்டி, அவர்களைக் குஷிப்படுத்தி வருகிறது.

அது மட்டுமா? சிறார்களுக்கு வண்ண வண்ண பலூன்களைக் கொடுத்து அவர்களையும் தன் பக்கம் இழுத்துக் கொள்கிறது இந்த ஆசிமோ.



## பயணியை விழுங்கிய பாம்பு

தென் அமெரிக்காக் கண்டத்தில் இருக்கும் அமேசன் காடுகளில் வசிக்கும் இராட்சத சைஸ் பாம்புகள் தான் அனகொண்டா.

'அனகொண்டா' என்ற ஆங்கிலப்படத்தை அநேகம்பேர் பார்த்திருப்பீர்கள். அனகொண்டா பாம்புகளைப் பற்றி ஆராயச் செல்லும் குழுவை, அனகொண்டா பாம்பு ஒன்று, ஒவ்வொருவராகப் பிடித்து விழுங்குவதே இப்படத்தின் கதை.

இப்படத்தைப் போன்ற உண்மைச் சம்பவம் ஒன்று அண்மையில் அமேசன் காட்டில் அரங்கேறியுள்ளது. அமேசன் காட்டைச் சுற்றிப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் குழு ஒன்று கிளம்பியது.

காட்டில் தம்மோடு வந்த ஒருவரைக் காணாது தேடிச் சென்றனர் மற்றப் பயணிகள். அனகொண்டா பாம்பு ஒன்று பெரிய இரையொன்றை விழுங்கி விட்டு அசைய முடியாது கிடந்ததைக் கண்டார்கள் அவர்கள்.

உடனே தாம் சென்ற வாகனத்தில் அந்த அனகொண்டாவை ஏற்றி வந்து, அதன் உடலைக் கிழித்துப் பார்த்தார்கள். காணாமல் போயிருந்தவர் உள்ளே இறந்து கிடந்தார்.






## கல்லறை மேல் கார்

சிலர் தமது வீடுகளின் மேல் தண்ணீர்த் தொட்டிகளை அமைக்கும் போது விமானம், கார் போன்ற வடிவங்களில் அமைத்திருப்பார்கள்.

இதைப்போல் இறந்தவர்களின் கல்லறைகளின் மேல் இறந்த நபர் செய்த தொழிலை ஞாபகப்படுத்தும் வகையிலோ அல்லது அவருக்கு மிகவும் பிடித்தமான பொருட்களின் வகையிலோ சில வடிவங்களில் கல்லை அமைப்பார்கள்.





படங்களில் காணப்படுவது படகு மற்றும் கார் வடிவங்களிலான கல்லறைகள். தமிழகத்தின் தூத்துக்குடியில் உள்ள டேவிஸ் புரம் என்ற இடத்தில் உள்ள சவக்காலையில் தான் இந்தக் கல்லறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மீனவர் ஒருவர் இறந்த பின் அவர் செய்த தொழிலைக் குறிக்கும் வகையில் படகு போன்றும், இன்னொரு நபர் இறந்த பின் அவர் உபயோகித்த கார் போன்றதுமாக அமைக்கப்பட்ட கல்லறைகள் தான் இவை.

## வேகச் சாதனை

அமெரிக்காவிலுள்ள நெவேடா மாநிலத்தில் பிளாக்றொக் பாலைவனம் இருக்கிறது. பெரும்பாலும் ஒரு வாகனத்தின் வேகத்தை அளப்பதற்கு இந்த பாலைவனம் ஓரிடமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரே சமதரையாக ஓரளவு கெட்டியாகப் பரந்திருக்கும் நெடுந்தூரமான மண்பரப்பில் வாகனத்தை வேகமாகச் செலுத்தி அதன் வேகத்தை அளவிடுவார்கள்.

1983ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் திகதி பிரிட்டனைச் சேர்ந்த ரிச்சார்ட் நோபல் என்பவர் தனது வாகனத்தை 1019.467 கிலோமீட்டர் வேகத்தில் (633.468 மைல்) செலுத்தி சாதனையை நிலைநாட்டினார்.

இதுவரை இந்தச் சாதனை முறியடிக்கப்படவில்லை.



தகவல் பெட்டி

# திரையுலக மறுபக்கம் 202

**தமிழ்நாட்டிலிருந்து மயன்**

## கணவனை ஆள்வைத்து அடித்த கவர்ச்சி நடிகையின் அம்மா!

'கொலையும் செய்வாள் பத்தினி' நடிகர் திலகம் நடித்த 'தூக்குத் தூக்கி' படத்தில் இடம்பெறும் பிரபலமான வசனம்.

எல்லாப் பெண்களும் இப்படி அல்ல. ஒரு சில பெண்கள்தான் அம்மிக்கல்லோ, அரிவாள்மனையோ, ஆலகால விஷமோ கிடைப்பதைப் பொறுத்துப் 'போட்டுத் தள்ளி' விடுவார்கள்.

அண்மையில் ஒரு படப்பிடிப்பின் போது 'கும்' மென்றிருக்கும் அந்தக் கவர்ச்சி நடிகையை படப்பிடிப்புத் தளத்திற்கு அழைத்து வரும்படி தனது உதவி இயக்குநரை அனுப்பி வைத்தார் இயக்குநர்.

ஒப்பனை அறையில் இருந்த அந்த 'கும்' அழகியிடம் இயக்குநரின் கட்டளையைச் சொன்னார் உதவி இயக்குநர்.

நடிகைக்குக் கடுங்கோபம் வந்து விட்டது.

"நீ யார் என்னைக் கூப்பிட. போய்த் தயாரிப்பு நிர்வாகியை அனுப்பி வை" என்று குமுறிவிட்டார்.

தயாரிப்பு நிர்வாகி வர, அவரையும் உண்டு இல்லை என ஆக்கி விட்டார் நடிகை.

உடனே நடிகர் சங்கத்திடம் இந்தப் பிரச்சனை பற்றிப் புகார் செய்யப்பட்டது. நடிகை விசாரணை செய்யப்பட்டார்.

விசாரணையின் போது 'கும்' நடிகையின் கோபத்திற்கான காரணம் தெரிய வந்தது.

'கும்' நடிகையின் திரையுலக வாழ்க்கை அவரது தந்தைக்கு அறவே பிடிக்கவில்லை. ஆனால் அவரது தாய்க்குப் பிடித்திருக்கிறது.

தந்தைக்கு நிறைய சொத்துக்கள் உண்டு. இதனால் தாய், தந்தைக்கிடையே அடிக்கடி சண்டைகள் வரும்.

இந்த நிலையில் ஒரு நாள் நடிகையின் தந்தையை கூலிப்படைகள் தாறுமாறாகத் தாக்கிவிட்டனர். இது நடந்தது சென்னையில் அல்ல. நடிகையின் பூர்வீகமான மும்பையில்.

நடிகையின் தந்தை தாக்கப்பட்டதை விசாரித்த மும்பை போலிசார் இந்த அடியாட்களை ஏவி விட்டது வேறு யாருமல்ல நடிகையின் தாய் என்பதை உடனே கண்டுபிடித்துவிட்டனர்.

அது மட்டுமன்றி கணவனை ஆள்வைத்து அடித்ததாக நடிகையின் தாய் மீது வழக்கும் பதிவு செய்து விட்டனர்.

இது நடந்த தினத்தன்று தான் படப்பிடிப்புத் தளத்திற்குச் செல்ல மறுத்ததுடன் உதவி இயக்குநர் மற்றும் தயாரிப்பு நிர்வாகியிடம் ஆவேசமாக நடந்து கொண்டார் 'கும்' நடிகை.

நடிகர் சங்க விசாரணையின் பின் நடிகைக்கு அறிவுரை கூறப் பட்டது. நடிகையும் அதை ஏற்றுக் கொண்டார். 'நாட்டாமை' என்ற பெயரின் பொருள்படும் அந்தப் படத்தின் படப்பிடிப்பில் மறுநாள் உற்சாகமாகக் கலந்து கொண்ட 'கும்' நடிகை, பாடல் காட்சியில் கூட நடித்த நடிகரே வெட்கப்படுமளவுக்கு அவரை 'கட்டிப்புடி கட்டிப்புடி' என்று வளைத்துப் பிடித்து கிளுகிளு நடனமாடினார்.

## பெயர் மாற்றும் தயாரிப்பாளர்

தாம் தயாரிக்கும் படங்களின் பெயர்களை மாற்றும் தயாரிப்பாளர்களைத் தான் பார்த்திருப்பீர்கள். ஆனால் தான் தயாரிக்கும் படத்தின் இயக்குநர்களது பெயர்களை மாற்றும் தயாரிப்பாளரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அவர் வேறு யாருமல்ல. தயாரிப்பாளர் வி.ஏ.துரை. 'வெட்டு ஒன்று துண்டு ரெண்டு', 'சாம்ராட்' போன்ற படங்களை இயக்கிய தினகரின் பெயரை ஷக்தி சிதம்பரம் என்று மாற்றி 'என்னம்மாக் கண்ணு' படத்தை இயக்க வைத்த துரை அடுத்து 'சூர்யப்பார்வை' படத்தை இயக்கிய ஜெகனின் பெயரை பரமேஷ்வர் என்று மாற்றி 'லூட்டி' படத்தை இயக்க வைத்தார்.

இப்போது 'லவ்லி' படத்தைத் தயாரித்து வரும் துரை, 'புதுமைப்பித்தன்' படத்தை இயக்கிய ஜீவாவின் பெயரை ஷக்தி என்று மாற்றி இயக்க வைத்துள்ளார்.



கார்த்திக்-ரம்பா
படம்: அழகான நாட்கள்

## நியூஸிலாந்தில் பிரசாந்த்-ஜோதிகா

தமிழ்த் திரையுலகில் உலகம் சுற்றும் வாலிபன் என்ற பட்டத்தை எவ்வித சந்தேகமுமின்றிப் பிரசாந்திற்கு வழங்கலாம். அந்தளவுக்கு அவர் நடிக்கும் அத்தனை படங்களிலும் ஒரு பாடல் காட்சியாவது வெளி நாடொன்றில் படமாகும்.

அந்த வகையில் பிரவீன் காந்த் இயக்கத்தில் பிரசாந்த்-ஜோதிகா நடிக்கும் 'ஸ்டார்' படத்தில் இடம்பெறும் பாடல் காட்சி ஒன்றுக்காக நியூஸிலாந்து பறந்துள்ளார் பிரசாந்த். கூடவே ஜோதிகாவும்.

'மனசுக்குள் ஒரு புயல் மையம் கொண்டதே...' என்று தொடங்கும் ஒரு கிளுகிளுப்பான டூயட் பாடல் காட்சியில் பிரசாந்த்-ஜோதிகா பங்கேற்க அங்கு படமாக்கப்பட்டது.

## சிரஞ்சீவி-சிம்ரான் நடிக்கும் 'வேட்டைக்காரன்'



மிங்க் சிங்

## பிரிந்து வரும் புதியவர்கள்

# மினி சினி

* 'சிட்டிசன்' படத்தைத் தயாரித்துள்ள நிக் ஆர்ட்ஸ் பட நிறுவனம், அடுத்துத் தயாரிக்கும் படத்திற்கு 'ரெட்' என்று பெயரிட்டுள்ளது. இப்படத்திலும் நிக் ஆர்ட்ஸ் நிறுவனத்தின் ஆஸ்தான நாயகன் அஜித் தான் கதாநாயகன்.
* 'மிடில் கிளாஸ் மாதவன்' படத்தை அடுத்து பிரபு-அபிராமி 'சார்லி சாப்ளின்' படத்தில் மறுபடி ஜோடி சேருகிறார்கள். ஷக்தி சிதம்பரம் இயக்கும் இப்படத்தில் இன்னொரு நாயகனாக பிரபுதேவா நடிக்கிறார்.
* 'விரும்புகிறேன்' பட இயக்குநர் சுசி கணேசன் அடுத்து மணிரத்னம் தயாரிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். 'பெப்ஸி' என்று பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்திலும் பிரசாந்தே கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.
* கவர்ச்சி நடிகை ஷகிலா கதாநாயகியாக நடிக்கும் 'ராசலீலா' என்ற 'மலையாள' படத்தின் பெயர் 'ராசநிலா' என்று மாற்றப்பட்டுள்ளது. தணிக்கைக் குழுவினரால தலைப்புக்கு எதிர்ப்பு ஏற்பட்டதே பெயர் மாற்றத்திற்கான காரணம்.
* 'வாஞ்சிநாதன்' படத்தை இயக்கிய மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷ், அடுத்து அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் தமிழ்படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்திற்கு 'சர்வாதிகாரி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.
* 'சொல்லாமலே' படத்தை இயக்கிய சசி இப்போது இயக்கிவரும் 'ரோஜாத்தோட்டம்' படத்திற்கு பரத்வாஜ் இசையமைப்பதாக முதலில் செய்திகள் வெளியாகின. இப்போது அவரை நீக்கி விட்டு ஹரிஸ் ஜெயராஜை ஒப்பந்தம் செய்துள்ளனர்.
* விஜய்-ரிச்சா பலோட் ஜோடியாக நடிக்க, ரவி என்ற புதியவர் இயக்கும் 'ஷாஜகான்' படத்தைத் தற்காலிகமாக நிறுத்தியிருக்கிறார் அப்படத்தின் தயாரிப்பாளரான ஆர்.பி.சௌத்ரி.
* தனது காதலி சிம்ரானுடன் இணைந்து 'ஐ லவ் யூ டா' என்ற படத்தில் நடித்து வரும் ராஜு சுந்தரம் அடுத்து 'யூத்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தில் ராஜுவுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார் சிம்ரானின் தொழில் எதிரியான ஜோதிகா.

**முகப்பில் \\ அஜய் // மீனா /**



மோஷின் கான்-ராகசுதா
படம்: விடிவதற்கு முன்னால்

அலைவரிசைகள் ...
களுக்கு ஏற்ப டொப்டெ...
இதேபோல் வருகி...
நம்பர் வன், நம்பர் ரூ, என்...
இவ்வாறு பிரபு, பேட்டி...

## தொடரும் கா...

'பூப்பறிக்க வருகிறோம்' படத்தில் அறி... அப்படத்தில் மட்டுமன்றி நிஜத்திலும் ஒரு... விட்டார்கள்.

இதனால் இவர்கள் இருவரினதும் திரை... பின் இருவரும் பிரிந்துவிட்டனர் என்ற... உண்மையில் இந்தச் செய்தியைப் பர...

## ஊட்டியில் கார்த்திக் லூட்டி

கார்த்திக், மாளவிகா, மோனல் நடிக்க ஷக்தி இயக்கும் 'லவ்லி' படத்தின் படப்பிடிப்புகள் யாவும் ஊட்டியிலேயே நடந்து வருகின்றன. படத்தில் இடம் பெறும் பாடல்கள் முழுவதும் ஊட்டியில் தான் படமாக்கப்படுகின்றன.

கடைசியாக கார்த்திக்-மோனல் ஆடிப்பாடும் 'மன்மதா மன்மதா...' என்ற பாடல்காட்சி படமானது. இந்தப்பாடல் காட்சியில் மோனல் மீது குடம் குடமாகப் பாலை ஊற்றிக் கிளுகிளுப்பூட்டும் வகையில் கவர்ச்சிகரமாகப் படமாக்கினார்கள்.

## ராஜ்கிரணின் தற்போதைய சம்பளம்

அருண்குமாருடன் இணைந்து இரட்டை நாயகர்களில் ஒருவராக நடிக்கும் ராஜ்கிரணுக்கு 'பாண்டவர் பூமி' படத்தில் நடிப்பதற்காக பத்து இலட்சம் ரூபா சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது.

'என் ராசாவின் மனசுல', 'அரண்மனைக்கிளி', 'எல்லாமே என் ராசாதான்' ஆகிய வெள்ளிவிழாப் படங்களில் நடித்த போது ராஜ்கிரண் ஒரு படத்திற்கு ஒரு கோடி ரூபா சம்பளம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



விஜய்-சிம்ரான்
படம்: உதயா

## தீயிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றிய விஜய்

அறுபதுக்கும் அதிகமான பாடசாலைக் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்த இடத்தில் திடீரென தீப்பற்றிக் கொண்டது. இதைச் சற்றுத் தாமதமாக அறிந்து கொண்ட குழந்தைகள் 'தீ... தீ...' எனக் கூக்குரலிட, பக்கத்தில் நின்றிருந்த உதயா ஓடி வந்து தீயின் உள்ளே குதித்து குழந்தைகளைக் காப்பாற்றுகிறான்.

எல்லாக் குழந்தைகளையும் காப்பாற்றி விட்டு வெளியில் வரும் உதயா, ஒரு குழந்தை மட்டும் சத்தம் போடாமல் மயக்கத்தில் இருக்க, அதை மின்னல் வேகத்தில் வெளியே எடுத்து, உடனே ஆஸ்பத்திரியில் சேர்க்கிறான்.

இந்தப் பரபரப்பான காட்சி 'உதயா' படத்திற்காக படமாக்கப்பட்டது. இதில் உதயாவாக விஜய் நடித்தார். இவருடன் இப்படத்தில் சிம்ரான், விவேக், நாசர், ராஜேஷ் உட்பட பலர் நடிக்கின்றனர்.

இப்படத்தை 'டும் டும் டும்' வெற்றிப் பட இயக்குநர் அழகப்பெருமாள் இயக்கி வருகிறார்.

## விஜய் ஜோடியாக பிரியங்கா சோப்ரா

தொடர்ந்து வெற்றிப்படங்களை வழங்கி வரும் விஜய் அடுத்து நடிக்கும் புதிய படத்திற்கு 'வேலன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப் படத்தில் விஜய் ஜோடியாக நடிக்கிறார் உலக அழகி பிரியங்கா சோப்ரா.

இந்தியில் ஷாருக்கான் ஜோடியாக ஒரு படத்திலும், பிரபல ஹொலிவுட் நடிகர் ஸ்டீபன் சீகல் ஜோடியாக ஒரு ஆங்கிலப்படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கும் பிரியங்கா தமிழில் நடிக்கும் முதல் படமிது.

தெலுங்கில் 'கலேஷ்', 'ஆசாத்' ஆகிய இரு வெற்றிப் படங்களையும் தமிழில் 'நரசிம்மா' படத்தையும் இயக்கியிருக்கும் திருப்பதிசாமி இப் படத்தை இயக்குகிறார்.

இந்தப் படத்திற்கான ஏனைய நடிக நடிகையர் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன.

விறுவிறுப்பான வித்தியாசமான காதல் கதையைக் கொண்ட இப் படத்தை விக்ரம் பெரும் பொருட் செலவில் தயாரிக்கிறார்.



லிவிங்ஸ்டன்-தேவயானி
படம்: என் புருஷன் குழந்தை மாதிரி

...ல்
...வியாக
...த்து வரு
...ன்.
...ரேஷ் பீட்டர்ஸ்,
...ளவும் முன்தபா, பிர
...லின் மணி, ஹரிஸ் ஜெய
ராஜ் ஆகியோர் தனியாக
வந்து முறையே 'கூலி', 'மிட்டா
மிராசு', 'விட்டுக்கு ஜான்', 'மின்
னலே' ஆகிய படங்களின் மூலம்
இசையமைப்பாளர்களாகினர்.
இந்த வரிசையில் கடைசியாக
ஏ.ஆர்.ரஹ்மானிடமிருந்து பிரிந்து
வந்திருப்பவர் ரோஜித். இவர் 'விடக்கீ'
என்ற படத்தின் மூலம் இசையமைப்பாளராகிறார்.

## சின்னத் திரைக்கு பிரபு சாடல்

"சின்ன பட்ஜெட் படங்கள் ...கதையுடன் வரும்போது மக் ...ரிக்கிறார்கள். மீடியாக்கள் ... உறுதுணையாக இருக்க ...

...சூலில் முன்னணியில் இருக் ...ல தனியார் தொலைக்காட்சி ...சொந்த விருப்பு வெறுப்புக் ...னுக்குத் தள்ளி விடுகிறார்கள், ...டைந்திருக்கும் படங்களை ...ரித்து ஜோக்கடிக்கிறார்கள்." ... தெரிவித்துள்ளார்.


## ...ல் பயணம்

...ள அஜய்-மாளவிகா ஜோடி, ...ருவர் காதலிக்க ஆரம்பித்து ...

...ாழ்க்கை சற்று மந்தமாகியது. ... வெளியாகியது.

...ள் இவர்கள்தான். காரணம் ...ாதல் விவகாரத்தால் புதிய ...ள இருவருக்குமே இல்லை. ...ளியானதும் கைமேல் பலன். ... பல படங்களில் ஒப்பந்த ...அஜய் ஒரு படத்தில் நாயக ...ருகிறார். திரையுலகில் ஒரு ...ந்தைப் பிடிக்க இப்படி ஒரு ...வெளியிட்டாலும் அடிக்கடி ...கசியமாகச் சந்திக்கத் தவறு ...

...ரில் ஊட்டியில் கார்த்திக் ...ாளவிகா நடித்துக் கொண் ... அஜய் அங்கு சென்று ... சந்தித்துப் பேசியுள்ளார்.



வென்ட்லி மிட்சம்-ஜோதிகா
படம்: லிட்டில் ஜான்

## அசத்தல் அஜித்

'சிட்டிசன்' படத்தின் இறுதிக் கட்டப்படப்பிடிப்பு அண்மையில் நடைபெற்றது. சரவண சுப்பையா இயக்கத்தில் வசுந்தரா தாஸுடன் அஜித்குமார் இணைந்து நடிக்கும் இப்படப்பிடிப்பு பரபரப்பாக நடந்தேறியது.

இவ்வளவு இளைஞர்கள் ஒரே நேரத்தில் எங்கிருந்து வந்தார்கள் என்று பலருக்கு ஆச்சரியம். உச்சக்கட்டக் காட்சி அசத்தலாக இருக்க வேண்டும் என்பதற்காக அதிக இளைஞர்களை வரவழைத்திருந்தார் அஜித்குமார்.

இந்த இளைஞர்கள் அனைவரும் தமிழ்நாடு முழுவதும் உள்ள அஜித் இரசிகர்கள். இறுதிக் கட்டக் காட்சியில் நடிக்க வைக்க இவ்வளவு துணை நடிகர்களைத் திரட்டிக்க முடியாது என்பதால் மின்னல் வேகத்தில் செயற்பட்டு, தனது இரசிகர்களை வரவழைத்து நடிக்க வைத்து அசத்திவிட்டார் அஜித்.

## ஒரு நடிகையின் சபதம்

"மனதிற்குப் பிடித்த மணமகன் கிடைக்கவில்லை என்றால் சந்நியாசியாக மாறிவிடுவேன்" என்று சபதமெடுத்துள்ளார் திவ்யா கோபிகுமார் என்ற நிஜப் பெயர் கொண்ட நடிகை.

இவரை யாரென்று தெரியவில்லையா? மலையாளப்படவுலகில் இருந்து தமிழுக்கு வந்த அபிராமிதான் இவர்.

'வானவில்', 'மிடில் கிளாஸ் மாதவன்' ஆகிய படங்களை அடுத்து 'தோஸ்த்' படத்தில் முழு மூச்சுடன் நடித்து வரும் அபிராமி இப்படத்தில் முதல் முறையாக சொந்தக் குரலில் பேசி நடிக்கிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

**த**ந்தை பெயரைத் தன் பெயருடன் ஒட்டிக் கொண்டிருக்கும் அந்த மூன்றெழுத்துத் 'திவ்ய'மான மலையாள நடிகை, படப்பிடிப்புக்கள் இல்லையென்றாலும் கேரளாவில் இருந்து அடிக்கடி சென்னைக்கு விஜயம் செய்கிறாராம். அவரது வருகை தெரிந்து அவர் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குப் பல பிரமுகர்கள் படையெடுக்கிறார்களாம். மறுபடி நடிகை கேரளத்திற்குப் புறப்படும்போது கட்டுக் கட்டாகக் கரன்சிகளை அள்ளிச் செல்லுகிறாராம்.

**ஐ**ரோப்பிய நாடுகளுக்கு செல்ல விரும்பும் இளைஞர்களை அழைத்துச் சென்று அங்கே விட்டுவிட்டு வருகிறாராம் ஒரு படத்தயாரிப்பாளர். 'கண்ணனைத் தேடும்' படத்தைத் தயாரித்து வரும் இந்தப் படத்தயாரிப்பாளர், அப்படத்தின் பாடல் காட்சி ஒன்றை ஐரோப்பிய நாடொன்றில் எடுக்கவேண்டும் என்று அனுமதி வாங்கி, படப்பிடிப்புக் குழுவினர் பெயரில் வேறு பலரையும் அழைத்துச் சென்றாராம். படப்பிடிப்பை முடித்துக் கொண்டு திரும்பும்போது, பலர் நாடு திரும்பவில்லையாம்.

**உ**லகப் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர் பெயரில் தயாராகும் புதிய படத்தில் இரண்டு ஹீரோக்களில் ஒருவராக நடிக்கும் 'நடனப்புயல்' நடிகர், தனக்கு ஜோடியாக சிந்துபாத்தின் காதலியின் பெயரைக் கொண்ட இரண்டெழுத்து நடிகையைப் போடும்படி தயாரிப்பாளரை நச்சரித்து வருகிறாராம். அந்த நடிகை அதிக சம்பளம் கேட்பதாக தயாரிப்பாளர் கூற, வேண்டுமானால் தனது சம்பளத்தில் இருந்து நடிகைக்குக் கொடுக்கும்படி வளைந்து போனாராம் அந்த ரப்பர் உடம்புக்கார நடிகர்.

**ந**ட்சத்திரக்குடும்பத்தின் இரண்டாவது வாரிசு நடிகையும் 'ஸ்நேக'மான நடிகையும் 'சிரிக்கும் தேசத்தின்' பெயரைக் கொண்ட படத்தில் நடிக்கும்போது நண்பிகளாகி விட்டார்களாம். ஒருநாள் நட்சத்திரக் குடும்ப வாரிசு நடிகை, 'ஸ்நேக' நடிகையைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாராம். வீட்டில் அவரது தந்தைக்குலமான 'குமார' நடிகர், 'ஸ்நேக' நடிகையைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு வரவேற்க, எதிர்பாராத இந்த அதிர்ச்சியால் மூட்-அவுட்டான நடிகை வந்த வேகத்தில் திரும்பிவிட்டாராம்.



## அதிசயப் படம்

ஒன்றைப் பார்த்து அதைப்போல் செய்வதை 'கொப்பி காற்' என்று சொல்வார்கள். இலண்டன் நகரில் உள்ள பறக்கும் சிங்கத்தின் சிலை அருகே அமர்ந்து கொண்ட இந்த 'காற்' (பூனை) சிங்கத்தைப் போல் தானும் செய்து உண்மையான 'கொப்பி காற்' ஆகிவிட்டார்.

## சேரன், சோழன், பாண்டியன் தொடக்கம்..

மலடி மல்லிகாவின்
வீட்டில்
மங்களகரமான செய்தியென
மணியன் சொன்னான்-
மலர்ந்ததாம் மலர் ஒன்று
மலடியின் அம்மாவும்
பேத்தியானார் நம்பினேன்..!
•••
தமிழர் எல்லாம்
கை கோர்த்து
தலை நிமிர்ந்து நிற்பதாய்
தயா சொன்னான்
நம்பவில்லை!
•••
சேவல் முட்டையிட்டு
குயில் அடைகாத்து
காளை பால் கறந்தது-என
கண்ணன் சொன்னான்
நம்பினேன்...!
•••
தமிழ் அரசியல் தலைவர்கள்
தனி ஒரு சின்னத்தில்
தேர்தலில் நிற்பதாய்
நிசார் சொன்னான்
நம்பவில்லை...!

வன்னிக்குரலோன்-ஜெயச்சந்திரன்.

## பைத்தியக் காரனாவதற்காகவா...?

எனை ஏமாற்றி விட்டு
இன்னொருத்தனுக்குக்
கழுத்தை நீட்டியவளே...!
எனை
ஒரு தடவை பார்..!
நான் நிற்கின்ற
கோலத்தைப் பார்...!
தலை முடி வெட்டவில்லை!
தாடி வழிக்கவில்லை!
இன்னும்
எத்தனை எத்தனையோ
மாற்றங்கள்
என்னில்...
பைத்தியக் காரக் கோலம்!
பைத்தியக் காரனாவதற்காகவா
உன்னை நான் காதலித்தது?

ச. நவேந்திரன்-எருவில்.

## வாழ்க்கைப் பயணம்

அன்னைக்குள் இருந்து
அவனிக்குள் விழுந்து
வாழ்க்கைப் பாதையில்...
நானும் ஒரு பயணியாய்
தள்ளாட்டப் பயணம்...
o-o
தூரத்தில்...
யாரோ ஒருவன்
அருகில் வந்ததும்
அறைந்தான் கன்னத்தில்.
மறுகன்னம் காட்ட
எனக்கென்ன பைத்தியமா...?
எந்தன் கைகளும்
அவன் கன்னம் தேடின.
o-o
அப்போது...
'ரேக் இற் ஈசி...'
வாய்பிளந்து சொன்னது
எந்தன் உள்மனம்
பயணம் தொடர்ந்தது.
o-o
தூரத்தில்... மற்றொருவன்
இவனும் அடிப்பானோ...?
எனக்குள் குழப்பம்.
"ஹலோ.. ஹாய்.."
அவன் குரல் ஒலித்தது
ஓ.. வாழ்க்கைப் பாதை...
இதுதானா..?
முன்னே வந்தது கறுப்பு
இப்போ இது வெளுப்பு...!

பா. துளசி-வாரிக்குட்டியூர்.

## எனக்கும் ஒரு காலம் வரும்

வருவதும்
பிரிவதுமாய் இருக்கிறாய்...
★★
புரிந்துணர்வு இல்லாத நீ
ஏனடி என்னோடு
வந்து ஒட்டிக் கொண்டாய்..?
★★
அடி காதலி,
உன் காதலும்
இந்த நாட்டின்
சமாதானம் போல் இருக்கிறதே!
★★
உன்னை நேசித்ததற்காய்
எனக்குள் நான்
நொந்து கொள்கிறேன்;
இலங்கையிற் பிறந்த ஒரு
சோனகன் போல்.
★★
சுதந்திரமில்லாமல்-தினம்
முடங்கிக் கிடக்கிறேன்;
அடையாள அட்டையில்லாத
ஒரு தமிழன்போல்.
★★
விலைவாசி ஏறுவதுபோல்
உனக்கும் தலைக்கனம்
ஏறிவிட்டது!
அதனால்தான் நீ
நினைப்பதையெல்லாம்
நிறைவேற்றிக் கொள்கிறாய்!
★★
ஒருநாள் உன் கொழுப்புக் கரையும்
அதுதான் உன் முடிவுகாலம்!
அன்றுதான்
எனக்கு விடிவு காலம்!

ஏ.எம். சாலிஹ்-ஒலுவில்-02.

## தேன் கிண்ணம்

### வாடும் நினைவுகள்

நீ இல்லாத நேரத்தில்
உன் புன்னகை என்
கன்னங்களை
கோலமிட்டு
வலம் வந்ததை
தடவிப் பார்த்தேன்
நழுவிச் சென்ற
தினங்களது
நினைவுக்கு வந்தது!
★
நாணம் வந்து என்னை
நலம் விசாரித்ததில்
உன்னுடன் சேர்ந்து
விரட்டி அடித்த
சூறாவளிக் காற்று
மெல்லிய ஓசையில்
மேகத்தினுள் புகுந்து
மழையாக வந்து-என்
மௌனத்தை உரசிப் பார்த்தது.
★
பழகி இருந்த நாட்களில் நீ
பிரிந்து போகும்-துளி
நாழிகை அதனை
நினைவுக்கு எடுக்காமல்
இருந்ததனாலோ இன்று
நிலையாக நீ பிரிந்ததால்
பரிவாக என்னுடன்
துயரமும் ஒட்டிக் கொண்டது.

எம்.ரி. சுறைஹா-சம்மாந்துறை-03.

### இன்றைய காதல்

அன்பைப் பொழிந்த
அன்றைய காதலுக்கு
முடிவை வைக்கும்-
காமத்தை பொழியும்!
இன்றைய காதல்
அன்று அவனும் சிரித்தான்
அவளும் சிரித்தாள்
காதல் பிறந்தது.
இன்று அவனும் சிரித்தான்
அவளும் சிரித்தாள்
குழந்தை அழுகின்றது.

ஜெ. லூபாகரன்-அட்டன்.

### நமக்கு எதுக்குடா காதல்

டே, செத்தவனுக்குத்தான் தெரியும்
சுடுகாட்டைப்பற்றி.
அதே போல்,
காதல் நெருப்பில் விழுந்தவனுக்குத்தான்
தெரியும்-காதல் நெருப்பைப் பற்றி.
காதல் என்ற நெருப்பு,
உடலைச் சுடாதடா....
அந்த நெருப்பு உள்ளத்தைச்
சுடும்.
இந்தக் காதல் நெருப்பு
நமக்கெதுக்குடா?
நண்பா!?

ஏ.எம். முபாறக்-கஹடகஸ்திகிலிய.

## உள்ளம் கொள்ளை போனதுக்காக

கண்ணாடித் தென்றல் என்னை
இலேசாக உரசுகிறது.
★
நித்திரை தெளியாத கண்களுடன்
உடல் அசைகிறது.
★
உன் நாமத்துடன் கரம்
பர்சை திறக்கிறது
★
அழகாய்ப் புன்னகை செய்கிறாய்
என்னைப் பார்த்து
★
பர்சை மூடியதும் உள்ளம்
உன்னைத் தேடுகிறது
★
புத்தாடையில் நீ அழகாய்
மின்னி அழைக்கின்றாய்.
★
உன்னிடம் ஆசையாய் பேசலாம்
என நெருங்கினேன்.
★
நீயோ, "உன்னை மறந்து
விட்டேன்" என்கிறாய்.
★
என் உள்ளம் பஞ்சாய்
ஆதரவற்றுப் பறக்கிறது.
★
நெருப்பும் கணத்தில் என்னைச்
சுற்றி வட்டமிடுகிறது.
★
நான் பொசுங்கும் நாள்தான்
உனக்கு உதயமா...?
★
உன் புது வாழ்வுக்காக நான்
தீயிக்கு இரையாகின்றேன்.?

பாக்கியராசா துஷ்ஷயந்தன்-
கோட்டைக் கல்லாறு-02.

## பேனா நண்பர்கள்



பெயர்: என். கேதீஸ்வரன்
வயது: 22
முகவரி: நிலாவெளி, 2ம், வட்டாரம், திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, டி.வி.



பெயர்: ரி. நிர்மலா
வயது: 19
முகவரி: திரு வீதி, உரும்பராய் வடக்கு, இரும்பராய்.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: ஆர். அன்சார்
வயது: 23
முகவரி: 692/சி, எருக்கலம்பிட்டி, பாலாவி, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, டி.வி.

## நில் கவனி முன்னேறு

நம்மால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும். நம்முடைய மூளை பெரிய வயல். அதில் இயற்கை எண்ணங்கள் விதைகளைத் தூவுகிறது. பயிர் வளரும் அழகு சூழ்நிலையாகிய மண்ணையும், சிந்தனையாகிய எருவையும் பொறுத்து இருக்கிறது.

வயலில் நல்ல விளைச்சல் ஏற்பட நாம் தான் விதைக்க வேண்டும். இல்லா விட்டால் அறுவடை செய்ய முடியாது.

நல்ல விதையை விதைத்தால் நல்ல பயிர் வளர்ந்து பயன் கொடுக்கும்.

தான், நம்மிடமும் உள்ளது. இதில் சிறிதும் சந்தேகம் இல்லை, ஆனால் நாம் தான் இதனை உணரவில்லை.

உணர்ந்தோமானால் கவலைப்பட மாட்டோம், தேவை இல்லாத கவலையை பிடித்துக் கொண்டு வந்து வைத்திருக்க மாட்டோம்.

கவலை வாழ்க்கைக்குத் தேவையே இல்லை. அது நம்மை விட்டுப் போக விரும்பாமல் அதற்கு வேண்டிய எல்லா சவுகரியங்களையும் கொடுத்து வைப்பதே நாம் தான்.

நம்முடைய நினைவினால் ஏற்பட்ட விளைவு தானே இது. மற்றவர்களிடம் காணப்படும் துடிப்பு நம்மிடமும் இருக்கிறது.

மகிழ்ச்சியான கூட்டமைப்பு நம் இதயத்தில் எப்பொழுதும் இருக்கிறது. மகிழ்ச்சி என்பது வெகு எளிதில் கிடைக்கக் கூடிய சக்தி. இதனைப் பெறத் தெரியாத காரணத்தால் தான் சிலர் துயரமும் துக்கமும் அடைகின்றனர்.

## கவலைக்கு இடங்கொடேல்

காலையில் எழுந்ததும், 'இன்று நாம் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம்' என்று முடிவு எடுத்துக் கொண்டு, அதனை பல தடவைகள் மனத்திற்குள் சொல்ல வேண்டும். அப்பொழுது முகமலர்ச்சி ஏற்படும். மகிழ்ச்சியுடன் பணியாற்றினால், கவலைக்கு இடம் ஏது?

இந்த உலகத்தைப் பார்க்க முடியாதவர்களும், நடக்க இயலாதவர்களும், பேச முடியாதவர்களும் இருக்கும் பொழுது, நமக்கு உலகைப் பார்க்கவும், விரைவாக நடக்கவும், அன்பாகப் பேசவும் வரம் அருளப்பட்டிருக்கிறது.

அந்த வரத்தை நாம் பயன்படுத்திக் கொண்டால் கவலைக்கு இடமே இருக்காது. ஆண்டவர் தந்த வரம் அருமையாக இருக்கும் பொழுது எதற்காக கவலைப்பட வேண்டும்.

நம்முடைய சோகத்தைக் கால்களுக்கு அனுப்பி நடக்கும் சக்தியை இழக்க அனுமதி கொடுத்து விடக்கூடாது. நம் மனம் உற்சாகத்துடன் இருந்தால் கால்களும் துடிப்புடன் செயல்புரியும்.

நல்ல காரியங்களைச் செய்யும்போது, எப்படி சோர்வு ஏற்பட முடியும்! உடல் முழுவதும் ரத்தத்துடன் ரத்தமாக உற்சாகத்தின் சாறு கலந்து ஓட வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுடைய ஆற்றல்



மனிதனாக பிறந்திருப்பதற்கே மகிழ்ச்சியும் திருப்தியும் பெற வேண்டும். உலகில் மனிதனை விட உயர்ந்தது எதுவும் இல்லை.

மனித கோவிலில் ஒரு தீபம் உண்டு. அந்தத் தீபம் மனம். அது அணையாமல் இருக்க நல்ல எண்ணம் என்ற எண்ணையை ஊற்றிக் கொண்டே இருப்பது அவசியம்.

மகிழ்ச்சியான நினைவு, இன்பமான சிந்தனை, உற்சாகமான எழுச்சி இவை யாவும் தீபம் அணையாமல் நின்று பாதுகாக்கும். எப்பொழுதும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

வாழ்க்கையை நல்லவிதமாகப் பார்த்தால் என்றும் மகிழ்ச்சியும் மனநிறைவும் தான் இருக்கும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

10.06.2001 தொடங்கி 16.06.2001வரை

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)
பொருளாதார வரவும், செய்தொழில் விருத்தியும் உண்டு. வெளியிடப் பயணங்களினால், பிரச்சனைகள் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளோர் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் மந்த நிலை அடைவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் குறைவாகப் பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்,
அதிஷ்ட இல: 02.

**இடபம்:**
(கார்த்திகையின் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் விருத்தியுடன், பணவரவும் குடும்ப மகிழ்ச்சியும் ஏற்படும். வார இறுதியில் எதிர்பாராத பொருள் வரவுக்கு இடமுண்டு. உத்தியோகத்தில் உள்ளோர் நன்மை பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்,
அதிஷ்ட இல: 04.

**மிதுனம்:**
(மிருகசீரடத்துப்பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்)
தொழில் சிறப்பும், காரியானுகூலம், பணவரவும் உண்டாகும். குடும்பத்தில், சிறிது பிரச்சனைகள் தலைதூக்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மனமகிழ்ச்சி அடைவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த பலனடைவார்கள்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்,
அதிஷ்ட இல: 02.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலயம்)
தொழிலில் முன்னேற்றமும், பணவரவும் உண்டாகும். வீண் செலவீனங்களுக்கு இடமளிக்கும், கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணங்கி நடப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்படைவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி,
அதிஷ்ட இல: 06.

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
செய்தொழில் கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளோர் நன்மை பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் குறைவாக பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்,
அதிஷ்ட இல: 05.

**கன்னி:**
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழிலிலும், குடும்பத்திலும் பிரச்சனைகள் தீர்ந்து நன்மைகள் உண்டாகும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் உயர்வடைவர். மாணவர்களுக்கு கல்விச்சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்,
அதிஷ்ட இல: 03.

### சோதிட மாமணி தில்லை

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
எதிர்பார்த்த கருமங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். பணவரவு சுமாராக இருக்கும். உத்தயோகர்தியாக இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் கொள்வது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் குறைவாக பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்,
அதிஷ்ட இல: 04.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும். தொழில் ரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். உத்தியோகஸ்தர்கள் பதவி மாற்றம், அல்லது உயர்ச்சிகளில் பிரச்சனைகளை எதிர்நோக்குவர். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது.
அதிஷ்ட நாள்: திங்கள்,
அதிஷ்ட இல: 01.

### கிரக நிலை

| | |
|---|---|
| இடபம் | - சூரியன், வியாழன், சனி |
| மிதுனம் | - இராகு, புதன் |
| விருட்சிகம் | - செவ்வாய், |
| தனு | - கேது, |
| மேடம் | - வெள்ளி, |

மகரம், கும்பம், மீனம், இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார். 15.06.2001 இல் மிதுன சூரியன்

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
எடுத்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். பணவரவு சிறந்து விளங்கும். தொழில் ரீதியாக நன்மைகள் சேரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்,
அதிஷ்ட இல: 02.

**மகரம்:**
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் சிறப்பும், பணவரவும் சிறந்து விளங்கும். குடும்பத்தில் துக்ககரமான சம்பவங்கள் நடந்தேறும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.
அதிஷ்ட நாள்: சனி,
அதிஷ்ட இல: 05.


**கும்பம்:**
(அவிட்டத்து பின்ரை, சதயம், பூரட்டாதியின் முன்முக்கால்)
தொழிலிலும், குடும்பத்திலும், மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்,
அதிஷ்ட இல: 07.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
எதிர்பார்த்த கருமங்களில் சில தடைகள் ஏற்படும். பணவரவு, தேகசுகம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்,
அதிஷ்ட இல: 05.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## புதிய கருத்தடை சாதனம்



பெண்களுக்கான புதிய கருத்தடை சாதனத்தை உலகப்புகழ் பெற்ற நிறுவனமான ஜோன்சன் அண்ட் ஜோன்சன் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஆர்தோ மெக்நெய்ல்ஸ் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

இதுவரை மாத்திரைகளாகவும் கொண்டமாக (ஆணுறைகள்)வும் தான் கருத்தடை சாதனங்கள் வந்துள்ளன. ஆனால் ஆர்த்தோ மெக்நெய்ல்ஸ் நிறுவனம் கண்டுபிடித்திருக்கும் புதிய கருத்தடை சாதனம் பிளாஸ்டர் வடிவில் வந்திருக்கின்றது.

தற்போது இங்கிலாந்தில் விற்பனையாகும் இந்தக் கருத்தடை பிளாஸ்டரை, 'பேண்ட் ஏய்ட்' போல், பெண்கள் தங்கள் இடுப்பில் ஒட்டிக் கொண்டால் போதும், பெண்கள் கருத்தரிக்க முடியாது.

இந்தக் கருத்தடை சாதனம் இலங்கைக்கு வர இன்னும் ஓரிரு வருடங்கள் ஆகலாம்.

## அளவுக்கு மிஞ்சினால்....



'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதுபோல் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு அளவுக்கு அதிகமாகத் தாய்ப்பால் கொடுத்தாலும் ஆபத்துத்தான் என்று தற்போது தெரிய வந்துள்ளது.

சில பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு நீண்ட நாட்கள் (சில வருடங்கள்) தாய்ப்பால் கொடுப்பார்கள். இப்படி அளவுக்கு அதிகமாகத் தாய்ப்பால் குடித்து வரும் குழந்தைகள் பருவ வயதை எட்டும்போது, இருதயம் சம்பந்தமான நோய்களில் சிக்கி விடுகிறார்கள். இதனை இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இச்சஞ்சிகை அண்மையில் 331 இளைஞர்கள், இளைஞிகளிடம் இந்த ஆய்வை மேற்கொண்டது. அப்போதுதான் ஒரு வருடத்திற்கு மேல் தாய்ப்பால் குடித்த அத்தனை பேரும் 'கார்டியோ வாஸ்குலர்' என்ற நோய்க்குள்ளாகி இருப்பது தெரிய வந்தது.

எனவே பெண்மணிகளே! குழந்தைகளுக்குத் தாய்ப்பால் அதிகமாகக் கொடுப்பது நல்லது என்று வருடக்கணக்கில் பால் புகட்டுவது ஆபத்து.



## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** JP

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-06-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**இரத்தினபுரி வாசகிக்கு அதிஷ்டம்!**

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

திருமதி. இராமலெட்சுமி, 4/ஏ, 5ஆம் ஒழுங்கை, மிஹிந்துகம, இரத்தினபுரி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# கிரிக்கெட் காதல் ஏற்படுத்திய ஏமாற்றம்!

சங்கீதா

இந்தப் பெயர் இன்னும் சில நாட்களில் இந்திய கிரிக்கெட் உலகில் பரபரப்பாக அடிபட இருக்கிறது. ஹைதராபாத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரரும் முன்னாள் கேப்டனுமான அசாருதீனின் வாழ்க்கையில் ஒரு சங்கீதா (பிஜ்லானி) என்றால் அதே ஹைதராபாத்தை சேர்ந்த இன்னொரு வீரரின் வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவர் இந்த சங்கீதா. ஆந்திர மாநிலம் கர்நூல் மாவட்டத்தைச் சேர்ந்த இவர், விரக்தியின் விளிம்புக்குச் சென்று, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும், கடைசி நேரத்தில் காப்பாற்றப்பட்டதாகவும் பரபரப்பாக வந்த செய்தியையடுத்து, நாம் கர்நூல் மாவட்டத்திற்கு சென்றோம்.


115 டிகிரி வெயிலால் மாவட்டமே தகித்துக் கொண்டிருந்தது. சங்கீதாவின் சரியான முகவரி இல்லாததால், அந்தக் கடும் வெயிலில், தேர்தல் நேர வேட்பாளர் போல் நாம் தெருத்தெருவாக வலம் வந்தோம். 6 மணி நேர அலைச்சலுக்குப் பிறகு, சங்கீதாவின் முகவரியைக் கண்டு பிடிக்க முடிந்தது. சங்கீதாவையும்தான்...!

***சில விளையாட்டு வீரர்கள் தங்கள் ஆட்டங்களால் கவரப்படும் அழகிகளை விளையாட்டாகவே கருதி அவர்களின் வாழ்க்கையுடன் விளையாடிவிட்டு விலகி வருகிறார்கள். ஓர் இந்திய கிரிக்கெட் வீரரை நம்பி விட்டில் பூச்சியான ஓர் அழகியின் கதை இது.***

"பேட்டியெல்லாம் தரும் நிலையில் நான் இல்லை.. என் வாழ்வு முடிந்து விட்டது. தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றப்பட்டு இப்போதுதான் கர்நூல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருக்கிறேன். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்ற சங்கீதாவை, பேட்டிக்கு சம்மதிக்க வைப்பதற்குள் இந்திய பிட்ச்களில் திண்டாடும் வெளிநாட்டு ஃபாஸ்ட் பவுலர்கள் அளவுக்கு படாதபாடு பட வேண்டியிருந்தது. ஒரு வழியாக பேட்டிக்கு சம்மதித்த சங்கீதா, தொண்டையை அடைக்கும் துக்கத்துடன் நம்மிடம் பேசத் தொடங்கினார்.

"98-ஆம் ஆண்டு நவம்பர் மாதம். அப்போதுதான் இந்தியாவுக்காக ஆடத் தொடங்கியிருந்த வி.வி. எஸ். லட்சுமணன், 'ரஞ்சி மேட்ச்' ஆடுவதற்காக இங்கே வந்திருந்தார்.

அதே மேட்ச்சில் அசார், வெங்கடபதிராஜூ போன்ற பிரபலங்களும் ஆடியதால், அவர்களிடம் தான் நிறைய பேர் ஆட்டோகிராப் வாங்கினார்கள். ஆனால், மேட்ச் தொடங்குவதற்கு முன்பாகவே நானும் எனது தோழி அருணாதேவியும் லட்சுமணனிடம் ஆட்டோகிராப் வாங்கினோம். அந்த மேட்ச்சில் லட்சுமணன் சதமடித்தார். நான் ஆட்டோகிராப் வாங்கிய பேட்ஸ்மேன் சதமடித்ததால் நானே சதமடித்தது போல் இருந்தது. சதம் அடித்ததும் மட்டையை உயர்த்துவது பேட்ஸ்மேன்களின் வழக்கம். லட்சுமணன் நான் இருக்கும் இடத்தைப் பார்த்து மட்டையை உயர்த்திக் காட்டி, தன் உற்சாகத்தை வெளிப்படுத்தினார். எல்லோரும் கைதட்டினாலும் எனக்காகவே அவர் தன் மட்டையைக் காட்டியதுபோல் இருந்தது.



லட்சுமணன்

ஆட்டம் முடிந்தபிறகு பெவிலியன் பக்கம் போய் நின்றேன். லட்சுமணன் வெளியே வருவதற்கு 10 நிமிடங்கள் ஆனது. அந்த 10 நிமிடத்துக்குள், அவரைப் பார்த்துவிட மாட்டோமா என எனக்குள் ஏராளமான ரசாயன மாற்றங்கள். 'ஏய்... இதுதான் காதலா?' என எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். லட்சுமணன் வெளியே வந்தபோது, என்னைப் பார்த்து கண்ணடித்தபடி, "இன்று நான் விளையாடியது உனக்காகத்தான்" என்றார்.



சங்கீதா

"உன் பெயர் என்ன?"ன்னு தெலுங்கில் கேட்டார். "சங்கீதா" என்றேன். அவர் போகும் திசையையே பார்த்தபடி இருந்தேன். அன்றிரவு தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டுப் படுத்தேன். இதுதான் காதல் எனப் புரிந்துவிட்டது.

மறுநாளும் கிரவுண்டுக்குப் போனேன். லட்டு (லட்சுமணன்) வந்தபோது என்னைப் பார்த்து சிரித்தார். ஆட்டோகிராப் வேண்டாமான்னு என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான் நோட்டை நீட்டினேன். அவர் எங்கள் வீட்டு ஃபோன் நம்பரைக் கேட்டார். ஏன் என்று பதில் கேள்வி கேட்கத் தோன்றாமல் நம்பரைச் சொன்னேன். நான் எங்கே அமர்ந்து ஆட்டத்தைப் பார்த்தேனோ, அந்த பகுதியில்தான் லட்சுமணன் பீல்டிங் செய்தார். பந்தை அநாயாசமாக தடுத்து விட்டு என்னைப் பார்த்துச் சிரித்தார். அவருக்கும் என்னைப் பிடித்துவிட்டது எனப் புரிந்தது.

அன்றிரவு எனக்கு லட்டு ஃபோன் செய்தார். அரை மணிநேரம் பேசியிருப்பார். நான் அவரது விலாசம், ஃபோன் நம்பர் கேட்டபோது, அவர் கொடுக்கவில்லை. அன்றைக்கு மட்டுமல்ல.. அவர் வேறு ஊர்களில் விளையாடச் சென்றபோதும் எனக்கு அடிக்கடி ஃபோன் செய்ய ஆரம்பித்தார். அவுஸ்திரேலியா சென்றபோது கூட ஃபோன் செய்ய மறக்கவில்லை. பெற்றோருக்கு இந்த விஷயம் தெரியாதபடி சமாளித்துவிட்டேன்.

ஒரு வருடமாக இப்படி ஃபோன் காதல் தொடர்ந்தது. என்னுடைய எம்.ஏ.படிப்பு முடிந்துவிட்டதால், என் வீட்டில் திருமண ஏற்பாட்டுக்குத் தயாராகிவிட்டனர். நான், வேலைக்குப்போக இருப்பதாகச் சொல்லி திருமண ஏற்பாட்டை நிறுத்திவிட்டேன். வேலை தேட ஆரம்பித்தேன். பெங்களூரில் வேலை கிடைத்தது.

இரானிக் கோப்பை போட்டிக்காக 99-ம் ஆண்டு அக்டோபர் மாதம் லட்டுவும் பெங்களூருக்கு வந்தார். மேட்ச் முடிந்த பிறகு அவருடன் மைசூர், ஊட்டி என 4 நாட்கள் டிரிப் போனேன். அவரது விளையாட்டைப் போலவே பேச்சும் ரசிக்கத்தக்கதாக இருந்தது. அந்தப் பேச்சில் நான் மயங்க, என்னையே அவர் எடுத்துக் கொணடார். அவர் வணங்கும் சாய்பாபா மீது ஆணையிட்டு என்னை எடுத்துக் கொண்டார். நாங்கள் இரண்டறக் கலந்தபிறகு, திருமணம் பற்றி பேச ஆரம்பித்தேன். "விரைவில் இந்திய அணியில் நிரந்தர இடம் கிடைக்கும். அதன் பிறகு நாம் கல்யாணம் செய்து கொள்ளலாம். உலகில் உள்ள எல்லா கிரிக்கெட்டர்களும் வருவாங்க. உனக்கு சந்தோஷம்தானே" என ஆசை ஆசையாகப் பேசினார் லட்டு. அத்தனை பிரபலங்களும் வந்தால், திருமண விழா பிரமாண்டமாக இருக்குமே என்ற போதையில் நான் மயங்கிவிட்டேன்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான கல்கத்தா டெஸ்ட்டில் அவர் அபாரமாக விளையாடி உலகப்புகழ் பெற்ற பிறகு, நான் பலமுறை தொடர்புகொண்டேன். ஃபோனை கட் செய்து விடுவார். லெட்டர், ஈ-மெயில் என்று ஏராளமாக அனுப்பியும் பதில் இல்லை.

ஏப்ரல் 3ந் தேதியன்று விசாகப்பட்டிணத்தில் அவரை ஒட்டலில் மடக்கினேன். என்னைத் தெரியாதது மாதிரி நடந்து கொண்டார். நான் அழுது ஆர்ப்பாட்டம் செய்தேன். ஏதோ பைத்தியம் கலாட்டா செய்கிறது என பட்டம் கட்டப்பட்டு காவலர்கள் மூலமாக துரத்தப்பட்டேன். அப்போதும் நான் விடாமல், லட்டுவின் ஹைதராபாத் வீட்டுக்குச் சென்று அவரது பெற்றோரிடம் முறையிட்டேன்.

அவர்களும் கண்டுகொள்ளவில்லை. நல்ல படிப்பு, நல்ல வேலை இருந்தும் கிரிக்கெட் மோகத்தால் நான் ஏமாந்து போய் விட்டேன். இப்படி ஏமாந்தது பெரிய முட்டாள்தனம் என்ற நினைப்பு அடிக்கடி வந்ததால், நான் தற்கொலை முயற்சியில் இறங்கினேன்" என்று சொல்லி முடித்தபோது, சங்கீதாவின் விழிகளில் கண்ணீர் திரண்டிருந்தது.

"உங்கள் காதலின் நினைவாகவோ ஆதாரமாகவோ புகைப்படங்கள், கடிதங்கள் ஏதேனும் இருக்கிறதா?" என சங்கீதாவிடம் கேட்டோம்.

"நாங்கள் இருவரும் சேர்ந்து ஃபோட்டோ எடுப்பதற்கு லட்டு கடைசிவரை சம்மதிக்கவில்லை. 'கல்யாணத்தின் போதுதான் நிறைய ஃபோட்டோ எடுக்கப் போகிறோமே' என்று சொல்லியே தட்டிக் கழித்துவிட்டார். அப்படிப்பட்டவரிடம் ஏமாந்தது என் தவறுதான்.

இப்போது அவர் புகழின் உச்சியில் இருப்பதால் அவர் என்னைத் தூக்கி எறியலாம். காலம் மாறும் லட்டு அப்போது வருத்தப்படுவார். இனி, அவரே திரும்பிவந்து என்னை ஏற்றுக்கொள்ள முன்வந்தாலும் நான் அவரை மன்னிக்கத் தயாராக இல்லை. நான் இனி சமூக சேவையில் ஈடுபட்டு என் மனதை வேறுபக்கம் திருப்ப முடிவு செய்துவிட்டேன். படித்த முட்டாளாகிவிட்ட நான், கிரிக்கெட் இரசிகர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். கிரிக்கெட்டை மட்டும் ரசியுங்கள். கிரிக்கெட் வீரர்கள்மீது மோகம் கொள்ளாதீர்கள். கிரிக்கெட், ஒரு ஜென்டில் மேன் கேம். கிரிக்கெட் வீரர்கள் ஜென்டில் மேன்கள் அல்ல" என்று சொல்லி கண்ணீரைத் துடைத்துக்கொண்டார் சங்கீதா.

—நன்றி: நக்கீரன்—

பாப்பா முரசு சிறுகதை

# என்றும் வசந்தம்

தங்கபுரி என்னும் ஊரில் முருகேசன் என்ற தொழிலாளி வாழ்ந்து வந்தார். அவருக்கு இரண்டு மகள்கள் இருந்தனர்.

இருவருக்கும் திருமணம் நடந்தது. முதல் மகளை செங்கள் தொழிலாளிக்கும் இரண்டாவது மகளை விவசாயிக்கும் திருமணம் செய்து கொடுத்தார் முருகேசன்.

சிலகாலம் கழித்து, தன் மகள்கள் இருவரையும் பார்த்து விட்டு வரலாம் என்று புறப்பட்டார்.



முதலில் மூத்தமகள் வீட்டிற்குச் சென்றார். அங்கே தன் மகள் வறுமையில் இருப்பதைக் கண்டு, மிகவும் மனவேதனை அடைந்தார் முருகேசன். காரணம் கேட்டார்.

"இப்போது மழைக்காலம், செங்கல் சூளையே போட முடியவில்லை" என்றாள் மகள் வருத்தத்துடன்.

தன்னாலியன்ற உதவிகளைச் செய்து விட்டு இரண்டாவது மகள் வீட்டிற்குச் சென்றார் முருகேசன்.

நல்ல மழை என்பதால் அவர்கள் நிலத்தில் நல்ல விளைச்சல். எனவே அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர்.

இருவரையும் பார்த்த திருப்தியில் முருகேசன் தன் கிராமத்திற்குத் திரும்பினார்.

மீண்டும் சில மாதங்கள் கழித்து பிள்ளைகளின் நினைவு வர, அவர்களைப் பார்க்கப் புறப்பட்டார் முருகேசன்.


அப்போது கோடை காலம். எனவே மூத்த மகள் மிக மகிழ்ச்சியாக இருந்தாள்.

"இப்போது நல்ல வெய்யில் அடிப்பதால் செங்கல் வியாபாரம் மிக நன்றாக இருக்கிறது" என்றாள் அவள்.

பிறகு முருகேசன் இரண்டாவது மகளின் வீட்டிற்குப் புறப்பட்டார். போகும் வழியில் எல்லாம் கவலைப்பட்டுக் கொண்டே சென்றார். 'வெய்யில் காலத்தில் விவசாயத்திற்கு வழியில்லாமல் மகள் கஷ்டப் படுவாளோ என்று கவலைப்பட்டபடி அவளது வீட்டை அடைந்தார். ஆனால், என்ன ஆச்சரியம். அவர்கள் அப்போதும் மகிழ்ச்சியாகவே இருந்தனர். காரணம் புரியாத முருகேசன் மகளைக் கேட்டார்.

"வசந்த காலத்திலேயே நாங்கள் கோடை காலத்திற்கென்று பொருட்களைச் சேமித்து வைத்து விட்டோம். அதனால் இப்போது கவலை இல்லை" என்றார்.

இளைய மகளின் புத்திசாலித்தனத்தையும் சேமிக்கும் பழக்கத்தையும் கண்டு மனம் நிறைந்து ஊருக்குத் திரும்பினார் முருகேசன்.



மறைந்திருப்பது என்ன? அறிய ஆவலா? அப்படியானால் 1முதல் 58 வரையான இலக்கங்களை இணைத்துப் பாருங்கள்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **16.06.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **398**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 396

பரிசுக்குரியவர்:
சிறி. ஜெயசீலன்,
விக்கினேஸ்வரா வித்தியாலயம், இறுவாக்கேணி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பி.துவாரகா, றோ.க.த. வித்தியாலயம், வத்தளை. | நவரெத்தினராஜா நிரஞ்சன், மட்/அரசடித்தீவு வி.ம.வி கொக்கட்டிச்சோலை. |
| எம்.செல்வநாயகி, கிறேட்வெஸ்ரன், தமிழ் வித்தியாலயம், தலவாக்கலை. | ஞா.சயந்தனா, விபுலானந்த மகாவித்தியாலயம், வவுனியா. |
| எம்.ஏ.எஸ்.வி.ஜோசுவா, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-04. | ஜே.எச்.எம்.மஸ்றூப், அல்ஜஹிப்ரியா ம.வி, ஏறாவூர்-03. |
| பாத்திமா றுஸ்கா நளீர், மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மூதூர். | ச.யதுர்ஷனா, இந்து தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம். |
| ச.மயூரன், தமிழ் மத்திய மகாவித்தியாலயம், வவுனியா. | எம்.இஸ்ஸத், றோயல் கல்லூரி, கொழும்பு-07. |

## விடுகதைகளும் விடைகளும்

1. சுமைகள் சுமப்பவன், மிதிக்க மிதிக்க ஓடுவான்.
   அவன் யார்?
2. கறுப்பாய்ச் சுருண்டிருக்கும் கயிறும் அல்ல; பழுத்தால் உதிர்ந்து விடும், இலையும் அல்ல.
   அது என்ன?
3. ஊர் வம்பு பேசுவான் ஊரெங்கும் சுற்றி வருவான்.
   அவன் யார்?
4. உச்சாணிக் கொப்பிலே மஞ்சனப் பெட்டியிலே மைபோட்டு அடைச்சிருக்கு.
   அது என்ன?
5. சாத்தின கதவிருக்க, ஏத்தின விளக்கிருக்க, சத்தமில்லாமல் வந்த விருந்தாளி.
   அவர் யார்?
6. தாய் இனிப்பாள், மகள் புளிப்பாள், பேத்தி மணப்பாள்.
   அவர்கள் யார்?
7. மண்ணுக்கு அடியில் மத்தளம்.
   அது என்ன?
8. ஊதினால் பறப்பான்; சில நேரம் வெடிப்பான்.
   அவன் யார்?
9. தள்ளாடித் தள்ளாடிப் போனாலும் தவறாமல் கரை சேர்ப்பான்.
   அவன் யார்?
10. ஒற்றைக்காலில் ஆடுவான், ஓய்ந்து போனால் படுத்து விடுவான்.
    அவன் யார்,

விடைகள்

1. சைக்கிள் 2. தலைமுடி
3. நாழிதழ் 4. புளியம்பழம்
5. நுளம்பு 6. பால், தயிர், நெய்
7. கருணைக்கிழங்கு 8. பலூன்
9. படகு 10. பம்பரம்

தொகுப்பு: எஸ்.மலர்விழி.

## வெண்மையின் இரகசியம்



உங்கள் பாடசாலை சீருடைகளைத் துவைக்கும் போது கடைசியில் நீலம் பயன்படுத்துவதைப் பார்த்திருப்பீர்கள். நீலம் சேர்ப்பதால் வெள்ளை நிற உடைகள் 'பளிச்' சென்று இருக்கும்.

இது எப்படி என்று தெரியுமா உங்களுக்கு?

அழுக்கில் உள்ள மஞ்சள் நிறத்துடன் நீலம் சேரும் போது, அக்கலவை புது வெண்மையைத் தருகிறது. இதனால் தான் நீலம் சேர்க்கப்பட்ட வெள்ளை ஆடைகள் 'பளிச்' என்று வெள்ளை நிறத்தில் இருக்கின்றன.

## புகையால் வரும் கண்ணீர்

சட்டவிரோதமான கூட்டங்களைக் கலைப்பதற்குக் கண்ணீர்ப்புகை பயன்படுத்துவதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். கண்ணீர்ப்புகை அடிக்கப்பட்டதும் கண்களைப் பொத்திக் கொண்டு ஓடுவார்கள்.

ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று தெரியுமா உங்களுக்கு?


'குளோபிரின்' என்ற வாயு கண்களை அரிக்க வைக்கும் தன்மை கொண்டது. இதுகண்களை அரிப்பதால் கண்ணீர் வரும். இந்தக் 'குளோபிரின்' வாயுவைத்தான் கண்ணீர்ப்புகையாக உபயோகிக்கிறார்கள். இதனால்தான் கண்ணீர்ப்புகை அடித்ததும் கண் எரிவிலிருந்து தப்பிக்கொள்ள கண்களை மூடிக் கொண்டு ஓடுவார்கள்.



## உயரமான ரயில்பாதை

உலகிலேயே மிக உயரமான இடத்தில் ரயில் ஓடும் இடம் பெரு நாட்டில் உள்ளது. இங்குள்ள லா கலரா என்னும் இடத்தில் 15 ஆயிரத்து 844 அடி உயரத்தில் ரயில் பாதை தண்டவாளங்கள் உள்ளன. உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்திருக்கும் புகையிரத நிலையமும் இது தான்.

## மேலதிகமான பயன்கள்



பொதுவாக இறந்த பின்தான் சவப் பெட்டிகளை வாங்குவது வழக்கம். ஆனால் யூகோஸ்லாவியா நாட்டில் உயிருடன் இருக்கும்போதே சவப்பெட்டியை வாங்கி விடுவார்கள்.

சாகும் வரை அந்தச் சவப்பெட்டிகளை அதைப் புத்தக அலமாரியாகவோ, சாமான்களை வைக்கும் ராக்கைகளாகவோ பயன்படுத்துவார்கள். சிலர் சவப் பெட்டிகளில் அவ்வப்போது படுத்துறங்குவதும் உண்டு.

# மர்மத்தீவு

## சங்கர்லால் துப்பறியும்

08

**தமிழ்வாணன்**

"துப்பாக்கியை போட்டுவிட்டு அப்படியே கைகளைத் தூக்கியபடி நில்" என்று இரண்டு பேரும் ஒரே நேரத்தில் சொன்னார்கள்.

சங்கர்லால் ஒரு கணம் சிந்திப்பதற்குள்-

இன்னும் பல உருவங்கள் மிஷின் துப்பாக்கிகளுடன் தோன்றி அவரைச் சூழ்ந்து கொண்டன.

சங்கர்லால், துப்பாக்கியைப் போட்டார். கைகள் இரண்டையும் தூக்கினார். ஆதரவற்றவர் ஆனார்.

ஆனால்,

அப்போதும் அவர் முகத்தில் அச்சமோ திகைப்போ ஏற்படவில்லை. அவருடைய உதடுகள் மெல்ல விரிந்தன; சிரித்தன.

சங்கர்லாலைச் சூழ்ந்து நின்றவர்களில் ஒருவன் பாய்ந்து சென்று சங்கர்லால் கீழே போட்ட துப்பாக்கியை எடுத்து கொண்டான். பிறகு அவன் அவர் சட்டைப் பைகளையும் உடலில் எங்கேயாவது சிறு துப்பாக்கியோ கத்தியோ வெடி குண்டோ இருக்கின்றனவா என்று துழாவினான்.

கீழே விழுந்து கிடந்த அந்த ஒரே ஒரு துப்பாக்கியைத் தவிர, அவரிடம் வேறு ஒன்றும் கிடைக்கவில்லை.

"நட" என்று சொல்லிவிட்டு, அவரை அழைத்துக் கொண்டு நடந்தான். சங்கர்லாலையும் அந்தப் படைக்குத் தலைவனைப்போன்ற அந்த மனிதனையும் சுற்றித் துப்பாக்கி ஏந்திய மனிதர்கள்!

சங்கர்லால் இப்படி அப்படித் தப்பிஓட முடியாது. அவரைச் சுற்றிலும் எத்தனை துப்பாக்கிகள்.

கொஞ்சம் தொலைவு நடந்தார்கள். காட்டுப்பகுதி விலகியது. ஒரு பெரிய கட்டடம் வந்தது.

கூட்டத்தின் தலைவன் என்ன செய்யப் போகிறான்? சங்கர்லால் சிந்தித்தார். அவர் எண்ணியபடியே நடந்தது!

பெரிய கூடத்தின் வாயிலை அடைந்ததும் சங்கர்லாலை அங்கேயே நிற்கும்படி அவன் சாடை காட்டினான். "புரபஸரை அழைத்துவா. தூங்கிக் கொண்டிருப்பார். குற்றம் இல்லை. எழுப்பு. அவரை அழைத்து வா. நம் தீவுக்கு ஒரு புது விருந்தினர் வந்திருக்கிறார் என்று சொல்லு" என்றான்.

அந்தக் கட்டடத்திற்குள் ஒருவன் ஓடினான். அவன் ஓடிய விரைவிலேயே திரும்பி வந்து விட்டான்.

"ஓசை கேட்டு புரபஸரே வருகிறார்" என்றான் அவன்.

"உங்கள் புரபஸருக்கு இரவெல்லாம் தூக்கம் வராது போல் இருக்கிறது" என்றார் சங்கர்லால்.

இதற்குள் புரபஸர் வந்துவிட்டார். அவர் கொஞ்சம் வயதானவர். தலை முழுவதும் வெள்ளை முடி. வெள்ளைக் கோட்டும் வெள்ளைக் கால்சட்டையும் அணிந்திருந்தார்.

விளக்கின் வெளிச்சத்தில் சங்கர்லாலை பார்த்ததும் "ஓ! நீங்களா! உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். கொஞ்சம் பொறுங்கள். உங்கள் பெயர் சங்கர்லால்! இல்லையா?" என்றார்.

"ஆமாம். அதுதான் என் நெற்றியில் எழுதி ஒட்டி இருக்கிறதே!" என்றார் சங்கர்லால், தன்நெற்றியில் சுருள் சுருளாக விழுந்திருந்த கிராப்பைத் தள்ளிவிட்டுக் கொண்டு!

மீண்டும் அந்த சுருள் முடி அவர் நெற்றியில் வந்து விழுந்தது!

"வாருங்கள் சங்கர்லால், உங்களைக் காணவேண்டும் என்று நான் துடித்தேன். ஆனால் இந்த இடத்தில், இப்டிப்பட்ட சுற்றுப்புறத்தில் தங்களைக் காணுவேன் என்று நான் எண்ணவில்லை. ஆனால் என்ன செய்வது? இங்கே நீங்கள் இப்போது ஒரு கைதியைப்போல் வந்து நிற்கிறீர்கள்!" என்று சொல்லிவிட்டுக் கையை நீட்டினார்.

சங்கர்லால் அமைதியுடன் அவர் கையைப் பிடித்து குலுக்கினார்.

"உங்கள் பெயர் புரபஸர்..." என்று இழுத்தார் சங்கர்லால்.

"புரபஸர் பழமலைநம்பி" என்றார் புரபஸர்.

அப்போது அந்தக் கட்டடத்துக்குள்ளிருந்து ஓர் அழகிய பெண் வெளியே வந்தாள். அரைத் தூக்கத்திலிருந்த அவள், மெல்லிய நைட்கவுன் அணிந்து மிகக் கவர்ச்சியாகக் காணப்பட்டாள். அவள் கண்களைத் துடைத்தபடி வந்து "யார் இவர்?" என்று கேட்டாள்.

சங்கர்லால், வியப்புடன் அந்தப் பெண்ணைப் பார்த்தார். பெண்கள் போட்டியில் கலந்து கொள்ள வேண்டியவள். திரைப்படத்தில் கவர்ச்சிப் பெண்ணாக நடிக்க வேண்டியவள். விளம்பரங்களுக்கு மடலாக இருக்க வேண்டியவள். இந்தத் தீவில் இந்தப் பெண் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று வியப்படைந்தது சங்கர்லால் மனம்!

பாரடைஸ் ஓட்டல் பொறுப்பாளர் தொலை நோக்கியால் ஒரு நாள் மர்மத் தீவைப் பார்த்தபோது,ஓர் அழகிய பெண் குளித்துவிட்டுக் கடற்கரையிலிருந்து முள் வேலியைக் கடந்து தீவிற்குள் மறைந்ததாகச் சொன்னது சங்கர்லாலுக்கு நினைவு வந்தது.

புரபஸர் பழமலைநம்பி, அந்தப் பெண்ணைப் பார்த்து, "இவர்தான் பிரபல துப்பறியும் சிங்கம் சங்கர்லால்,தெரியாமல் நம் தீவுக்குள் வந்துவிட்டார்!" என்றார்.

பிறகு அவர் சங்கர்லாலைப் பார்த்து, "இவள் என் மகள் பெயர் மலர்ச்சோலை" என்று அறிமுகப்படுத்தினார்.

"உள்ளே வாருங்கள் சங்கர்லால். வந்தது வந்தீர்கள், இங்கே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொண்டால் மட்டும் போதுமா? எங்களுடன் ஒரு கோப்பைத் தேநீர் பருகுங்கள். அதற்குள் எங்கள் தலைவர் வந்துவிடுவார். அவரிடம் நீங்கள் பேசலாம். உண்மை தெரிந்தால் இந்தத் தீவிற்கு நீங்கள் வந்து இருக்க மாட்டீர்கள்!" என்றார் புரபஸர்.

பிறகு, புரபஸர், துப்பாக்கி ஏந்திய வீரர்களை வெளியிலேயே நிற்கும்படி சொல்லிவிட்டுச் சங்கர்லாலை உள்ளே அழைத்துச் சென்றார்.

உள்ளே சென்றதும்தான் அது எவ்வளவு பெரிய கட்டடம் என்பது தெரிந்தது. வீட்டிற்குள் நுழைந்து முற்றம் போன்ற ஒரு பகுதியில் மூங்கிலினால் செய்யப்பட்ட மிக அழகிய நாற்காலிகள் இருந்தன. புரபஸரும் சங்கர்லாலும் அவற்றில் உட்கார்ந்தார்கள்.



மலர்ச்சோலை தேநீர் போட்டுக் கொண்டுவரச் சென்றாள்.

முற்றத்துக்கு அப்பால் இன்னும் பல கட்டடங்கள் தொடர்ந்து தெரிந்தன. அவற்றைப் பார்த்தால் ஆராய்ச்சிக் கூடங்களைப்போல காணப்பட்டன. அங்கேயிருந்து தொடர்ந்து ஏதோ ஓசைகள் வந்து கொண்டிருந்தன.

சங்கர்லாலின் காதுகள் அந்த ஓசையைக் கவனித்தன.

எலிகளும், முயல்களும், குரங்குகளும், பன்றிகளும் தனித்தனியாகப் பல கூண்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தன.

"இங்கே நீங்கள் என்ன ஆராய்ச்சிகளைச் செய்கிறீர்கள்? தெரிந்து கொள்ளலாமா?" என்று சங்கர்லால் கால்மீது காலைப் போட்டபடி கேட்டார்.

அவர் அந்த இடத்தில் ஒரு கைதியைப் போல் நடந்து கொள்ளவில்லை; ஏதோ அந்த இடத்தை மேற்பார்வையிட வந்தவரைப்போல் காணப்பட்டார்.

"நீங்கள் தொடர்ந்து பல நாட்கள் ஜப்பானில் தங்கி விட்டீர்கள். ஆகையால், இந்தியாவில் என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. வாய்ப்பில்லை. மேலும் இங்கே நான் நடத்திய ஆராய்ச்சிகளைப் பற்றி உங்களுக்குக் கொஞ்சமும் தெரிய வாய்ப்பில்லை. இந்திய அரசாங்கம் இதை மிக இரகசியமாக வைத்திருக்கிறது. இந்தியாவின் பிரதம மந்திரிக்கும், பாதுகாப்பு மந்திரிக்கும் மட்டும்தான் இதைப்பற்றித் தெரியும். அவர்கள் ஏற்பாடு தான் இது. எங்கள் ஆராய்ச்சி முடிந்து விட்டது. இந்த ஆராய்ச்சியின் முடிவை இன்று பாதுகாப்பு மந்திரி வந்து வாங்கிப் போகப்போகிறார். நீங்கள் இங்கு வந்தது தெரிந்தால் பாதுகாப்பு மந்திரியே சினம் கொள்வார். பிரதம மந்திரிக்குத் தெரிந்தால் அவர் உங்கள் மீது சீறி விழுவார்!" என்றார் புரபஸர்.

அவர் சொன்னதைக் கேட்டதும் சங்கர்லாலுக்கு வியப்பாக இருந்தது.

"அவ்வளவு பாதுகாப்பான இடம் என்றால் இங்கு எவரும் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையா?" என்றார் சங்கர்லால் கொஞ்சம் கேலியுடன்.

**தொடரும்...**

# காதல் செய்த கொடுமை



இளவரசர் திபேந்திரா இயந்திரத் துப்பாக்கியுடன் (முன்னர் எடுத்த படம்)

**கா**தல் கதைகளால் யுத்தங்கள் மூண்ட சம்பவங்கள் வரலாற்றில் ஏராளமாக காணப்படுகின்றன. காதலுக்காக மன்னர்கள் முடி துறந்த கதைகளும் அரச குடும்பங்களை விட்டுப் பிரிந்த சம்பவங்களும் கூட நிகழ்ந்திருக்கின்றன.

இவை எல்லாவற்றையும் விஞ்சும் கொடூரம் ஒன்றும் கடந்த வெள்ளிக்கிழமை நேபாள மன்னரின் அரண்மனையில் நடைபெற்றது. இதற்கும் காதல்தான் காரணம்!


நேபாள அரச வம்சத்தின் முக்கியஸ்த்தர்கள் அனைவருக்கும் அந்த வம்சத்தின் வாரிசாராலேயே சமாதி கட்டப்பட்டது.

மன்னர் பிரேந்திரா மாகராணி ஐஸ்வர்யா தம்பதிகளின் மகன் திபேந்திரா தனது காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பெற்றோரையும், குடும்பத்தவர்களையும் இயந்திரத் துப்பாக்கி ஒன்றினால் சுட்டுக்கொன்றிருக்கிறார்.



மன்னர் பிரேந்திரா, ஐஸ்வர்யா மகாராணி, இளவரசர் திபேந்திரா, அவரது சகோதரர் நிரஞ்சன், இளவரசி சுருதி

29 வயதான இளவரசர் திபேந்திரா முன்னாள் நிதியமைச்சர் பசுபதி ஷம்சேயார் ராணாவின் மகள் தேவயாணி ராணாமீது தீவிர காதல் கொண்டார். 22 வயது அழகியான தேவயாணி இந்தியாவின் புகழ்பெற்ற மகாராஜா பரம்பரையைச் சேர்ந்தவர். இவர்களுக்கிடையிலான காதல் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பல வருடகாலமாக நீடித்து வந்துள்ளது.



தேவயாணி

தேவயாணிக்கு இந்திய வம்சாவழித் தொடர்பிருப்பதால் அவரை திபேந்திராவுக்கு மணமுடித்து வைக்க மன்னர் பிரேந்திராவோ, மகாராணி ஐஸ்வர்யாவோ சிறிதும் விரும்பவில்லை. நேபாள பூர்வீக மரபின்றி இந்தியத் தொடர்பிருக்கும் தேவயாணியை தமக்கு மருமகளாக ஏற்றுக் கொள்ள முடியாதென ஐஸ்வர்யா தேவி திட்டவட்டமாக கூறிவிட்டது மாத்திரமன்றி தமது நேபாள அரச பரம்பரையைச் சேர்ந்த வேறொரு பெண்ணை மணமுடித்து வைக்கவும் ஏற்பாடுகளை ஆரம்பித்திருந்தார்.

இதற்கிடையில் இளவரசர் பிரேந்திரா தேவயாணியை இந்து சமய முறைப்படி இரகசியத் திருமணம் செய்து கொண்டதாகவும் கதை பரவியுள்ளது.

இந்நிலையில் இந்தப் பிரச்சனை வெள்ளிக்கிழமை இரவு அரச மாளிகையான நாராயண ஹிட்டியில் நடைபெற்ற இராப் போசனத்தின்போது பேசப்பட்டிருக்கிறது. தேவயாணியை மணமுடிக்கக் கூடாதென தாய் ஐஸ்வர்யா தேவி கடும் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறார். திபேந்திரா தனித்தீர்மானம் எடுக்கக் கூடாதெனவும் அரச சம்பிரதாயங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் மன்னர் பிரேந்திராவும் எடுத்துக்கூற வாக்குவாதம் வலுப்பெற்றுள்ளது.

இதன் பின்னரே ஆத்திரமடைந்த இளவரசர் திபேந்திரா இயந்திரத்துப்பாக்கி ஒன்றை எடுத்து வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த அனைவரையும் கண்டபடி சுட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அரச மாளிகையின் சாப்பாட்டறை இரத்தக் குளமாக மாறியது. தாய் தந்தை ஒரு சகோதரி, சகோதரர் உட்பட இன்னும் பல குடும்ப உறுப்பினர்களை சுட்டுக் கொன்ற திபேந்திரா இறுதியில் தன்னைத் தானே சுட்டுள்ளார். இவர் மிக ஆபத்தான நிலையில் உயிருக்காக போராடிய அவர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற அன்றே தேவயாணி இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளார்.

17ம் நூற்றாண்டில் இருந்து தொடரும் நேபாள மன்னர் பரம்பரை காதலால் சாய்க்கப்பட்டிருக்கிறது.

அரச குடும்பங்களுக்கான மக்கள் ஆதரவு வேகமாக குறைந்து வரும் இன்றைய நாட்களில்கூட மன்னர் பிரேந்திராவையும் அவரது குடம்பத்தினரையும் நேபாள மக்கள் வெகுவாக நேசித்தனர். இளவரசர் திபேந்திரா தான் எல்லோரையும் சுட்டுக் கொன்றார் என்பதை அந்நாட்டு மக்கள் நம்ப மறுக்கின்றனர்.

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 56

அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் இலங்கையிலேயே தலை சிறந்த சட்ட நிபுணராகத் திகழ்ந்தவர். சிறுவயதிலேயே இங்கிலாந்து சென்று சட்டத்துறையில் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றவர். இப்பட்டத்தைப் பெற்ற சட்டத்துறை நிபுணர்கள் எந்த நாட்டவரானாலும் பிரித்தானியாவுடன் தொடர்புடைய பொது நலவாய நாடுகள் எவற்றிலும் நீதிமன்றத்தில் வாதிடும் உரிமை பெற்றவராவார்.

'பாரிஸ்டர்' பட்டம் பெற்ற திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் இந்தியா, மலாயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு எல்லாம் சென்று அங்கெல்லாம் நடைபெற்ற பல முக்கியமான வழக்குகளில் வாதாடி வெற்றி வாகை சூடி செல்வமும் செல்வாக்கும் பெற்றவர்.

சே.பொன். இராமநாதன் அவர்களுடைய சகோதரரான சேர் பொன். அருணாசலம் அவர்கள், அவருடைய காலத்தில் பல சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கையை மீட்டெடுத்து ஒரு சுதந்திர நாடகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். இந்தியாவின் சுதந்திரத்திற்காக போர்க்கொடி உயர்த்திய இந்தியத் தேசிய காங்கிரசின் அடிப்படையில் இலங்கையிலும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற ஓர் அமைப்பை சேர் பொன். அருணாசலம் இலங்கையில் ஆரம்பித்து வைத்தார்.

அக்காலத்தில், இருந்த சிங்கள அரசியல்வாதிகளிடமும் பேரினவாதக் கொள்கைகள் தலையெடுத்ததைக் கண்ட அருணாசலம் அவர்கள், தானே உருவாக்கிய காங்கிரஸ் அமைப்பைவிட்டு வெளியேறி விட்டார்.

இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டு உழைத்த இந்தியத் தலைவர்களை மகாத்மாகாந்தி அடிகள் தலமை தாங்கி வழி நடத்தினார். 1940ம் ஆண்டுகளில் சுதந்திரப் போராட்டம் இந்தியாவில் கனவேகமாக கிளர்ந்தெழுந்தது. மகாத்மா காந்தியடிகள் சாத்வீக முறையில் அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டு போராடி வந்த வேளையில், மற்றுமொரு சாரார் 'சாத்வீகப்' போராட்டங்களினால் வெள்ளையரை அடிபணிய வைக்க முடியாது' என்ற கருத்துடன் பல வன்முறைச் செயல்களில் ஈடுபடலாயினர்.

இரண்டாவது உலகப் போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த கால கட்டமது. பழைமை தழுவும் 'கன்சர்வேடிவ்' கட்சியின் தலைவரான சேர்.வின்சன்ட் சேர்ச்சில் நாட்டின் பிரதமராகவிருந்தார். பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்திற்குட்பட்ட நாடுகளையும் இரண்டாவது உலகப் போருக்குள் பிரித்தானியா இழுத்துவிட்டது. இதனால் இலங்கையிலும் திருகோணமலை உட்பட வேறு பல இடங்களிலும் பிரிட்டிஷ் துருப்புக்கள் நிலைகொண்டன. தென்கிழக்காசியாவில் நிலை கொண்டிருந்த பிரிட்டிஷ் துருப்புக்களின் தலைமையகம் கண்டியில் தான் அமைக்கப்பட்டிருந்தது. இதற்குத் தலைவராக விளங்கியவர் முன்னாள் இந்திய மகாதேசாதிபதியாக விளங்கிய லோர்ட் லூயிஸ் மௌவுண்ட் பேட்டன் ஆவார்.

இந்தியாவிலும் முக்கியமான நகரங்



களிலெல்லாம் பிரிட்டிஷ் துருப்புக்கள் குவிக்கப்பட்டிருந்தன.

திருகோணமலைத் துறைமுகம் பிரிட்டிஷ் கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. இதேபோன்று மலாயா, சிங்கப்பூர்

## அமரர் பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை

போன்ற இடங்களிலெல்லாம் பிரிட்டிஷ் துருப்புக்களும் போர்க்கப்பல்கள், யுத்த விமானங்கள் ஆகியவையும் நிலை கொண்டிருந்தன.

**எழுத்துச் சிற்பி எஸ்.டி.எஸ் அவர்களைப் பற்றி எழுதத் தொடங்கியவர் எப்போதோ நடந்து முடிந்து, மக்களால் மறக்கடிக்கப்பட்டு மறைந்து போன சம்பவங்களை இப்பொழுது ஏன் - இத்தனை விரிவாக எடுத்துக் காட்ட முன்வர வேண்டும், என்று எமது வாசகர் பலர் முணுமுணுப்பது தெரிகிறது.**

**எமது வரலாற்றுப் பின்னணியை இன்றுள்ள பலரே தெரியாதிருக்கின்றனர். இன்றுள்ள பலருக்கு தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் விடுதலைப் போராளிகளின் ஆரம்பத்தோடுதான் என்று மட்டும் கருதியிருக்கிறார்கள். இதற்கான அரசியல் பின்னணி எத்தகையது என்பதை இன்றுள்ள வாசகர்களும் இனிமேல் வருங்காலத்தில் உருவாகப் போகும் சந்ததியினரும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே வாசகர்களுக்கு இவற்றை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.**

பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் உலகப் போரில் குதித்தமையினால், அந்த சாம்ராஜ்ஜியத்திற்குள் அடங்கிய சகல நாடுகளும் போர்க் கோலம் பூண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்தக் கால கட்டத்தில் இந்தியா சுதந்திரம் வேண்டி போராட்டங்களை நடத்தி வந்தமையினால், அப்போராட்டங்களை தலைமையேற்று நடத்த வேண்டிய பொறுப்பிலிருந்த இந்திய தேசிய காங்கிரசுடன் பிரிட்டிஷ் அரசாங்கம் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டியிருந்தது. யுத்தம் முடியும்வரை அமைதியாக இருப்பதுடன் யுத்த வெற்றிக்கு ஒத்துழைப்புத் தந்தால், இந்தியாவின் சுதந்திரத்திற்கு உரிய உத்தரவாதம் தரப்படுமென்று பிரிட்டிஷ் சாம்ராஜியம் காங்கிரசுடன் வாய் மூலமான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொண்டது.

இரண்டாவது உலகப் போர் 1945ம் ஆண்டு ஆரம்பத்தில் முடிவடைந்தது. ஆனால் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவதை பிரித்தானியா பின்போட்டுக் கொண்டே வந்தது. இக்கால கட்டத்தில் பிரித்தானியாவில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அந்த நாட்டை மட்டுமல்லாமல் போரில் மூழ்கி பலதுன்பங்களையும் அனுபவித்து வந்த உலகத்தின் பல நாடுகளையும் ஓர் ஆபத்திலிருந்து மீட்டெடுத்த பிரித்தானிய பிரதம மந்திரி சேர் வின்சன்ட் சேர்ச்சில் படுதோல்வி அடைந்தார். தொழிற் கட்சி வெற்றிபெற்றது. அக்கட்சியின் தலைவர் அற்லி பிரிட்டிஷ் பிரதமரானார்.

உலகப் போரினால் ஏற்பட்ட பேரழிவுகளிலிருந்து பிரிட்டனையும் ஏனைய சாம்ராஜ்ய நாடுகளையும் மீளக் கட்டி யெழுப்ப வேண்டிய பொறுப்பு பிரித்தானிய அரசாங்கத்தின் தலையில் வீழ்ந்தது. இந்த நிலையில் சுதந்திரத்துக்காகப் போராடும் இந்தியா போன்ற நாடுகளின் கிளர்ச்சிகளுக்கு முகங்கொடுக்க முடியாத நிலையிலிருந்த தன்மையை உணர்ந்து, இந்தியாவுக்கு சுயாட்சி வழங்க முன்வந்தார் பிரதமர் அற்லி.

1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதியன்று இந்தியா சுதந்திரமடைந்தது. இதற்காக இந்தியா கொடுத்த விலை சாதாரணமானதல்ல; அந்நாட்டு மக்கள் செய்த தியாகம் உலக வரலாற்றில் தனியானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சிங்கள மற்றும் தமிழ் தொண்டர்களும் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக தமிழ் நாட்டில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டங்களில் இலங்கைத் தமிழ் தொண்டர்களும் சேர்ந்து சிறை சென்று திரும்பியுள்ளனர்.

இவ்வாறு இலங்கையிலிருந்து இந்தியா சென்று சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறை புகுந்து மீண்ட தியாகி இராஜகோபால் அவர்களைப்பற்றி இக் கட்டுரையின் ஆரம்பத்தில் 'எஸ்.டி.எஸ். கண்ட பாரதி' தொடரில் வாசகர்கள் பார்த்திருப்பீர்கள். இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர். இவரை 'சிறுகாந்தி' என்றும் அழைப்பார்கள். இவரைப் போன்று யாழ்ப்பாணத்திலிருந்து பல தொண்டர்கள் தமிழ்நாடு சென்று சுதந்திரப் போராட்டத்தில் குதித்து, சிறை சென்று இலங்கை மீண்டுள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் இந்திய அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை ஒவ்வூதியமாக வழங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து 1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதியன்று இலங்கைக்கு சுதந்திரம் வழங் கப்பட்டது. இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டி பெரிய அளவில் எந்தப் போராட்டமும் நடைபெற்றதாக வரலாற்றில் காணப்படவில்லை.

சேர்.பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் வண.அனகாரிக தர்மபால,



மவுண்ட் பேட்டன் பிரபு

எஃப்.ஆர்.சேனநாயக போன்றவர்கள் இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர்களாக இருந்தார்கள். டாக்டர் என்.எம் பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா, பிலிப் குணவர்த்தன டி.எஸ் சேனநாயக போன்ற பல இளைஞர்களும் சுதந்திர இலங்கையைப் பற்றிய சிந்தனையில் நாட்டஞ் செலுத்தினர். பிரித்தானிய அரசாங்கத்துடன் எழுத்து மூலமான தொடர்புகளையும் கொண்டிருந்தனர்.

அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் சேர்.பொன். அருணாசலம் அவர்களுடைய அப்போதைய நிலைப்பாடுகளை உன்னிப்பாக அவதானித்து வந்தார். 'இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டு பெரும்பான்மையாகவுள்ள சிங்களவர்களிடம் அதிகாரம் குவிக்கப்படுமானால்; இந்நாட்டில் சிறுபான்மையினராகவுள்ள தமிழர்களும், முஸ்லிம்களும் அரசியல் அநாதைகளாக்கப் பட்டுவிடுவார்கள்' என்று தீர்க்கதரிசனம் கண்டார்.

அரசியலில் அதுவரை போதுமான அளவு அக்கறை காட்டாமல் இருந்து வந்த பொன்னம்பலம் அவர்கள் தீர்க்கமாகச் சிந்திக்கலானார்.

இதன்பயனாக 1944ம் ஆண்டு தமிழ் காங்கிரஸ் என்ற அமைப்பினை உருவாக்கினார். ஆரம்பத்தில் அவருடைய கருத்துக்கு மக்கள் மத்தியில் போதுமானளவு அக்கறை ஏற்பட்டதில்லை. இருப்பினும் விடாமுயற்சியாக அவரையொத்த பலரை ஒன்று திரட்டினார். தந்தை செல்வா என்று பின்னாளில் தமிழ் பேசும் மக்களால் போற்றப்பட்ட திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அப்போது ஒரு சிறந்த சட்டத்தரணியாக விளங்கினார். கொழும்பில் வசித்து வந்த அவர் சிவில் வழக்குகளில் குறிப்பாக மேல் முறையீட்டு வழக்குகளில் வாதாடி சிறப்புப் பெற்றிருந்தார். தமிழ் காங்கிரசில் செல்வாவும் இணைந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வழக்கறிஞராக விளங்கிய திரு. கு.வன்னிய சிங்கம், திரு.வி.குமாரசாமி, திரு. கே.கனகரத்தினம் திருமலை எஸ்.சிவபாலன் போன்றோர் திரு.பொன்னம்பலத்துடன் இணைந்தனர்.

இதே காலட்டத்தில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவது தொடர்பான ஆரம்ப விசாரணைகளை நடத்துவதற்கு இங்கிலாந்திலிருந்து சோல்பரி பிரபு அவர்களின் தலைமையில் ஒரு குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இவ்விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளித்த திரு.ஜி.ஜி.பொன்னம்பலம், "சுதந்திர இலங்கையின் அமைக்கப் படவிருக்கும் பாராளுமன்றத்தில், பெரும்பான்மையினரான சிங்களவர்களுக்கு ஐம்பது வீத ஆசனங்களும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகவுள்ள தமிழர், முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சமூகத்தினருக்கும் ஐம்பது சதவீதமான ஆசனங்களும் ஒதுக்கப்படக்கூடிய வகையில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் ஒதுக்கப்படவேண்டும்" என்று வாதிட்டார்.

இரா.பத்மநாதன்

சோல்பரி விசாரணைக் குழுவிலிருந்த குழுத் தலைவர் சோல்பரி பிரபுக்கும் வேறு சிலருக்கும் திரு. பொன்னம்பலம் அவர்களின் கோரிக்கை நியாயமாகப்பட்டது. எனினும் இதற்கு சிங்கள அரசியல்வாதிகள் எவரும் உடன்படவில்லை. பிரித்தானியாவில் எவ்வாறு- எத்தகைய பேதமுமில்லாமல் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறதோ அதே போன்று பாராளுமன்ற அமைப்பு முறையே இலங்கைக்கு இருக்க வேண்டும் என்று விசாரணை சபையிடம் வற்புறுத்தியுள்ளனர். எனவே இலங்கைக்கு ஒற்றையாட்சி முறையிலமைந்த இன பேதமற்ற பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றமே பொருந்தும் என்று சோல்பரி விசாரணைக் குழுவினர் அறிவித்துவிட்டனர்.

ஐம்பதுக்கு ஐம்பது என்ற திரு.ஜி.ஜி பொன்னம்பலத்தின் கொள்கையை தமிழ் காங்கிரசாரல்லாத வேறு எவரும் ஆதரிக்க முன்வரவில்லை. இதனால் அமரர் பொன்னம்பலம் அவர்கள் மனமுடைந்து போனார். இருப்பினும் தமிழ்.காங்கிரசை தமிழர்களுக்கான ஒரு தனிப் பெரும் அரசியல் கட்சியாக வளர்த்தெடுப்பதில் முழுமூச்சாகச் செயற்பட்டார்.

**(இன்னும் வரும்)**

# வாரம் ஒரு வார்த்தை!

## 19. நட்பும் பகையும்

ஒரு பக்தன் காட்டுலே ரொம்பவும் கடுமையா தவம் பண்ணிக்கிட்டிருந்தான்!

கடவுள் உடனே அவனுக்கு முன்னாடி வந்து காட்சி கொடுத்தார்! கையிலே கதாயுதம் வேறே வச்சிருந்தார்.

"பக்தா! உன்னுடைய பக்தியை மெச்சினேன்! உனக்கு என்ன வரம் வேணுமோ கேள் தர்றேன்"னாரு!

இப்படி சொன்னதுக்கப்புறம் பக்தன் சும்மா இருப்பானா?

"பகவானே! என்னுடைய முன்னேற்றத்துக்குத் தடையா இருக்கிற சக்திகளை உன்னுடைய கதாயுதத்தாலே தாக்கி-வீழ்த்தி-அழிச்சுடணும்! இதுதான் என்னுடைய வேண்டுகோள்!" அப்படின்னான்!

பகவான் இதைக் கேட்டார். முகத்திலே புன்னகை.

"அதுக்கென்ன? அப்படியே செஞ்சுடறேன்!" அப்படின்னு சொல்லிபுட்டு மறைஞ்சுட்டார். கொஞ்ச நேரம் ஆச்சு!

ஆண்டவன் கையிலே இருந்த கதாயுதம் வேகமா வந்தது! வரம் கேட்டானே பக்தன்; அவன் மார்பையே நோக்கி வந்து தாக்க ஆரம்பிச்சுட்டுது. அப்படியே தடுமாறி கீழே விழுந்துட்டான். 'இது ஏதுடா வரம் கேட்டது வம்பாப் போச்சி'ன்னு நினைக்க ஆரம்பிச்சுட்டான்!

"அய்யய்யோ ஆண்டவனே! என்னப்பா இது? என்னுடைய முன்னேற்றத்துக்குத் தடையா இருக்கும் பகைவனை அல்லவா தாக்கச் சொன்னேன். நீ ஞாபக மறதியா ஏதாவது பண்ணிபுட்டியா? உன்னுடைய கதாயுதம் என்னையே வந்து தாக்குதே! குறிகிறி தவறிப் போச்சா!" அப்படின்னு கத்த ஆரம்பிச்சுட்டான் பக்தன்!

கடவுள் மறுபடியும் காட்சி கொடுத்தார். பக்தனைப் பார்த்துச் சொன்னார்:

"பக்தா! நீ கேட்டபடிதான் நான் ஆயுதத்தை வீசினேன்! ஞாபகமறதி ஒண்ணும் கிடையாது! குறிதவறியும் அது வந்துடலே! சரியாத்தான் வந்திருக்கு!

மத்தவங்களை தாக்கணும்-வீழ்த்தணும்-அழிக்கணும்ன்னு நினைக்கிற உன் மனம்தான் உனக்குப் பகைவன்-எதிரி எல்லாம்! உன் முன்னேற்றத்துக்குத் தடையா இருக்கிறது நீயேதான்! அதனாலேதான் இது உன்னையே வந்து தாக்கியிருக்கு!" அப்படின்னு கடவுள் சொன்னாராம்!

இதுலேயிருந்து.. "நமக்கு எதிரி யார்" என்கிறதை நல்லா புரிஞ்சிக்கிட்டோம் இல்லையா?

நமக்கு நண்பர்கள் யார்?

நமக்கு கிடைக்கிற நண்பர்களை மூணு வகையா பிரிச்சுடலாம்! பனை மரம்-தென்னைமரம்-பாக்குமரம் இப்படி!

பனை மரம் இருக்கே இது தானா முளைக்கும். தானாவே தண்ணி குடிச்சிக்கும்-தானாவே வளரும்! நமக்கு பலன் கொடுக்கும்.

நமக்கு வலிய வந்து உதவி செய்யிற நண்பர்கள் இந்த ரகம்!

தென்னை மரம் இருக்கே. இதுக்கு எப்பவாவது தண்ணீர் விட்டா போதும்... வளர்ந்துடும்!

இது மாதிரி எப்பவாவது உதவி செஞ்சா அதை ஞாபகம்வச்சிருந்து நமக்கு உதவி செய்யிற நண்பர்கள் தென்னை மரம் மாதிரி!

பாக்கு மரம்இருக்கே இதுக்கு தினமும் தண்ணீர் விட்டாதான் வளரும்'. பலன் கொடுக்கும்!

இதுமாதிரி தினமும் உதவி செஞ்சாத்தான் நம்மை கவனிக்கிற நண்பர்கள் உண்டு! இவங்கள்லாம் பாக்கு மரம் மாதிரி!

ஆக நண்பர்களை இந்த வகையிலே அடையாளம் கண்டுகிட்டு அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்கணும்!

ஆனா...

இந்த காலத்தோட கோலம் எப்படின்னா... நாம நல்லதுன்னு நினைச்சி இன்னொருத்தருக்கு உதவி செஞ்சாக்கூட உபத்திரவத்துலே மாட்டிக்கிறாப்புலே ஆயிடுது!

ஒருத்தர் வந்தார்..

"சார்! ஆத்து வெள்ளத்துலே நான் தத்தளிச்சிக்கிட்டு இருந்தப்ப என்னைக் காப்பத்தினது நீங்கதானா சார்!"ன்னு கேட்டார்.

அதுக்கு இவரு சொன்னார்:

"ஆமாம்! அதனாலே என்னப்பா? அது என் கடமை... இதுக்குப் போய் நன்றியெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லே"-ன்னார்.

இதுக்கு அந்த ஆளு:

"அதுக்கில்லே சார்! சட்டைப் பையிலே ஒரு 25 காசு வச்சிருந்தேன்! அதை காணோம்! அதுக்காகத்தான் கேட்டேன்"னாராம்!

இது எப்படி?

**(வார்த்தைகள் தொடரும்)**

தென்கச்சி - கோ. சுவாமிநாதன்



# உண்மை சொல்ல வேண்டும்...



ரூபராணி

ஒரு வாரத்தில் எனக்குப் பிடித்தமான நாட்கள் சனியும் ஞாயிறுந்தான். ஏனைய நாட்கள் பள்ளிக்கூடம், படிப்பித்தல் என்று ஓய்வேயில்லை. உத்தியோகம் புருஷலட்சணம் என்பார்கள். இப்போது அது பெண் லட்சணமும் ஆகிவிட்டதே. ஓய்வென்று நான் கருதுவதெல்லாம் வேலை மாற்றத்தையே. காரியம் பண்ணாமல் வெறுமனே உட்கார்ந்திருப்பதுவே ஓய்வு என்று எண்ணுவோரும் உண்டு. இந்த ரகத்திலிருந்து விதி விலக்குப் பெற்றவள் நான்.

சனி, ஞாயிறு, இந்த இரண்டு நாட்களிலும் வீட்டிலும் வெளியிலும் நான் செய்யவேண்டிய வேலைகளை முன்னதாகவே திட்டம் போட்டு விடுவேன். இந்த என் வழமையான நிகழ்வுகளில் எனக்குத் திருப்தி மகிழ்ச்சி எல்லாமே உண்டு.

அன்று சனிக்கிழமை. அசுர வேகத்தில் என் வேலைகளை ஆரம்பித்து விட்டேன். தொலைபேசி அலறியது. 'சே.. தொலைபேசிகளால் தொல்லைகள்தான் அதிகம்' என்று அலுத்துக் கொண்டவளாய் ஒலிவாங்கியை எடுத்து "ஹலோ" என்றேன்.

மறுமுனையில் மல்லிகாவின் கணவர் ரவீந்திரன். "வீட்ல களவு நடந்துவிட்டது. ப்ளீஸ், வர்றீங்களா?" தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. கேட்ட செய்தி என் கை காலை ஆடவைத்துவிட்டது. மல்லிகா என்னுயிர் நண்பி. இருவரும் ஒரே பாடசாலையில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர்கள் நட்புக்கு இலக்கணம் மல்லிகாவேதான்.

என் உற்சாகம் வடிந்துவிட்டது. போட்ட திட்டங்கள் நொடிப் பொழுதில் மாறிப்போய் விட்டன. காலைக் கடமைகளில் பம்பரமாகச் சுழன்று பஸ் தரிப்பு நிலையத்தை அடைந்தேன். என்னுடைய அவசரம் பஸ்ஸுக்கெங்கே தெரியப்போகிறது. நாலுமைல் தொலைவிலுள்ள என் நண்பியின் வீட்டை அடைந்தபோது, நேரம் ஒன்பதை நெருங்கியது. வாசல் கதவு இரண்டும் திறந்து கிடந்தது.

கூடத்தில் மல்லிகாவின் கணவர் ரவீந்திரன் குறுக்கும் நெடுக்குமாக கைகளைப் பின்னால் பிணைத்தபடி நடந்து கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் கவலை அப்பிக்கிடந்தது. என்னைக் கண்டதும் முறுவலித்து "வாருங்கள் கௌசி" என்றார்.

இனந் தெரியாத கலவரம் என்னையும் தொற்றிக் கொண்டது. மள மளவென்று வீட்டின் இரண்டு அறைகளையும் நோட்டம் விட்டேன். களவு நடந்ததற்கான தடயங்களைதையும் நான் காணவில்லை. அறையின் சுவர் ஓரமாக வைக்கப்பட்டிருந்த மூன்று சூட்கேசுகளில் நடுவிலிருந்தது மட்டும் வாய் திறந்து கிடந்தது. அதனருகே இருந்த கதிரையில் மல்லிகாவின் உடுப்புக்கள் அடுக்கி வைக்கப்பட்டதுபோலிருந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை.

மல்லிகாவைத் தேடினேன். அவள் குசினியின் மூலையில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் முகத்தில் ஒட்டியிருந்தது கவலையா? யோசனையா என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. "என்ன நடந்தது?" நான் கேள்வி எழுப்பினேன் கவலையோடு.

"ஒன்றும் நடக்கவில்லை" என்றாள் நறுக்கென்று. எனக்குத் தூக்கிப்போட்டது. குழப்பத்தில் என் முகம் இறுகியது.

குசினிப்பக்கம் வந்த ரவீந்திரன் "போலீசைக் கூட்டி வரட்டுமா?" என்றார் தன் மனைவியிடம். மல்லிகா அவசரமாக வேண்டாம் என்று தலையசைத்து "எனக்குப் பொருட்களைப்பற்றிக் கவலையில்லை. ஆட்களைப் பற்றியே கவலைப்படுகிறேன்" என்றாள் எங்கோ பார்த்தபடி. மல்லிகாவின் இந்தப் பதில் ரவீந்திரனுக்கு எரிச்சலூட்டியிருக்க வேண்டும். அவர் ஆத்திரத்தை அவள்மீது அள்ளி வீசி விட்டுச் சென்றார். இருவருக்குமிடையில் நான் அகப்பட்டுத் தவித்தேன்.

"களவுபோன பொருட்கள் எவை?" என்று மல்லிகாவிடம் கேட்டேன். "அதிகமில்லை ஒரு ஐயாயிரம் ரூபாய். ஒரு அயண், சின்ன றேடியோ செற் அவ்வளவுதான். ஆனால் ஒன்று எடுத்தவன் ஒரு நல்ல கள்ளன்" என்றாள் சாதாரணமாக. எனக்கொன்றும் புரியாமல் குழம்பியபோது "கௌசி நீ கவலைப்படாமல் நிம்மதியாய் வீட்டுக்குப்போ. திங்கள் சந்திப்போம்" என்றாள். அவள் குரலில் வருத்தம் தோய்ந்திருந்தது.

நான் என் நிம்மதியைத் தொலைத்துவிட்டு வீடு வந்து சேர்ந்தேன். என் மனம் எதிலும் படிய மறுத்தது. சனியும் ஞாயிறும் என்னைச் சித்திரவதை செய்தது . திங்களுக்காகக் காத்திருந்தேன். அந்தத் திங்களும் வந்தது. பாடசாலை சுறுசுறுப்படைந்து விட்டது. மல்லிகா எதுவும் நடந்ததுபோல் ஏனையோருக்குக் காட்டிக் கொள்ளவில்லை. எப்போது பாடசாலை முடியுமென்று என் மனது பரபரத்தது. இரண்டரை மணி அடித்ததும் பேரிரைச்சலுடன் மாணவிகள் வெளியேறியபோது, மல்லிகா அவசரமாகக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு என்னருகே வந்தாள். "நான் உன்னோடு தனியாப் பேசணும். வகுப்புக்கு வருகிறேன்" என்று என் காதோரம் மெதுவாகக் கிசுகிசுத்தாள். பள்ளிக்கூட வேலைகளை முடித்துவிட்டு, நான் அவளுக்காகக் காத்திருநதேன்.

சுமார் மூன்றரை மணிக்கெல்லாம் வகுப்பறைகள் வெறுமையடைந்து விட்டன. மல்லிகா வழமையான புன்னகையுடன் என்னருகே வந்தமர்ந்து சொல்லத் தொடங்கினாள்.

"என் கணவர் பிரபல கம்பனி ஒன்றில் வேலை பார்ப்பது தெரிந்த விஷயந்தானே. ஆனாலும் இடையிடையே அவருக்குப் பணம் தேவைப்படுவதற்கு எவ்வித நியாயமும் இல்லை. நானும் உழைப்பவளல்லவா? இருந்தும் அவர் கேட்கும் போதெல்லாம் கொடுத்துள்ளேன். காரணம் கேட்டால் எங்களுக்குள் வாக்குவாதந்தான் மிஞ்சும்.." என்று கூறியவளிடம், "அவருக்குக் குடிப்பழக்கம் எதுவும் இல்லையே.." என்றேன்.

மல்லிகா இல்லை என்று பலமாகத் தலையசைத்து விட்டுத் தொடர்ந்தாள். "இம்முறை என்னிடம் மூவாயிரம் கேட்டார். நான் மறுத்து விட்டேன். மஞ்சுளா ரீச்சருடன் சீட்டுப் போட்டகாசு பத்தாயிரம் வந்ததும் உனக்குத் தெரியுமே. அந்தப் பணத்தை என் சூட்கேசுக்குள் வைத்தேன். அதற்குள் தான் என் நகைகளும் உள்ளன. இவ்வளவையும் சொல்லிவிட்டு இனிமேல்தான் கிளைமக்ஸ் கவனமாகக் கேள்" என்று கலகலவென்று சிரித்தாள்.

நான் ஒன்றும் புரியாதவளாய் அவள் முகத்தை ஏறெடுத்தேன். "வெள்ளி பின்னேரம் ஸ்கூலில் ஸ்போர்ட்ஸ் பிறக்ரிசை முடித்துவிட்டு, வீடு போய்ச் சேர்ந்த நேரம் சரியாக ஏழு மணி. என் கணவர் வழமைக்குமாறாக வாசலில் எனக்காகக் காத்திருந்தார். வீட்டில் களவு நடந்திருப்பதாகப் பதட்டத்துடன் சொன்னார். தானும் சற்று முன்னதாகத்தான் வந்ததாகவும் குறிப்பிட்டார். அதிர்ச்சியில் அடிபட்டவளாய் அறைக்குள் நான் ஓடினேன். பணமும் நகையுமிருந்த சூட்கேஸ் மட்டும் திறந்த நிலையில் இருந்தது. அவசர அவசரமாக நான் பணத்தைத் தேடினேன். அது இருந்தது. ஆனால் அது ஐயாயிரமாகக் குறைந்திருந்தது." "அப்போ நகை?" நான் கேள்வி எழுப்பினேன். "அவை அப்படியே இருந்தது. எனக்கு ஒரே குழப்பம். அனெக்சிலுள்ள வீட்டுச் சொந்தக்காரி மாலினி வீரசேகரவிடம் ஓடினேன். நடந்த விஷயங்களை ஆங்கிலத்தில் சொன்னேன். அவள் அதிர்ந்து போனாள்.

கௌசி கேளு... இன்னொரு ருசிகரமான தகவலையும் மாலினி சொன்னா." என்று முற்றுப்புள்ளி வைத்தாள் மல்லிகா.

சஸ்பென்ஸ் என்றால் எனக்குத் தலை வெடித்து விடும். "சொல்லு சொல்லு" என்று மல்லிகாவை அவசரப்படுத்தினேன். "மாலினி என்ன சொன்னாள் தெரியுமா?

இன்று பின்னேரம் மூன்று மூன்றரை மணியிருக்கும் உங்கட கஸ்பன்ட் வீட்டுக்கு வந்து ஒரு சின்ன சூட்கேசுடன் வெளியே போனதை நான் பார்த்தேனே. அவர் பயணம் போறாரோ என்று எண்ணினேன். பட்டப் பகலில் அதுவும் நாங்கள் பக்கத்தில் இருக்கும்போது எப்படி? என்று ஆச்சரியப்பட்டா. உங்களவர் வந்து போகுமுன்னோ பின்னோ களவு நடந்தது? மாலினியின் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அவளும்கூடவே வந்து பார்த்தாள்.

என் கவனமெல்லாம் அந்தச் சின்னச் சூட்கேசில்தான். அதைக் காணவில்லை. மாலினி சொன்னது என் மனதில் மின்னலாய் வெட்டியது ரெண்டும் ரெண்டும்-நாலு. எனக்கு எல்லாமே புரிந்து விட்டது கௌசி. கணவனே கள்வனாகலாமா?" பரிதாபமாகக் கேட்டாள் மல்லிகா.

என் உடலெங்கும் குப்பென்று வியர்த்தது. "உனக்கென்ன பைத்தியமா? பெரிய துப்பறியும் நிபுணி என்ற நினைப்பா? வீணா வம்பை விலைக்கு வாங்காதே," நான் படபடத்தேன். என் நண்பியின் வாழ்க்கை நாசமாகிவிடக்கூடாதே என்ற கவலை எனக்கு, அவள் தொடர்ந்தாள்...

"என் கணவருக்குத் தேவை மூவாயிரம். அதைமட்டும் எடுத்தால் எனக்குச் சந்தேகம் வரும் இல்லையா? அதனால் ஐயாயிரம் போயிருக்கு. ஒரு வீட்டில் பணம் மட்டுமா போகும்? களவு நடந்ததுபோல் காட்ட வேண்டாமா? அது தான் அயண், றேடியோ செற் எல்லாம் சின்ன சூட்கேசுள் வைத்துக் கடத்தப்பட்டிருக்கு கௌசீ.. நீ கொஞ்சம் யோசி. வெளிக் கள்வனாயிருந்தால் மீதிப் பணம் இருக்குமா? நகைகளை எடுக்காமல் விடுவானா? குறிப்பிட்ட சூட்கேசுள்தான் நகை, பணம் இருக்குமென்று கறெக்டா அவனுக்கெப்படித் தெரியும்? உடுப்புகளை அள்ளி வீசாமல் கதிரையில் அடுக்கினபடி வைப்பானா?"

அவள் சொல்லச் சொல்ல எனக்குத் தலை சுற்றியது. இதன் முடிவு என்னாகுமோ என்ற பீதி என்னைப் புரட்டியது.

"என் கணவருக்குக் களவெடுக்கத் தெரியாது. அவர் நல்ல கள்ளன்." சொல்லிவிட்டு மல்லிகா சிரித்தாள்.

"மல்லிகா, இதனால் உன் வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது" என்றேன். நான் கவலையுடன். "என் சந்தேகம் யார்மீது என்பதை என் கணவனிடம் நியாயப்படுத்திவிட்டேன். அவர் தானில்லை என்று வாதாடுகிறார். போராடுகிறார். என் வழக்குத் தொடரும். உண்மையும் பொய்யும் ஒரு கூட்டில் வாழ முடியாது." அவள் சிரித்துக் கொண்டே அழுதாள். நான் அழுது கொண்டே சிரிக்கிறேன்.

# சகுனம்



பருத்தித்துறை ச.இரா.பாலகிருஷ்ண ஐயர்

காலை மணி எட்டைத் தொட்டுக் கொண்டிருந்தது. மேசையில் இருந்த சில புதினப் பத்திரிகைகளைப் புரட்டி எடுத்துச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி படித்துக் கொண்டிருந்தேன். என்னுடன் அதுவரை கதைத்துக் கொண்டிருந்த சிவசாமிக் குருக்கள் காலைப் பூசைக்கு நேரமாகிவிட்டதால், எனது வீட்டுப் படலையைத் திறந்து வெளியேறி மெயின் ரோட்டில் கோவில் பக்கம் போய்க் கொண்டிருந்தார். அப்போது பக்கத்து வீட்டுக் கோபாலின் வேலையாள் அவருக்கு எதிரே ஓடிவந்து "குருக்களய்யா ஓடுங்கோ ஓடுங்கோ வெளியில வராதேயுங்கோ. உள்ளே போங்கோ!" என்று கத்தியபடி வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அதைக் கேட்ட அவர் தலைதெறிக்க மீண்டும் தன்வீட்டுப் பக்கமாகத் திரும்பி மூச்சுத் தெறிக்க உள்ளே ஓடி வந்து சேர்ந்தார். அவரும் நானும் இராணுவ லொறியோ கவசவாகனங்கள் ஏதோ தான் வருகிறது போலும் என்று இருந்த இடம் விட்டு நகராமல் அடையாள அட்டைகளுடன் அப்படியே இருந்தோம். நாங்கள் நினைத்தபடி இராணுவத்தினரின் நடமாட்டமோ வேறேதும் வாகனங்களோ கண்ணுக்கெட்டியதூரம் வெகு நேரமாகியும் தென்படவில்லை. பக்கத்து கோபாலின் வீட்டை எட்டிப் பார்த்தேன். அங்கு அப்போது ஓடி வந்த குருக்களைத் தடுத்தனுப்பிய அந்த வேலையாள், வீட்டு வாசலில் கற்பூரம் ஏற்றிக் கும்பிட்டு ஒரு தேங்காயைச் சிதறு காயாக நிலத்தில் அடித்து விட்டு "ரைட்" என்று கத்திக் கையைக் காட்டி சிக்னல் கொடுப்பது கேட்டது. சற்று நேரம் கழித்து பக்கத்துவீட்டுக் கோபால் தனது லொறியில் ஏறி வீட்டு முற்றத்தில் இருந்து அதை மெயின் ரோட்டுக்கு எடுத்து டவுனை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். அந்த லொறி மறைந்ததும் அதே வேலையாள் மீண்டும் என்வீட்டில் பயத்துடன் இருந்த குருக்களிடம் வந்து "ஐயா இனி நீங்கள் போகலாம்" என்றான். குருக்களும் பயம் தெளிந்து புறப்பட்டார்.

நான் அந்த வேலைக்காரனிடம் "எதற்காக அந்த பெரியவரை ரோட்டில் போகவிடாமல் இப்படி என் வீட்டுக்குள் அவசரமாக அனுப்பினாய்?" என்று கேட்டேன். அவன் கூறிய பதில் என்னைத் திடுக்கிட வைத்தது. "ஐயா! முதலாளி சகுனம் பார்க்கிறவர். தான் வீட்டில் இருந்து லொறியை வெளியே எடுக்கும்போது ரோட்டில் எதிரே எவரும் வரப்படாது. அந்த விஷயத்தில் அவர் மிகவும் கண்டிப்பு" என்றான். கோபால் லொறியை எடுக்கப்போகிறார் வெளியே என்று தெரிந்தால் எல்லாருக்குமே பயம். ஏன் அவர் தங்கையின் வீடும் அதே ரோட்டில்தான் இருக்கிறது. அவளின் பிள்ளைகளும் லொறி போன பின்பே அங்குமிங்கும் பார்த்துவிட்டுப் பள்ளிக்கூடத்துக்கு ஓடும் என்றால் பாருங்கள். கோபாலின் லொறி அப்படியே கொழும்புக்குச் சாமான் எடுக்கப் போனதால், இரண்டு நாட்களாக வரவில்லை. அதனால் ரோட்டில் போவோருக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது. அன்று மறுநாள் என் பதினொரு வயதுப்பேரன் வீட்டு வாசலில் மிகப் பதிவாகத் தொங்கிக் கொண்டிருந்த மாங்காய் குலைகளைக் கண்டதும் ஆசையுடன் பறித்துக் கொண்டிருந்தான். நானும் அவன் தந்தையும் தாயும் அடுக்களையில் தேனீர் பருகிக் கொண்டிருந்தோம். திடீரென்று பாரிய வெடிச்சத்தம் ஒன்று எங்களையும் அந்தப் பகுதியையும் அதிர வைத்தது. மாங்காய் பறித்துக் கொண்டிருந்த என் பேரன் "ஐயோ" என்று கத்தியபடி உள்ளே ஓடிவந்து விழுந்தான். அவன் உடல் நடுங்கியபடி இருந்தது. அடுக்களை வாசலில் ரொட்டியைக் கவ்வியபடி இருந்த எங்கள் நாயும் அதைக் கீழே போட்டுவிட்டுப் பாய்ந்து ஓடி ஒளிந்து கொண்டது. அவனுடைய நெஞ்சை மசாஜ் செய்வது போல் தேய்த்து ஆறுதல் கூறி தேனீர் கொடுத்தோம். அவன் பயத்தால் குடிக்கவில்லை. எங்களுக்கும் உள்ளூர உதறல் எடுத்தது. சுமார் அரைமணிநேரம் கழித்து ரோட்டில் சிலபேர் போவது தெரிந்தது. சற்றுத் துணிவுடன் நானும் போனேன். அங்கே ஒரு லொறி ரோட்டோரத்தில் பக்கவாட்டில் சரிந்து நொண்டியாகக் கிடந்தது. அதைச் சுற்றி ஒரு கூட்டம் அந்த லொறிச் சாரதியைத் திட்டிக் கொண்டிருந்தது. கிட்டப் போய்ப் பார்த்தேன். அது நிறைய மண் ஏற்றி வந்திருந்தது. அதன் பின் டயர்களில் ஒன்று மிகவும் தேய்ந்து பழுதாகியிருந்ததால், பாரம் தாங்காது பாரிய சத்தத்துடன் வெடித்திருந்தது தெரிந்தது. அந்தச் சாரதி அந்தக் கூட்டத்தினரிடம் வாங்கிய திட்டுக்கள் அவன் சீவியகாலம்வரை போதும் போலும். "ஏனடா நேரம் காலம் தெரியாமல் இந்த பழைய லொறியில் பழைய டயரையா போட்டாய்" என்று அவனை ஏசிப் பாடாய்ப் படுத்திக்... கொண்டிருந்தார்கள். கோபாலின் லொறி கொழும்பு போய் மூன்று நாட்களாகியும் வரவில்லை. கோபாலின் மனைவி கவலையுடன் காணப்பட்டாள். அன்றிரவு நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, கோபாலின் மனைவி அலறிக் கூக்குரல் போட்டபடி என்வீட்டுக்கு ஓடிவந்தாள். சாப்பிட்டதைப் பாதியில் நிறுத்தி விட்டு வெளியே அவளிடம் போனேன். அவள் அழுதபடி சொன்ன அந்தச் செய்தி என் ரத்தத்தை உறைய வைத்தது. கோபாலின் லொறியுடன் எதிரே வேகமாய் வந்து கொண்டிருந்த கடுகதி பஸ் ஒன்று நேருக்கு நேர் மோதியதால், கோபால் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுவிட்டான் என்பதுதான். அவளுக்கு என்னால் ஆறுதல் கூறமுடியவில்லை. சகுனம் பார்த்தே புறப்படும் கோபாலுக்கு எதிரே எவரும் அபசகுனமாக அன்று வரவே இல்லை. அப்படி இருக்க இது எப்படி ஏற்பட்டது என்று என் மனம் குழம்பிக் கொண்டு இருந்தது. அதற்கு விடை இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. உங்களுக்குத் தெரிந்திருந்தால் சொல்லுங்கள்.

# தாயோடு அறுசுவை போம்!



இணுவில் உத்திரன்.

"மோனை கொஞ்சமாய் சாப்பிட்டு விட்டு கிடவன்!"

"எனக்கு பசிக்கேல்லை வேண்டாம் அம்மா!"

"இரவிலை வெறும்வயித்தோடை கிடக்கக் கூடாது. புட்டுகிடக்கு, முளகாய் பொரிச்சு தாறன்!"

"சும்மா போணை. எனக்கு வேண்டாம்."

"சரி இந்த பாலை என்டாலும் குடிச்சிட்டு கிட!"

அம்மா பாக்கியத்தை நினைத்துப் பார்த்தான் விக்கினேசு. ம்... வீட்டிலை இருக்கும் மட்டும் "சாப்பிடுமோனை! என்ன வேணும்? காணுமே? ஏன் எழும்பிவிட்டாய்?" பிரைக்கடித்தால் உச்சிலை ஒருதட்டு. அதுவும் இரவிலை சாப்பிடாமல் நித்திரை கொள்ள விடவே மாட்டாள். அதுசரியில்லை. இது சரியில்லை. பேசுவான். கோபிப்பான். அவள் பொறுத்துக் கொள்வாள். அம்மாவை, வீட்டை, ஊரை நினைத்தபோது வேதனையாக இருந்தது.

அலுவலகத்தால் வந்த அலுப்பு ஒருபக்கம். பசி ஒருப்பக்கம். சாப்பிடுவதை நினைக்க வெறுப்பாய் இருந்தது. எந்தக் கடை சாப்பாட்டை சாப்பிடுவது? இந்த பத்து வரிடத்திலே கொழும்பு நகரசபை எல்லைக்குள்ளை உள்ள எல்லாக் கடைகளிலையும் சாப்பிட்டாயிற்று. சீ உப்புச் சப்பில்லாத சாப்பாடு. இந்த உலகத்திலையே முதல் எதிரி சக்கரைப் பூசணிக்காய்தான். இது இல்லாத சாம்பாறே கிடையாது. யார் அழுதார்கள் இப்படி ஒன்று இல்லை என்று? பக்கத்துக்கட்டிலிலே உடுப்புக்கூட மாற்றாமல் கிரிதரன். அவனும் ஒரு கடைப் பட்சிணிதான். "டேய் மச்சான் வீட்டிலை எண்டால் ஒரு சொதியோடையே சாப்பிடலாம். டெ ஒரு சம்பலோடையே சாப்பிடலாம். டெ அந்த தாளிக்கிற வாசனையோடையே சாப்பிட்டு விடலாம்!" என்பான். "வாழ்க்கையிலை நல்ல சாப்பாடு சாப்பிடுவதற்கும் குடுத்து வைச்சு இருக்க வேணும்!" என்று சொல்லுவான் வசந்தன். அது கூட எவ்வளவு உண்மை.

அவனுடைய அம்மா பாக்கியம் கடிதம் எழுதும் போது "தம்பி விக்கினேசு நெடுகலும் கடையிலை சாப்பிட்டு உடம்பை கெடுத்துக் காதை. வந்து ஒரு கலியாணம் கட்டிக் கொண்டு போ!" என்று. இது என்னடா அநியாயம். சாப்பாட்டுக்காக கல்யாணம் முடிக்கிறது? கலியாணம் முடித்த சிலர் கடையிலை வந்து இரண்டு பார்சல் கட்டிக்கொண்டு போவதும் அவனுக்குத் தெரியும். சிலர் சொல்லுவார்கள் "அந்த கடையிலை நல்ல சாப்பாடு. இந்த கடையிலை நல்ல சாப்பாடு." என்று. அவனும் கிரிதரனுமாக போவார்கள். ஆனால் ஒரு மாற்றத்தினால் அவை நல்லது போல இருந்தாலும், ஒருசில நாட்களில் அவையும் வெறுத்துப்போகும். அங்கங்கே ஒரு சில உறவினர்கள் "தம்பி சாப்பிட்டு விட்டுப் போம்" மனதுக்குள் விருப்பம் இருக்கும். ஆனால் தன்மானம் இடம் கொடாது. 'புலிபசித்தாலும் புல்லுத்தின்ன கூடாதுதானே! சீ- திரும்பி ஒரு நாலுதரம் கேட்டால், சாப்பிட்டு விடலாம்' என்று உள்ளுக்குள் நினைப்பான். ஒருநாள் "கொட்டேனாவிலை ஒரு கடையிலை கொத்தமல்லிச்சம்பல் போடுறாங்கள். சுதியாய் இருந்தது மச்சான்." என்று புழுகினான் கிரிதரன். வெள்ளவத்தையில் இருந்து கொட்டேனாவுக்கு கொத்தமல்லிச் சம்பலுக்காய் புறப்பட்டு, வழியில் செக்கிங். மூன்று நாள் சாப்பாடு, தண்ணி இல்லாமல் உள்ளுக்கை இருந்ததோடை கொத்தமல்லிச் சம்பலின் ஆசையும் போச்சு. "மச்சான் நாங்கள் சமைச்சுப் பார்த்தால் என்ன?" ஒருநாள் கிரிதரன் அடுப்பு, பானை, கத்தியோடு அட்டகாசமாய் அறைக்கு வந்தான். மிளகாய்த் தூளையும் புளியையும் கரைத்து விட்டு கலக்கினான். "எனிமேல் ஒரு கடைக்கும் போகத்தேவை இல்லை!" என்று மார்பு தட்டினான். சந்தோசமாய் இருந்தது. ஆனால் அதைச் சாப்பிட்டதில் இருந்து ஒரே வயித்துப் போக்கு. இரண்டு நாளாய் வேலைக்கு போகவில்லை. "அதுக்கெல்லாம் கைப்பக்குவம் வேணும் மச்சான்". அத்தோடு அந்த திட்டமும் கைவிடப்பட்டது. இன்னொருநாள்- இரவோடு இரவாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. காலையிலே கண் விழித்த போதுதான் விசயம் புரிந்தது. அன்று மட்டும் எப்பவும் இல்லாத மாதிரி பசி வேறு.

"இப்ப என்ன மச்சான் செய்யிறது?"

"ஏன் தலைகணி, கொப்பி, புத்தகம், பேப்பர், எல்லாம் இருக்குத்தானே பிச்சுத்தின்பம்." வீட்டு புண்ணியவாளன் தயவிலை இரண்டு நேரம் திறமான சாப்பாடு கிடைத்தது. 'ஊரடங்கு சட்டம் வாழ்க' என்று வாழ்த்தினான் கிரிதரன்.

நேரம் இரவு எட்டு மணி ஆகி இருந்தது. கிரிதரன் அரைத் தூக்கத்தில் கிடந்தான். "ஒரு பொண்ணு ஒன்று நான் பார்த்தேன். அதை சிரிக்க சொல்லி கேட்டேன்" ரேடியோவில் பாட்டு கேட்டது. "டேய் கிரி எழும்பு போய் சாப்பிடுவம்?" அவனை எழுப்பினான். "எனக்கு வேண்டாம் மச்சான்!" மீண்டும் படுத்திட்டான். போச்சு எனி புல்டோசர் கொண்டு வந்தாலும் எழுப்பேலாது அவனை! கட்டிலில் சிறிது நேரம் சாய்ந்து கிடந்தான் விக்கி. பக்கத்து வீட்டில் வடை சுடும் வாசனை மூக்கை பிடுங்கியது. கிரி மட்டும் இப்போ உயிரோடு இருந்தால், வாசல் படியிலே குந்திவிடுவான். மோப்பம் பிடிக்க! பக்கத்தில் யாரோ தமிழ்க் குடும்பம்தான். நல்ல மணம் குணமாய் சமைப்பார்கள். வாசனை வெள்ளவத்தை முழுக்க வீசும். "தம்பி ரண்டு வடை சாப்பிடுங்கோ!" என்று வந்து கேட்கமாட்டார்களா? மனம் ஏங்கும். அந்த வாசனையை மோப்பம் பிடித்தபடி அயர்ந்து போனான் விக்கினேசு!

"தம்பி சாப்பிடு மோனை!"

"தம்பி சாப்பிட்டு விட்டு கிடவன்!" அம்மா! எட அம்மா!

திடுக்கிட்டு எழும்பிப் பார்த்தான் விக்கி. ரேடியோ படிக்கிறது. லைற் எரிகிறது. பக்கத்தில் கிரி வாய்பிளந்து தூங்குகின்றான். 'ஓ கனவா?' நித்திரையாய் போனன். பசித்தது. நேரம் இரவு பதினொருமணி. கடைகள் பூட்டி இருக்கும். கொஞ்சம் பச்சைத் தண்ணீரை அள்ளிக்குடித்து விட்டு, மீண்டும் படுக்கையில் விழுந்தான்.

'ம் நாளைக்கு சாப்பிடுவம்!'

# அவளின் ஒரு பார்வைக்காக...



"என்னடா' கவிதை ஏதாவது எழுதும் உத்தேசமா?" என்று கேட்டபடி வந்தான் விவேக்.

திடுக்கிட்டுத் திரும்பினான் நந்தா. "இப்ப எதுக்குக் கவிதை?" என்று வியப்போடு கேட்கவும் செய்தான்.

"இல்லை. 45 பாகைக் கோணத்தில் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாயே... அதுதான் கேட்டேன்.. என்ன அப்போ, பகல் கனவா?"

"வா, வந்து முதலில் இப்படி இரு."

"சரி, இருந்தேன். சொல் நண்பா! உன் வானத்து ஆராய்ச்சியின் காரணம் என்ன?"

"கண்கள்!" என்றான் நந்தா.

"ஆ... இந்த நளினம்தானே வேண்டாமென்கிறது... எல்லோரும் பார்க்கிறதுக்குக் காரணம் கண்கள்தான். நீ இப்படிப் பரிதாபத்துக்குரிய ஆளாக தனிமையில் வானத்துக் கோளாராய்ச்சியில் எல்லாம் இறங்கிய கோளாறுக்குக் காரணம் என்ன என்று கேட்டேன்..."

"கண்கள்தான். என்னுடைய கண்களைச் சொல்ல வில்லையடா, குவளை மலர்களை எதிரெதிராக வைத்துப் பிணைத்தது போன்ற ஒரு சோடி அரிமதர் மழைக் கண்ணைச் சொன்னேன்."

"அடடா! பெண்ணா? அதுதானே பார்த்தேன். முன்னொருபோதும் உன் முகத்தில் இத்தனை அசடு ஒரே யடியாய் வழிந்ததில்லையே!"

"உடம்பில் நிரந்தரமாகிப் போன காயங்கள் என்று கண்களைச் சொல்லுகிறார்களல்லவா... அதுவல்ல விஷயம் உள்ளத்தில் நிரந்தரமான காயங்களை ஏற்படுத்துபவைதான் கண்கள்..."

"இந்த வயதில் இளம் பெண்களின் கண்கள் எல்லாமே விஷம் தடவிய வேல்களாகத்தான் வந்து பாயும். நீ எங்கே தாக்குப் பட்டாய் அதைச் சொல்.."

"கண்களால் மட்டுமே ஆனது அந்தத் தேவதையின் உடம்பு. ஆமாம்... அந்தக் கண்..கள்... ஆ... யாரையும் அவள் பார்க்காமலேயே யார் அவளைப் பார்க்கிறார்கள் என்பதைக் கண்டுகொள்வாள். என்னையும் அவள் பார்க்கவில்லை. நான் அவளால் தாக்குப்பட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாய் ஆக்கப்பட்டதை அவள் அறிந்துகொண்டாள். மேனி முழுவதும் கண்களும் காதுகளுமே ஆன அந்தத் தேவதை..."

தருவது

முழடில்யன்

"பொறு பொறு... எப்படி இருந்தாய்... ஏன் இப்படி என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் உளறிக் கொண்டிருக்கிறாய்?"

"அந்தச் செவ்வரியோடிய கண்கள்... மலைச் சுனைக்குள் வளர்ந்த மலர்களாயிருக்க வேண்டும். இல்லையேல், ஏது அத்தனை குளிர்ச்சி! தேனைத் திண்மமாக்கி இழைபிரித்துக் கூந்தலெனக் கொண்டிருந்தாள்... ஆற்றின் மணற்படுகை போலக் கிடந்த அந்த வெண்ணிற வயிறு... அதன் மேலே திடீரென எழுச்சி பெற்ற குன்றுகள்... அதன் மேலே அள்ளித் தெளித்திருந்த தேமல்..."

"டே டே... என்னடா ஆச்சு உனக்கு? நயனும் நண்பும் நாணும் நன்குடைமையும் பயனும்பண்பும் பாடறிந் தொழுகலும் கெட்டு இப்படிப் பரிதாபத்துக்குரிய பைத்தியம் போலாகிவிட்டாயே! ஏன் இப்படிச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் உளறுகிறாய்? சீரெல்லாம் கெட்டுச் சிதைந்தோ போனாய் நண்பா... பொறு பொறு... உடனே 'அந்தக் கண்கள்...' என்று ஆரம்பித்துவிடாதே... உன்னை ஆசுவாசப்படுத்திக் கொள். மனிதர்களுக்கு வேண்டிய நற்குணங்களையெல்லாம் நினைவுபடுத்திக் கொள் நண்பனே...!"

"நானும் முன்பு எல்லோர் உறவையும், எல்லோர் நட்பையும் விரும்பிப் பழகுகிறவனாகத்தான் இருந்தேன். இப்போ அவளைத் தவிர பிறர் உறவு வேண்டாம் என்று தோன்றுகிறது. அன்பு கொள்ள அவள் ஒருத்தி போதும் என்றே தோன்றுகிறது. முன்பு நான் நாணம் விட்டு யாரிடமும் எதுவும் கேட்டதில்லை. இப்போது என் கௌரவம், பெருமை, சீர்மை எல்லாவற்றையும் விட்டு அவளது அன்புக்காக ஓரக் கண் பார்வைக்காக வெட்கம் கெட்டு யாசித்து நிற்கத் தயார். என் உயிரின் பெறுமதி அறிந்தவன்தான் நான். முட்டாள் தனங்களையும் வெறுப்பவன் தான். ஆனால் இப்போதோ அவளுக்காக என் உயிரையும் கொடுக்கலாம் போலிருக்கிறது. உலக இயல்பு அறிந்து நடக்கவும், உள்ளத்தை அடக்கவும் பயின்றிருந்தவன்தான். அந்த மனத்திண்மைக்காகப் பெருமிதமும் கொண்டிருந்தவன். ஆனால், இப்பொழுது, அவளோடு சேர்வதற்கு எந்தக் கள்ளச் செயல் புரியவும் நான் தயங்கப் போவதில்லை... நீ சொல்கிற சீர்மைக் குணங்களெல்லாம் உன்னைவிட வெகு சிறப்பாகவே பொருந்தப் பெற்றிருந்தவன் நான்... ஆனால், அவள் கண்களால் இப்போது எல்லாவற்றையும் இழந்து நிற்கிறேன். அவள் பார்வை ஒன்றுக்காக எந்தப் பண்புகெட்ட செயலுக்கும் நான் தயார்... எனக்காக நீ இரங்காதே என் நண்பனே!"

## இலக்கிய நயம்

**நயனும் நண்பும் நாணும்**
**நன்குடைமையும்**
**பயனும் பண்பும்**
**பாடறிந்து ஒழுகலும்**
**நும்மினும் உடையேன்**
**மன்னே**
**கம்மென எதிர்த்த தித்தி**
**ஏரிள வனமுலை**
**விதிர்த்து விட்டன்ன**
**அந் நுண் சுணங்கின்**
**ஐம்பால் வகுத்த கூந்தல்**
**செம்பொன்**
**திருநுதல் பொலிந்த**
**தேம்பாய் ஒதி**
**முதுநீர் இலஞ்சி பூத்த**
**குவளை**
**எதிர்மலர்ப் பிணையல் அன்ன**
**இவள் அரிமதர் மழைக் கண்**
**காணா ஊங்கே.**

*(நற்றிணை: 160)*

# ஸ்போர்ட்ஸ்

## இரண்டாவது டெஸ்ட்டில் பாகிஸ்தான் வெற்றி

இங்கிலாந்திற்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்திற்கெதிரான 2வது டெஸ்ட்டில் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 2 போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற சமநிலையில் முடிந்துள்ளது.

லோர்ட்ஸில் நடந்த முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து வென்றதை அடுத்து, இரண்டாவது டெஸ்ட் ஓல்ட் ட்ராஃபோர்ட்டில் நடந்தது.

இந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் இன்ஸமாம் உல் ஹக்கின் சிறப்பான சத்தத்துடன் (114 ஓட்டங்கள்) 403 ஓட்டங்களைப் பெற்றது. விக்கெட் காப்பாளன் ரஷீத் லத்தீப் 71 ஓட்டங்கள் எடுத்தார். டரன் கஃப், அன்டி கடிக், ஹொக்கார்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 357 ஓட்டங்களை எடுத்தது. கிரஹம் தோர்ப் (138) வேடகன் (120) ஆகியோர் சதங்களை அடித்திருந்த போதிலும் ஏனையோர் துடுப்பாட்டத்தில் அவ்வளவாகப் பிரகாசிக்காததால் பாகிஸ்தானை விட 46 ஓட்டங்கள் பின் தங்கியிருந்தனர். அப்துல் ரசாக் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் 323 ஓட்டங்களைச் சேர்த்தது. முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் சார்பாக அதிக ஓட்டங்களைக் குவித்த இன்ஸமாம், இரண்டாவது இன்னிங்ஸிலும் அதிக ஓட்டங்களைக் (85) குவித்தார். டரன் கஃப், அன்டி கடிக், ஹொக்கார்ட் ஆகியோர் முதல் இன்னிங்ஸைப் போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

370 ஓட்டங்களை எடுத்தால் வெல்லலாம் என்ற வெற்றி இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து 262 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பரபரப்பாக நடந்த இந்தப் போட்டியின் ஒரு கட்டத்தில் 2 விக்கெட் இழப்பிற்கு 196 ஓட்டங்களை எடுத்திருந்த இங்கிலாந்து, வெற்றியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

ஆதர்ட்டன் (51), ட்ரெஸ் கொதிக் (112) இருவரும் இணைந்து முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக 146 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.. இவர்களை அடுத்து ஆட வந்தவர் அவ்வளவாகச் சோபிக்காததால் வெற்றி வாய்ப்பை இழந்தனர்.

## அவுஸ்திரேலிய கிரிக்கெட் தேர்வாளர் நீக்கத்தால் சர்ச்சை

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிகள் கலந்து கொள்ளும் 'ஆஷஸ்' கிரிக்கெட் தொடருக்கான தேர்வாளர் பதவியில் இருந்து ஜோன் புக்கானன் நீக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னின் உடல் தகுதி குறித்து புக்கானன் கூறிய கருத்துகளையடுத்து ஏற்பட்ட சர்ச்சைகளாலேயே இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இது குறித்து அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவ் வோவும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களில் அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்திருப்பவர் ஷேன்வோர்ன். இவர் 87 டெஸ்ட் போட்டிகளில் 376 விக்கெட்டுக்ஙளை வீழ்த்தியுள்ளார்.

சுழற்பந்து வீச்சாளர்களிலேயே அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியவரும் இவர்தான்.

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக கிரிக்கெட் போட்டிகளில் சாகசம் படைத்து வரும் வோர்ன், 98ம் ஆண்டில் இருந்து சாதனைப்பட்டியலில் இருந்து சறுக்கி வருகிறார்.

சில காலமாக தோள்பட்டை வலி, விரலில் காயம் போன்றவற்றால் சற்றுப் பின்னடைந்திருக்கும் வோர்ன் 'ஆஷஸ்' தொடர் தனக்கு மறுபடி நல்ல பெயரைப்பெற்றுக் கொடுக்கும் என்று பெரிதும் நம்பியிருக்கிறார்.

காரணம் இங்கிலாந்துக்கு எதிராக வோர்ன் மிகச் சிறப்பாகப் பந்து வீசியிருக்கிறார். இதுவரை இங்கிலாந்துக்கெதிராக 18 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கும் வோர்ன் 89 விக்கெட்டுக்களைச் சரித்துள்ளார்.

விரைவில் தொடங்கவிருக்கும் 'ஆஷஸ்' தொடர் வோர்னுக்கு 3வது 'ஆஷஸ்' தொடராகும். இதுவே இவரது கடைசி 'ஆஷஸ்' தொடராகவும் இருக்கலாம்.

கடைசியாக நடந்த இரண்டு 'ஆஷஸ்' தொடரில் ஷேன் வோர்னின் சிறந்த பந்து வீச்சு அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழிவகுத்தது.

இம்முறையும் இவரது பந்து வீச்சு அணிக்குப் பெரிதும் கைகொடுக்கும் என்று பலர் கருதுகின்றனர்.

இந்நேரத்தில் வோர்னின் உடல் தகுதி சரியில்லை என்று அவரை அணியில் இருந்து நீக்குவதுபற்றி புக்கானன் கூறியதுதான் அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி, புக்கானனில் தேர்வாள பதவியையும் பறிபோக வைத்து விட்டது.

## சிந்தியா பதில்கள்

◈ **எம்.ஜி.ஆர் கூறுவார்: 'நடக்கும் என்பார் நடக்காது'.**
**ரஜினி காந்த் கூறுகிறார்: 'நடக்கும் என்பது நடந்தே தீரும்'.**
**இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?**

கு.றஜீதா, களுபோவில.

*பகுத்தறிவை நம்புகிற அண்ணாத்துரையின் சீடருக்கும், தமக்கு மேலுள்ள சக்தியை நம்புகிற ராகவேந்திரரின் சீடருக்குமுள்ள வித்தியாசம்தான்!*

◎◎◎

◈ **'நீதி' தொலைக்காட்சி நாடகத்தில் நடித்த புனிதா தான் 'சேது' படத்தின் கதாநாயகி அபிதா என்பது சரியா?**

எஸ்.அகல்யா, மண்டூர்-02.

*பிழை. (உங்கள் தபாலட்டையை எடுத்துக் கொள்ள இவ்வளவு காலமாகிவிட்டது. அதுவும் பிழைதான்!)*

◎◎◎

◈ **அடையாள அட்டை இல்லாதுவிடில் ஆடைகளைக் களைவது பற்றி...?**

முகமட் இர்ஹாம், காத்தான்குடி-05.

*அடையாள அட்டை இல்லாதவன் அரை மனிதன் தான் என்று சிம்போலிக்காகச் சொல்கிறார்கள். சரிதானே!*

◎◎◎

◈ **சிந்தியாவுக்குக் கடவுளை வழிபடுவது பிடிக்குமா?**

எட்வேட் நிஷாந்தன், பெரிய நீலாவணை.

*பிரார்த்தனை செய்வதால் மனச்சாந்தி பெறுகிறவர்களை விட்டு விடலாம். கடவுள் வழிபாட்டையே வியாபாரமாக வைத்திருப்பவர்களால்தான் நான் நம்பிக்கையிழக்கிறேன்.*

*ஒரு கதை சொல்கிறேன். ஒரு சூஃபி துறவியும் செல்வந்தன் ஒருவனும் படகில் போய்க் கொண்டிருந்தார்கள். திடீரென்று கடல் கொந்தளித்தது, புயற்காற்று வீசியது. செல்வந்தன் கடவுளிடம் காப்பாற்றும்படி மன்றாடத் தொடங்கினான். துறவி அமைதியாக இருந்தார். செல்வந்தன் கோபத்துடன் அவரைப் பார்த்துக் கத்தினான்.*

*"நாங்கள் இருவருமே மூழ்கப் போகிறோம். கடவுள் நம்பிக்கையுள்ள நீர் இப்படிக் கல்லுப்போல இருப்பது சரியா? ஏன் வழிபடாமல் இருக்கிறீர்கள்?"*

*துறவி அமைதியாகச் சொன்னார்: "கடவுள் நம்மை மூழ்கடிக்க விரும்பினாலும் நல்லது. அல்லது அவர் நம்மைக் காப்பாற்ற விரும்பினாலும் நல்லது. நான் அவரோடு முழுவதும் ஒத்துப் போகிறேன். நம்மைக் காப்பாற்றுவதா மூழ்கடிப்பதா என்பது கடவுள் கவலைப்பட வேண்டிய ஒன்று. அது என்னுடைய கவலை அல்ல" என்றார்.*

*இந்த ஆள் சரியான பைத்தியமாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்ட செல்வந்தன், தான் தப்பிப்பிழைத்தால் தனது விலையுயர்ந்த பங்களாவை விற்று கடவுளுக்கே காணிக்கைச் செலுத்துவதாகப் பிரார்த்தித்தான்.*



அபிதா

*காற்று நின்றது. கடல் அமைதியானது. அவர்கள் கரை சேர்ந்தனர். வீடு வந்து சேர்ந்த செல்வந்தனுக்கு இப்போது ஒரே கவலையாகப் போய்விட்டது.*

*'தேவையில்லாமல் வாக்குறுதி கொடுத்துக் கெடுத்துக் கொண்டேனே. வாயே திறக்காமலிருந்த துறவியும் காப்பாற்றப்பட்டார் தானே. அவரைப் போலவே மௌனமாக இருந்து தொலைத்திருக்கலாம்' என்று கவலைப்பட்டான்.*

*யோசித்துப் பார்த்த அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. தன் விலையுயர்ந்த மாளிகையின் அருகே ஒரு பூனையைக் கட்டினான்.*

*"இந்த அரண்மனையும் பூனையும் சேர்த்து ஏலத்தில் விடப்படும். இந்தப் பூனையின் விலை ஒரு கோடி ரூபா. அரண்மனையின் விலை ஒரு ரூபா. மொத்தம் ஒரு கோடியே ஒரு ரூபாவுக்கு இரண்டையும் வாங்கிக் கொள்ளலாம்" என்று அறிவித்தான்.*

*அதன்படி பூனை விற்றுக் கிடைத்த ஒரு கோடி ரூபாவை தான் வைத்துக் கொண்டான். அரண்மனையை விற்றுக் கிடைத்த ஒரு ரூபாவை கோயில் உண்டியலில் போட்டான்.*

*இப்படித்தான் வியாபாரமாக இருக்கிறது கடவுள் வழிபாடு. இது எனக்குப் பிடிப்ப தில்லை.*

◎◎◎

◈ **ஒரு வேளை அரசாங்கம் தடையை நீக்க முன்வந்து விட்டால்...?**

எஸ்.ஞானசேகரன், வவுனியா.

*கஷ்டம்தான்! அதற்காக அரசின் நயவஞ்சக வலைக்குள் விழுந்துவிட முடியாது. வேறென்ன நிபந்தனைகள் போடலாம் என்று நீங்களும் யோசியுங்கள். தமிழன் இறங்கி வந்ததாக சரித்திரம் எழுதப்பட்டுவிடக் கூடாது.*

◎◎◎

◈ **நடிகைகள் சில்க் ஸ்மிதா, விஜி ஆகியோரின் தற்கொலைகள் பற்றி சிந்தித்ததுண்டா?**

வி.கே.எஸ்.சித்திரவேல், மன்னார்.

*உண்டு. அந்த ஒரு சில ஆண் சுயவர்களைத் திட்டித் தீர்ப்பதை விட, பெண்களை மட்டுமே தற்கொலைக்குத் தள்ளிவிடுகிற இந்த சமூகத்தின் மேல்தான் எனக்குக் கோபம்.*

◎◎◎

◈ **காதலித்த அனுபவம் உண்டா?**

ஜே.லக்கி, பெரியகல்லாறு.

*உண்டு. பின்னால் அலைந்தோ, உணர்ச்சி வசப்பட்டு ஏடாகூடம் செய்தோ, பயந்து பயந்தோவெல்லாம் ஏதும் நடக்கவில்லை. எங்காவது அமர்ந்திருந்து மணிக்கணக்கில் பேசுவோம். பேச்சு பேச்சு பேச்சுத்தான். அந்தப் பொழுதில் அடைந்த கிளர்ச்சியை வார்த்தைகளில் கொண்டுவர முடியாது. ஒன்று சொல்லலாம். பேசி முடித்துத் திரும்பும்போது கொட்டும் அருவியில் நின்று குளித்துவிட்டு வந்ததுபோலப் புதுமையாக இருக்கும்.*

◎◎◎

◈ **காதலுக்கு தூது வைக்காதே என்று கூறுகிறார்களே ஏன்?**

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

*அது இருவருக்கு மட்டும் இடையிலான அந்தரங்கம் என்பதால்.*

◎◎◎

◈ **என்னைப் பற்றி நானே தாழ்வாக நினைக்கின்றேன். இதுபற்றி உங்களது கருத்தென்ன?**

கவிதா சாந்தலிங்கம், எறாவூர்-05.

*பொது மக்களுக்கு ஆபத்தில்லை, என்பதில் மகிழ்ச்சிதான். உயர்வாக நினைத்துக் கொண்டால்தான் மற்றவர்களைத் தாக்க ஆரம்பித்து விடுவீர்களே! மறுபுறம், நீங்கள் தாக்கப்படாமலிருக்க வேண்டுமானால் தாழ்வாக நினைப்பதையும் விட்டு விட வேண்டும்.*

*எங்கோ படித்து எனக்குப் பிடித்த வரிகள்:*

*"நான் யாருக்கும் தாழ்ந்தவனில்லை. அதேசமயம், என்னை விடத் தாழ்ந்தவரும் யாரும் இல்லை."*

◎◎◎

◈ **எடுத்த பொருளை திருப்பிக் கொடுக்க மறந்து விடுபவர்கள் பற்றி...?**

எம். ஆர். நஸ்லியா, நிககொள்ள.

*காதலித்துப் பாருங்கள். எடுத்ததைத் திருப்பித் தந்துவிடக்கூடாதே என்று பதற ஆரம்பித்து விடுவீர்கள்.*

◎◎◎


# மன்னாதி மன்னன் 61

## அமராவதியின் ஆசை நிறைவேறியது!

மயிர்மாணிக்கம் செட்டியின் மகள் அமராவதியின் கணவன் பல வருடங்கள் கழித்து மீண்டும் திரும்பி வந்தான். மாணிக்கம் செட்டியும் அவர் மனைவியும் குடும்பத்தாரும் பெரு மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் அமராவதிக்கோ பெரும் துயரம் ஏற்பட்டது. தன்னுடன் பெண் வேடத்தில் இருந்த விக்கிரமாதித்தனை மறந்துவிட நேரிடுமோ, பிரிந்துவிட வேண்டி வருமோ என்று கவலைப்பட்டாள்.

"எல்லாம் நல்லபடி நடக்கும். எதற்கும் கவலைப்படாதே எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்." என்று விக்கிரமாதித்தன் அமராவதிக்கு ஆறுதல் கூறினான். தன்னுடைய சிநேகிதியும் தங்களுடனேயே ஒரே அறையில் படுத்திருக்க வேண்டுமென்று அமராவதி கணவனைக் கேட்டுக் கொண்டாள். அவனும் அதற்கு ஒப்புதலளித்து விட்டான். அமராவதியின் கணவன் பெண் வேடத்திலிருந்த விக்கிரமாதித்தன்மீது மோகப்பார்வையை வீசி அவளைத் தன்பால் இழுக்க முற்பட்டான். விக்கிரமாதித்தனும் பதிலுக்கு அவன்மீது தானும் மோகம் கொண்டிருப்பது போல் நடந்து கொண்டார்.

ஒரு நாளிரவு அமராவதியின் கணவன் பெண்ணுருவிலிருந்த விக்கிரமாதித்தனை நெருங்கி தன் ஆசையை வெளிப்படுத்த முயன்றபோது, விக்கிரமாதித்தன் "கீழேயுள்ள வாழைத் தோட்டத்துக்குச் செல்வோம்" என்று அவனை அழைத்துக்கொண்டு போனார். இதனை ஓரக்கண்ணால் பார்த்து அமராவதி தன்பாட்டில் சிரித்துக் கொண்டாள்.



இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அமராவதியின் கணவனுடைய மூக்கை விக்கிரமாதித்தன் கடித்து துண்டாக்கி விட்டான். தன்னுடைய குட்டு வெளிப்பட்டுவிடப் போகிறதே என்று பயந்த அமராவதியின் கணவன் ஊரின் கிழக்கெல்லைவரை ஓடிச் சென்று அங்கிருந்த பாழுங் கிணற்றில் விழுந்து மாண்டு போனான்.

விக்கிரமாதித்தன் அமராவதியிடம் வந்து நடந்தவற்றையெல்லாம் சொல்லி விட்டான். தான் தொடர்ந்து அங்கிருக்காமல் வெளியேறப் போவதாகவும், இன்னும் ஒரு வாரத்தில் மீண்டும் வந்து அவளை அழைத்துக் கொண்டு போவதாகவும் உறுதியளித்தான்.

அமராவதியின் கணவன் அவளுடைய சிநேகிதியுடன் ஓடிவிட்டதாக பெற்றாரிடமும் மற்றவர்களிடமும் கூறுமாறு அமராவதியிடம் கூறிவிட்டு விக்கிரமாதித்தன் கரும்பிலினியாள் வீட்டுக்குச் சென்று விட்டார்.

அடுத்தநாள் காலை அமராவதி தன் கணவனையும் தன் சிநேகிதியையும் காணவில்லையே என்று புலம்பினாள். அவர்களிருவரையும் தேடி கண்டுபிடித்துக் கொண்டு வரும்படி தன் பெற்றாரிடம் கூறினாள். அவர்களும் நாலா பக்கங்களிலும் ஆட்களை அனுப்பி தேடிப்பார்த்தார்கள். அவர்கள் அகப்படவேயில்லை.

தன் மகளின் துயரம் தொடர் கதையாகி விட்டதே என்று கருதிய மயிர்மாணிக்கம் செட்டி மிகவும் வருந்தினார். இதைவிட மேலாக, பாதுகாப்புக்காக தங்களிடம் ஒப்படைத்துவிட்டு போன பெண்ணைத் தேடி வரப்போகும் அவளுடைய தகப்பனுக்கு எத்தகைய பதிலைக் கூற முடியும் என்று வருந்தினார்.

மாணிக்கம் செட்டி பயந்தது போல், இச் சம்பவம் நடைபெற்று ஒரு வாரத்தின் பின் பட்டி ஏற்கனவே போட்டிருந்த செட்டி வேடத்திலும் அவர் தேடிச் சென்ற அவருடைய மகளின் புருசன் வேடத்தில் விக்கிரமாதித்தனும் மயிர் மாணிக்கம் செட்டியின் வீட்டை வந்தடைந்தனர்.

அவர்களிருவரையும் கண்ட மாணிக்கம் செட்டி பதறி பதைத்துப் போனார். செட்டி வேடத்தில் இருந்த பட்டியை ஒருபுறமாக அழைத்துச் சென்று, அவருடைய மகளுடன், தனது மருமகன் ஓடிவிட்டதாக கூறினார். இதைக் கேட்டதும் பட்டி கடும் கோபமுற்றவர் போல் பலத்த சத்தம் போட்டு மாணிக்கம் செட்டியைத் திட்டினார். செட்டி வம்சத்துக்கே பெரிய இழுக்கை ஏற்படுத்தி விட்டதாக கூக்குரலிட்டார்.

வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்ததாக வேடமிட்டுள்ள விக்கிரமாதித்தனும் பட்டியுடன் சேர்ந்து வாய்த்தர்க்கமிட்டார். இருவரும் மன்னரிடம் போய் முறையிடப் போவதாக கூறினார்கள். எப்படியாவது இதற்கொரு நல்ல பரிகாரம் தேட முடியும் என்று கூறிய மயிர்மாணிக்கம் செட்டி, அந்த ஊரிலிருந்த சகல செட்டிமாரையும் தன் வீட்டுக்கு வருமாறு அழைப்பனுப்பினான். அவர்களெல்லாம் வந்து கூடியதும், நடந்த சம்பவத்தை மாணிக்கம் செட்டி விவரமாகக் கூறினான். தங்களுடைய வம்சத்தின் மானம் பறிபோய் விட்டதாகவும் இதற்கான தக்க பரிகாரம் தேடி, மகளைத் தங்களிடம் விட்டு வெளியூர் சென்றிருக்கும் அவருடைய மாப்பிள்ளைக்கும் எவ்வாறு நட்டஈடு வழங்கலாம் என்றும் தீர்மானிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

செட்டிமார் அனைவரும் கூடி ஏகோபித்து முடிவுக்கு வந்தனர். வெளிநாடு சென்று திரும்பிய செட்டி மகனுக்கு மயிர்மாணிக்கம் செட்டியின் மகளைத் திருமணம் முடித்து வைப்பதே ஒரே வழி என்று எல்லோரும் சேர்ந்து முடிவெடுத்தனர்.

ஆரம்பத்தில் பட்டியும் விக்கிரமாதித்தனும் எப்படியும் அங்கு விட்டுச் சென்ற தங்களுடைய பெண்ணை மீட்டுத்தர வேண்டும் என்று கேட்டு அடம்பிடிப்பது போல் பாசாங்கு செய்தனர். பின்னர் ஒருவாறு அமராவதியை ஏற்க ஒப்புக் கொண்டனர்.

அங்கு நடந்த சம்பவங்களையெல்லாம் அறிந்த அமராவதி மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். இரண்டொரு தினங்களில் நல்லநாள் பார்த்து விக்கிரமாதித்தனுக்கும் அமராவதிக்கும் திருமணம் செய்து வைத்தனர். மயிர்மாணிக்கம் செட்டி ஏராளமான சீர்வரிசைகளைச் செய்தார்.

காடாறு மாதம் முடிவடைந்து நாடாறு மாதம் ஆட்சி புரிய வேண்டிய காலம் நெருங்கி விட்டதை பட்டியறிந்து விக்கிரமாதித்தனிடம் தெரிவித்ததும் மயிர்மாணிக்கம் செட்டியிடம் விடைபெற்றுக் கொண்டு அமராவதியை தன்னுடன் அழைத்துக்கொண்டு விக்கிரமாதித்தன் ஊஜ்ஜைனி மாகாளி பட்டணம் போய் சேர்ந்தார்.

விக்கிரமாதித்த மாமன்னனே தனக்குக் கணவனாக வாய்த்திருப்பதை எண்ணி அமராவதி மிக்க மகிழ்ச்சியடைந்தாள்.

இவ்வாறு சிம்மாசனத்தின் ஆறாவது படிக்கட்டிலிருந்த சிருங்காரவல்லிப் பதுமை கதையைக் கூறி முடித்தது.

இக்கதையைக் கேட்டு சோகமேயுருவாக களைப்படைந்து போயிருந்த போஜராஜனைப் பார்த்து "போஜராஜனே, எங்கள் விக்கிரமாதித்த பூபதியின் இத்தகைய சிறப்பாற்றல்கள் எவையேனும் உம்மிடம் இருக்குமானால் நீர் தாராளமாக இந்தச் சிம்மாசனத்தில் ஏறி அமரலாம்" என்று கூறியது.

நள்ளிரவாகி விட்டமையினால், அதற்கு மேலும் அங்கு நிற்க முடியாத போஜ மாமன்னன் தனது அந்தப்புரம் திரும்பினார்.

அடுத்த நாட்காலை துயிலெழுந்து காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டு ஆண்டவனை தரிசித்துவிட்டு தமது பரிவாரங்களுடன் போஜராஜன் சிம்மாசனம் வைக்கப்பட்டிருக்கும் மண்டபத்தை வந்தடைந்தார். ஆறு படிகளையும் வேகமாகத் தாண்டிச் சென்ற மன்னர். ஏழாவது படியில் கால் வைத்ததும், அங்கிருந்த ஏகபோகவல்லிப் பதுமை மன்னனைத் தடுத்து நிறுத்தியது. அதனைத் தொடர்ந்து விக்கிரமாதித்த மாமன்னனின் அதி வீரதீர பராக்கிரம செயல்களைப் பற்றிய கதையைக் கூற ஆரம்பித்தது.

### ஏகபோகவல்லிப் பதுமை கூறிய கதை

உஜ்ஜைனி மாகாளி பட்டணத்தில் நாடாறு மாதங்கள் ஆட்சி செலுத்திய பின்னர், காடாறு மாதம் செல்ல வேண்டிய நாள் நெருங்கி விட்டதையறிந்து பட்டியிடம் ராஜ்ஜிய பாரத்தை ஒப்படைத்துவிட்டு வேதாளத்துடன் காடாறு மாதம் செல்லப் புறப்பட்டார் விக்கிரமாதித்தன்.

விக்கிரமாதித்தன் தனது நாட்டை விட்டு வெளியே செல்லும்போதும், மீண்டும் வரும் போதும் தன்னுடைய இஷ்ட தெய்வமான காளி கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்வது வழக்கமானது.

### இராஜகுமாரன்

காடாறு மாதம் செல்லப் புறப்பட்ட தனது பக்தன் விக்கிரமாதித்தன் முன்தோன்றிய காளிகாம்பாள், "மகனே இன்று முதல் ஏழரைச் சனி உன்னைப் பீடிக்கப்போகிறது. இன்னும் சிறிது நேரத்தில் உன்னிடம் சனி பகவான் வந்து சேருவார். சனிபகவானை எவருமே தடுக்க முடியாது. ஆனால் அவரை வணங்கி அவருடைய நட்பை பெற்றால் அவரால் ஏற்படும் தீங்கு பல மடங்கு குறைந்துபோய்விடும். ஆகவே சனிபகவான் உன்னை நாடிவரும் போது அவரை வணங்கி அவருடைய ஆதிக்கத்தை உரியவாறு ஏற்றுக் கொள்ளப் போவதாக கூறு. "ஐயனே உங்களுடைய ஆதிக்கத்தை ஏக காலத்தில் என்மீது செலுத் தினால் அதனை தாங்கக்கூடிய சக்தி என்னிடமில்லை. இருப்பினும் கூடுமானவரை உங்கள் கட்டளைகளை நிறைவேற்றி வைப்பேன். என்மீது கருணை காட்டுங்கள்" என்று அவரை வணங்கி அருள் பெறுவாயாக?" என்று காளிதேவி விக்கிரமாதித்தனிடம் கூறினாள்.

*(மன்னன் வருவான்..)*

# காதில பூ கந்தசாமி

*கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.*

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:.................... ஒப்பம்:..................



**நோட்டீஸ் பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி

அபிமான வாசர் போட்டியில் ஐந்தாவது: தருமர் சொன்ன பொய் எது? முடிவுத் திகதி ஜூன்30. பெறுபேறுகள் ஜூலை இறுதிவாரத்தில்.

**வ**ணக்கங்கோ! இந்தக் கிழமை கொஞ்ச நேரம் என்ர அபிமான வாசகர்களோட செலவழிக்கிறதா உத்தேசம். அது பாருங்கோ இந்த வாசகர் போட்டிய வைச்சதுதான் வைச்சன், சனம் விடாத் தொல்லை. சத்தியக் கடுதாசியில கையெழுத்துப் போட்டுத்தான் விடையனுப்ப வேணுமெண்டு வெருட்டியும் சனம் போட்டி போட்டுக்கொண்டு விடையெழுதிக் குவிச்சுக் கொண்டுதான் இருக்கு. உதாரணத்துக்குப் பாருங்கோ சீ. தங்கவடிவேல் எண்டவர் தன்ர விடையோட சேத்து ஒரு குறிப்பு எழுதியிருந்தார், "சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்திட்டேன். மேசையில்தான் கையெழுத்துப் பதிந்தது. ஆகவே கண்ணைத் திறந்துகொண்டு கையெழுத்து இட்டேன். இது பொய் அல்ல மெய்" எண்டு.

தம்பி தங்கவடிவேல், கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட்ட உம்மட குருபக்திய மெச்சிறன். ஆனால்பாரும் அதுக்குப் பிறகு கண்ணை முழிச்சுக் கொண்டு கையெழுத்திட்டதாச் சொல்லுறீர். அப்பிடியெண்டால் நீர் சிந்திக்கத் தொடங்கிட்டீ ரெண்டு அர்த்தம். அப்பிடிச் சுயமாச் சிந்திக்கும் உரிமை உமக்கு இல்லையெண்டு ஏற்றுத்தான் சத்தியக் கடுதாசியில கையெழுத்தே போடுறீர். அதனால நீர் உம்மட சத்தியத்தை மீறிட்டீர். அதோட எனக்குத் தேவை நான் சொல்லுற எல்லாப் பொய்யையும் அப்பிடியே நம்புற வாசகர்கள்தான். சிந்திக்கிறவங்களல்ல. இதுக்கு மேல நீர் "இது பொய்யல்ல மெய்" எண்டு வேற எழுதியிருக்கிறீர். அதாவது உமக்கு பொய்க்கும் மெய்க்கும் வித்தியாசம் தெரியுது. அப்பிடியெண்டால் நான் எழுதிறதிலயும் எது பொய் எது மெய்யெண்டு ஆராயத் தொடங்கிடுவீர். ஆகவே, தம்பி, ஐ ஆம் வெரி ஸாரி, நீர் இன்னும் பொய்யில ஊறிப் புடம்போட்டுக்கொள்ள வேணும். அப்பதான் தேறுவீர். அதுக்கு, எங்கட ரேடியோ, டீவீ, பேப்பர்களெல்லாம் நல்லாப் படியுமெண்டு அட்வைஸ் பண்ணுறன்.

இப்பிடித்தான் பாருங்கோ, இந்தக் காலத்திலயும் பொய்யை நம்பவும், பொய்யைப் பேசவும், பொய்யோடு வாழவும், பொய்யால வாழவும், பொய்ய வாழவைக்கவும் தெரியாமல் கனபேர் நிண்டு தடுமாறினம். நானுந்தான் எத்தினயோ அட்வைஸுகளை அடிக்கடி சொன்னாலும், ஒழுங்கா ஏறுறதாத் தெரியேல்ல.

சரி, இந்தமுறை போட்டிகளுக்கு வந்த விடைகளில பரிசுக்குத் தெரிந்தெடுத்த விடைகளைச் சொல்லி உங்கட நீண்டநாள் ஆர்வத்தைத் தீர்த்திடுறன்.

பரிசுப் போட்டியில முதலாவதுக்கு ஏற்கெனவே பரிசு பெற்ற விடையையும் வென்ற நபரையும் அறிவித்துவிட்டேன்.

இரண்டாவது போட்டியாக, பொய்யைப் போற்றி இருவரிக் கவிதை எழுதும்படி கேட்டிருந்தேன். கன கவிதைகள் வந்தன. தெரிவு செய்யப்பட்ட கவிதை:

ஷஷ பொய்சொல்லி வாழ்வாரே வாழ்வார் - மற்றெல்லார்
மெய் சொல்லி மெலிந்து மடிவர்.

வள்ளுவரையே பொய்யாக்கிப்போட்ட இந்தப் புகழுக்குரிய கவிதையை எழுதிய பொய்யர் யாரெண்டு பார்த்தால் அட அது வேற யாருமில்ல சாட்சாட் மட்டக்களப்பைச் சேர்ந்த அதே தங்க வடிவேல்தான்! தங்கவடிவேல், உங்களுக்குரிய பரிசு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும். (இது பொய்யல்ல... மெய், நம்பவும்.)

மூன்றாவது போட்டியாக, காதில பூ கந்தசாமியை (அதாவது என்னை) அதிகம் சினமூட்டுமாறு 10 சொற்களுக்குள் ஒரு வசை வாக்கியம் எழுதும்படி கேட்டிருந்தேன். கேட்டதுதான் தாமதம் அடேங்கப்பா...! எத்தின கடிதம் பறந்து வந்துச்சுது பாருங்கோ. என்னைத் திட்டித் தீர்க்கிறதில எங்கட வாசகர்களுக்கு எவ்வளவு ஆனந்தமெண்டது இப்பதான் புரிஞ்சுது. சரி, அந்தக் குவியலில பரிசுக்குத் தெரிஞ்செடுத்த வசை வாக்கியம்:

**கடைசி ஒற்றைப்பூ.... கந்தசாமிக்கு மருந்து**
**ஊழிச் சங்கரின் கால் புழுதியடா கழுதை!**

என்னே அருமையான வாக்கியம் பார்தியளோ. எழுதியனுப்பியவர் *மாதகல் இராமலிங்கம் கரிகாலன்.* அது சரி கரிகாலன், காதில பூ கந்தசாமியிண்ட பூத்தான் கடைசிப்பூவெண்டு என்னெண்டு தீர்மானிச்சியளெண்டு சொன்னால் நல்லது. பட் எனிவே, உங்கட காதத் தேடி பூ வந்து சேரும்.... சொரி சொரி, உங்கட விலாசம் தேடி பரிசு வந்து சேரும்.

நான்காவது போட்டி, ஒரு பொய்யை மெய்யாக்க சிறந்த வழி என்ன எண்டு கேட்டிருந்தன். பலவகைப்பட்ட வழிகள எங்கட வாசகர்கள் தெரிஞ்சு வைச்சிருக்கிறதக் கண்டு வியந்து போனன்.

"ஒரு பொய்யை மெய்யாக்க அதை ஒன்பது பெண்களிடம் அல்லது ஒரு பத்திரிகைக்காரனிடம் கூறு" என்று ஒருவர் எழுதியிருந்தார். அதன் பிற்பாதியை ஏற்றாலும் முற்பாதி அது ஒரு பெண் அடக்கு முறையின் வெளிப்பாடாகத் தெரிந்தது. இப் போட்டிக்கு ஒரு டெக்நிக்கலான பதிலே பரிசுக்குரியதாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளது. அது:

**பொய்யை மெய்யாக்க 'பா' வை 'ம' ஆக்கவும்.**

புரிகிறதா. புரியும்வரை மூளையைக் கசக்கவும். புரிந்துவிட்டால் அடுத்த போட்டிக்கு ட்ரை பண்ணவும். *பரிசுக்குரியவர் நுகேகொடையைச் சேர்ந்த இ. லிப்னி.*

நன்றி அடுத்த வாரம் சந்திப்போம்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)




## அடை காக்கும் எந்திரம்

→ **கோ**ழிகள் இல்லாமல் அவை இட்ட முட்டைகளை அடைகாத்துக் குஞ்சுகள் பொரிக்க வைக்கும் இயந்திரம் ஒன்றை இங்கிலாந்து நாட்டவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இலகுவாக இயக்கவல்லதும், அதிக மின்சாரம் தேவைப்படாததுமான இந்த இயந்திரத்தின் மூலம் 30 முதல் 80 முட்டைகளை ஒரே தடவையில் குஞ்சு பொரிக்க வைக்க முடியும்.

சாதாரணமாக ஒரு கோழியால் 15 முட்டைகளுக்கு மேல் அடை காத்துக் குஞ்சு பொரிக்க முடியாது. ஆனால் இந்த இயந்திரத்தின் மூலம் 80 முட்டைகளை அடைகாக்கும் இயந்திரத்தால் சிறிய அளவில் கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்த இயந்திரத்தை ஒரு கார் பட்டரி மூலம் இயக்கி முட்டைகளை வைத்து அடை காத்துக் குஞ்சு பொரிக்க முடியும். ■






## ஐம்பதிலும் ஆசை

↓ 'ஐம்பதிலும் ஆசை வரும்', 'ஆசைக்கு வயசில்லை', 'மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை' போன்றவை இவர்கள் இருவருக்கும் சரியாகப் பொருந்தும்.

'வயதானால் என்ன எமக்கும் பருவ வயதினர் போல் ஆசை இருக்கக் கூடாதா என்ன?' என்று கேள்வி கேட்கும் இந்த தம்பதியினரின் வயது 50ஐத் தாண்டியவர்கள்.

இளவயதினரைப் போல் உடலெங்கும் பல்வேறு வடிவங்களில் பச்சை குத்திக் கொண்டு, அவர்களைப் போலவே ஆடை அணிந்து வேட்டன் ஃபாஷனில் முடியலங்காரத்தையும் செய்து கொண்டு காட்சியளிக்கின்றார்கள் இவர்கள்.

"மனதளவில் என்றும் இளமையாக இருக்கும் நாங்கள் உடலளவில் முதுமையை முறியடித்து, இளமையைக் கொண்டு வரத்தான் இந்த மாதிரியான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறோம்" என்கின்றனர் இந்த பிரிட்டிஷ் தம்பதியினர்.



↓ **வீதி**யின் நடுவே பென்னம் பெரிய கண்ணாடியைப் பொருத்தி விட்டிருக்கிறார்களே எதற்கு என்கிறீர்களா?


வீதி விளக்குகளுக்குப் பதிலாகப் போடப்பட்டிருக்கும் வீதிக் கண்ணாடிதான் இது.

கண்ணாடி என்றால் முகம் பார்க்க என்ற காலம் போய், இப்போது வழிகாட்ட வந்து விட்டது.

வாகனங்களில் இருப்பது போன்ற வட்ட வடிவக் கண்ணாடிகளை பெரிய அளவில் சாலையின் நடுவே இரும்புக் கம்பம் நட்டு பொருத்தி விடுகிறார்கள்.

சாலையில் வரும் வாகனங்கள் இந்த வழிகாட்டும் கண்ணாடி முன் நின்று, சாலையில் தாம் செல்ல வேண்டிய பக்கத்தை கண்ணாடி மூலம் பார்த்து விட்டுத்தான் செல்ல வேண்டும்.

ஜப்பான் நாட்டில் தான் இந்த வழிகாட்டும் கண்ணாடி மூலம் போக்குவரத்து விதிகள் அமைக்கப்பட்டுள்ளன.



## வீதிக் கண்ணாடி



## 1வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி

16 ✲ 06 ✲ 2001



[illegible]



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 11A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவயில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் [illegible] ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது